www.tamilarangam.net

இதழ் 114
ஜன.23-பெப்.05, 1997
விலை 10.00

சரிநிகர்
SARINIHAR

# சரிநிகர்

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

**உனது வழி**

படிப்பானேன் பார்ந்து? படித்துக் குரல்வளையை
கடிப்பானேன்? என்றன் கழநாயே – துடிப்பான
குரல்வளைக்கேன் போனாய்? குடைமைமட்டும் பிடுங்கிவிட்டு
வாலன்றோ உனது வழி

–சுழமோகம்





## 'தீர்வுக்குத் தடை அரசே!'

-டக்ளஸ்

## குஜ்ரால் வருகை!

## முஸ்லிம் கட்சிக்குள் இழுபறி?






## முஸ்லிம்கள் எதிரிகளே அல்ல!



# பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கு!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




சரிநிகர்

இருவாரங்களுக்கொருமுறை

''சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே'' - பாரதி

ஆசிரியர் குழு
ச.பாலகிருஷ்ணன்
சிவகுமார்
சரவணன்
எம்.கே.எம்.ஷகீப்
அரவிந்தன்
சி.செ.ராஜா
சிவகுருநாதன்
சேரன்

வடிவமைப்பு
ஏ.எம் றஷ்மி

வெளியிடுபவர்
ச.பாலகிருஷ்ணன்
18/2,அலோசாலை,
கொழும்பு-03

அச்சுப்பதிவு
நவமக அச்சகம்
334, காலிவீதி,
இரத்மலானை.

ஆண்டுச் சந்தா விபரம்
இலங்கை- ரூபா 300
வெளிநாடு- U.S. $ 50
(தபாற்செலவுட்பட)

காசுக்கட்டளை/காசோலை யாவும் MIRJE என்ற பெயருக்கு எழுதப்படல் வேண்டும்.

எல்லாத் தொடர்புகளுக்கும்
ஆசிரியர்
சரிநிகர்
04,ஜெயரட்ண வழி
திம்பிரிகஸ்யாய
கொழும்பு - 05

தொலைபேசி: 593615
584380
தொலைமடல்: 594229

முன்னைய பிரதிகள் வேண்டுவோர் எழுதுக. கைவசம் உள்ள பிரதிகள் அனுப்பி வைக்கப்படும்.

பிரசுரத்திற்கென அனுப்பப்படும் படைப்புக்கள் திருப்பி அனுப்பப்படமாட்டாது.


## 11 லட்சம்?

1996 ஆம் ஆண்டு சுதந்திர தின விழாவிற்காகச் சுதந்திர சதுக்கக் கட்டடத்தைக் கழுவும் முகமாக மட்டும் 11 இலட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. கட்டிடத்திணைக்களத்தினால் செய்யப்பட்டுள்ள இவ் அபூர்வ கழுவுதல் ஊழியர்களின் விசனத்துக்குக் காரணமாகியுள்ளதாகத் தெரியவருகிறது.

*(ராவய - 19970105)*

○

## மூடு விழா

இலங்கை பூராவும் உள்ள 420 மட்டிலான பாடசாலைகளுக்கு இரண்டு மாதகாலத்தினுள் மூடு விழா நடத்தக் கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகிறது.

50 பிள்ளைகளை விடக் குறைவான எண்ணிக்கை கொண்ட இப் பாடசாலைகளில் அநேகமானவை மிகக் கஷ்டப் பிரதேசங்களில் உள்ளவையாகும்.

இப் பாடசாலைகளில் கல்வி கற்கும் பிள்ளைகள் அண்மையிலுள்ள வேறு பாடசாலைகளில் சேர்க்கப் படவுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

*(லக்பிம - 11970112)*

○

# புலி எப்படி இருக்கும்?

''இது ஒரு உண்மைக்கதை.

எனது நாட்டில் உள்ள ஆரம்பப் பாடசாலை ஒன்றில் நடந்த ஒரு நிகழ்ச்சியை உங்களுக்குச் சொல்கிறேன். மாணவர்களை நோக்கி ஒரு புலியின் படத்தை வரையுமாறு ஆசிரியர் கேட்கிறார். ஒரு புலி எப்படி இருக்கின்றது என்று நீங்கள் உணர்கிறீர்களோ அதை வரையுங்கள் என்பது அவரது கேள்வி.

ஒரு உண்மையான புலியை வரைவதற்கு பதில் ஆயுதமேந்திய ஒரு மனிதனின் உருவத்தை வரைந்திருந்தது ஒரு குழந்தை.

எமது நாட்டு இளம் சிறார்கள் எவ்வளவுக்கு அங்குள்ள நிலைமைகளால் காயப்படுத்தப்பட்டவர்களாக இருக்கின்றார்கள் என்பதற்கு இது ஒரு உதாரணம்!''

- இவ்வாறு கதை சொன்னவர் வேறு யாருமல்ல. பதில் நிதியமைச்சர் பேராசிரியர் ஜி.எல் பீரிஸ் அவர்கள் தான்.

பாரிஸில் நடைபெற்ற இலங்கைக்கு நிதி வழங்கும் நாடுகளின் பிரதிநிதிகளின் மாநாட்டில் இந்தக் 'கதையை' அவர் விட்டிருந்தார்.

இது உண்மையில் நடந்ததா அல்லது பேராசிரியரின் சொந்தச் சரக்கா என்பது தெரியவில்லை. ஆனால், இப்படி ஒரு நிலைமை இங்கு இருக்கிறது என்பது உண்மைதான்.

ஆனால் பேராசிரியர் இன்னொரு கதையையும் சொல்லியிருக்க வேண்டும். அதுதான் அவரும், அவரது அரசாங்கமும், ஆங்கில சிங்களப் பத்திரிகைகளும் சேர்ந்து உருவாக்கியுள்ள நிலைமை பற்றிய கதை.

அதாவது, தமிழரைப் படமாக வரையுமாறு ஒரு அரசியல்வாதியை அல்லது ஆங்கில சிங்களப் பத்திரிகையாளரைக் கேட்டால் அவர் எப்படி வரைவார் என்பது பற்றிய கதை.

நீண்ட நகங்களும், கூரிய பற்களும் கொண்ட ஒரு புலியை வரைந்து அதையே தமிழன் என்று அவர்கள் கூறுவார்கள்.

விஜேசோமா போன்ற கேலிச்சித்திரக்காரர்கள் அந்தப் படத்திற்கு அழகாக ஒரு பொட்டும் வைத்துவிட்டிருப்பார்கள்.

வடக்கில் மட்டுமல்ல, கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் வாழும் தமிழ் மக்களும் கூடப் புலிகள் தான் என்று அறிவிக்கத் தயங்காத ஒரு ஜனாதிபதியின் அமைச்சரல்லவா பீரிஸ் அவர்கள்.

அவருக்கு ஒரு ஆரம்பப் பாடசாலை மாணவன் புலி என்று புரிந்து வைத்திருப்பது எதனை என்பதனை தெரியாமலா இருக்கும்.

ஆனால், அவர் ஒன்றைச் சொல்ல மறந்துவிட்டார்.

அந்த மாணவன் அந்த மனிதனுக்கு ஒரு பொட்டு வைத்திருந்தானா இல்லையா என்பதை அவர் ஏனோ சொல்லவில்லை.

ஒரு வேளை ஆயுதம் ஏந்திய மனிதன் என்றாலே அது தமிழனைத்தான் குறிக்கும் என்பதால், பொட்டுபற்றி கூறுவது அவசியமில்லை என்று கருதினாரோ என்னவோ?

பேராசிரியர் அறியாத ஒரு கதை ஒன்றும் இருக்கிறது.

சமாதானத்தின் பெயரால் வடக்கு கிழக்கில் மனிதர்களை மிருகங்களைப்போல வேட்டையாடிக்கொண்டிருக்கின்ற அரசாங்கம், அங்கு கொல்லப்படும் ஒவ்வொருவரையும் புலி என்று அறிவித்துக்கொண்டிருக்கையில், ஒரு ஆரம்பப் பாடசாலை மாணவன் புலியைக் கேட்டால் மனிதனின் படத்தை கீறுவதில் என்ன ஆச்சரியம் இருக்கிறது.

ஆனால் வடக்கு - கிழக்கிலுள்ள ஒரு ஆரம்பப் பாடசாலை மாணவனிடம் உனது பாடசாலையை வரை என்றால் அவன் ஒரு அகதி முகாமையும், உனது வீட்டை வரை என்றால் அவன் பங்கரையும், காலைக்காட்சியை வரை என்றால் ஹெலிகள் பறக்கும் வானத்தையும், கடற்கரைக் காட்சி வரையச்சொன்னால் துப்பாக்கி ஏந்திய இயந்திரப் படகுகள் ஓடும் கடலையும் வரைவதை அவர் அறிவாரோ என்னவோ?

அவர் அறியாத கதை இது!

பத்துவயது சிறுவனையும் ஆயுதம் தூக்கவைத்த பெருமை கொண்ட இலங்கை அரசின் அமைச்சருக்கு இது புரியாததும் ஒன்றும் ஆச்சரியம் இல்லைதான்!

இங்கே ஆச்சரியப்பட என்னதான் இருக்கிறது?

மனிதனை மனிதனாக மதிக்கிறதை யாராவது கண்டால் சொல்லுங்கள்.

அதுதான் ஆச்சரியமான விடயமாக இருக்கும்!

○

## யாருடைய குரல்?

வடக்கில் நடக்கவிருந்த, உள்ளூராட்சித் தேர்தலை ஒத்திப்போடுமாறு தமிழ்க் கட்சிகள் ஜனாதிபதியைக் கேட்டதும், அவர் மனமிரங்கி ஒத்திப் போட்டுவிட்டு அங்கே ஒரு தேர்தலை சந்திப்பதற்கு தயாராகுமாறு அறிவித்தது பழைய கதைதான்.

புதிய கதை, தமிழ்க் கட்சிகள் யாழ்ப்பாணத்தில் தமது தேர்தல் அலுவலகங்களை திறந்துள்ளன. முதலில் ஈ.பி.டி.பியும் தற்போது புளொட்டும். மற்றைய கட்சிகளும் விரைவில் திறக்க விருப்பதாகக் கேள்வி.

ஈ.பி.டி.பி. அலுவலகத்தைத் திறந்ததும் பெருமளவு புகார்களுடனும் கோரிக்கைகளுடனும் மக்கள் அங்கு குவிவதாக ஈ.பி.டி.பி செய்திகள் தெரிவிக்கின்றன. அந்தப் புகார்களிலும் கோரிக்கைகளிலும் தெரிவிக்கப் பட்டிருப்பவைகள் என்ன என்பது தெரியவில்லை.

ஆனால் நிச்சயமாக 'விரைவிலேயே தேர்தலை வையுங்கள்' என்ற கோரிக்கை அவற்றில் ஒன்றாக இருக்காது என்று நினைக்கின்றேன்.

அங்கு ஒரு தேர்தலை நடாத்த வேண்டுமென்ற அரசாங்கத்தின் நோக்கத்தை - அவ்வாறு நடாத்துவதன் மூலம் அங்கு ஜனநாயகமும் பாதுகாப்பான சூழலும் நிலவுகிறது என்பதை நிரூபிக்கும் நோக்கத்தை - நிறைவேற்றுவதற்கு ஒரு கருவியாக பயன்படுத்தவே இப்போது தமிழ்க் கட்சிகள் அங்கு செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

ஏற்கெனவே பலதடவைகள் கேட்டபோதும் அனுமதி மறுத்த அரசாங்கம் இப்போது இவர்களை அங்கே அனுப்பியிருப்பதன் நோக்கமே அதுதான். நிலைமை வழமைக்கு திரும்பி விட்டது என்று சாட்சி சொல்ல அரசாங்கத்திற்கு இவர்கள் தேவைப்படுகின்றனர்.

தமிழ்க்கட்சிகள் அங்கு போவதன் மூலமாக அங்குள்ள உண்மை நிலைமையை புரிந்து கொள்வது சாத்தியமே. அங்குள்ள மக்கள் வழமையான வாழ்க்கைக்கு திரும்பிவிட்டார்களா என்பதை தெரிந்து கொள்ள இது நிச்சயம் உதவி செய்யும்.

ஆனால் இந்தக் கட்சிகள், தமிழ் மக்களின் உண்மைப் பிரதிநிதிகளாக உண்மையைச் சொல்வார்களா?

ஏற்கெனவே தீவுப்பகுதியை தனது 'கட்டுப்பாட்டுக்குள்' வைத்திருந்த ஈ.பி.டி.பி, தீவுப்பகுதி பற்றி தெரிவித்த தகவல்களுக்கு நேர்மாறான நிலைமைகள் அங்கு இருந்ததாக பத்திரிகைத் தகவல்கள் கூறுகின்றன.

யாழ் நிலைமைப் பற்றிய தகவல்களும் அப்படித்தான் வெளிவருமா? அல்லது அவர்களின் உண்மை நிலையை இக்கட்சிகள் தெரிவிக்குமா?

அங்கு ஒரு தேர்தல் நடாத்தக்கூடிய சூழல் உண்மையாகவே உருவாகி இருக்கிறதா என்று இவை தெரிவிக்குமா? அல்லது தமது கட்சிக்கு 'வாக்குப்போட' போதியளவு தயார் செய்தபின் 'நிலைமை சுமுகம்' என்று அறிவிக்குமா?

இவை இன்று எழுகின்ற கேள்விகள்.

''தமிழ்க் கட்சிகள், தமிழ் மக்களுக்கு சேவையாற்ற முன்வருவார்கள் என்று நம்புவோம்.... நம்பிக்கை ஒன்றைத் தவிர வேறென்ன இருக்கிறது எம்மிடம்'' என்கிறார் பட்டு நொந்த அப்பாவிப் பொதுமகன் ஒருவர்.

என்னவோ, தமிழ்க் கட்சிகள் அரசாங்கத்தின் 'குரலாக' ஒலிக்காமல் தமிழ் மக்களின் குரலாக ஒலித்தால் சரி!

○

## ஆளப்படவோ பிறந்தவர்கள்?

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு வருவோர்க்கு அவரவர்களின் தேவைகட்கமைய குறுகிய கால 'பாஸ்' வழங்கும் முறைமை ஒன்றை விரைவில் நடைமுறைப்படுத்த இருப்பதாக இலங்கையின் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் முடிவு செய்துள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள 'விடுவிக்கப்பட்ட' பிரதேசங்களில் இருக்கும் மக்கள் கொழும்புக்கு வருவதற்காக தமது பெயர் விபரங்களைக் கொடுத்து விட்டு மாதக்கணக்காக காத்திருக்கிறார்கள். அப்படிக் காத்திருந்து கொழும்புக்கு கப்பலில் வருபவர்கள் கொழும்பில் எவ்வளவு நாட்கள் தங்கியிருக்க வேண்டும் என்பதை இப்போது அரசாங்க இராணுவ அதிகாரிகளே தீர்மானிக்கவுள்ளார்கள்.

ஏற்கெனவே இவ்வாறானதொரு நடைமுறை வவுனியாவில் இருப்பது தெரிந்ததே. 'ஒரு நாள் பாஸ்' வழங்கப்படும் வவுனியா புகையிரத நிலையத்தில் பொலிஸ், இராணுவ கெடுபிடிகட்கு மத்தியில் மக்கள் படும் அவஸ்தையை சொல்லி விளக்கத்தேவையில்லை.

அதே நடைமுறை இனி கொழும்பு வரும் யாழ் பயணிகட்கும் விதிக்கப்படும் என்றால், திருமலையில் என்ன நடக்கும் என்பது ஊகிக்கப்படக் கூடிய ஒன்றுதான்.

யாழ்ப்பாணம் விடுவிக்கப்பட்டுவிட்டது என்று பெரிதாக பிரச்சாரம் செய்யும் இராணுவம், அங்கு வடிகட்டியே கப்பலில் ஆட்களை அனுப்பிவைக்கும் இராணுவம், கொழும்பில் தங்கியிருப்பதற்காக இப்படியொரு கட்டுப்பாட்டை விதிக்க முனைவது எதற்காக?

அவர்களது வடிகட்டலையும் மீறி புலிகள் இங்கு வந்து விடுவார்கள் என்று அது அஞ்சுகிறதா?

அல்லது, யாழ் மக்களை யாழ்ப்பாணத்துக்குள்ளேயே முடக்கி வைத்திருக்க அரசாங்கமும் விரும்புகிறதா?

இந்த இராணுவத்தினால் 'விடுவிக்கப்பட' முன்பும் இதேபோன்றதொரு 'பாஸ்' அல்லது 'விசா' வழங்கும் நடைமுறை புலிகளாலும் நடைமுறைப் படுத்தப்பட்டு வந்தது.

அப்போது அவர்களை 'மக்களைச் சிறைவைத்திருக்கிறார்கள்' என்று கூறிய அரசாங்கம் இப்போது தான் செய்வதும் அதுவே என்பதை மறந்து விட்டதோ?

ஒரு வேளை வடக்கு இன்னொரு நாட்டின் பகுதிதான் என்பதை புலிகளைப் போல இராணுவமும் ஏற்றுக்கொண்டு விட்டதோ என்னவோ?

எமக்கெழுகின்ற கேள்வி என்னவென்றால், யாழ்ப்பாணத்தை அப்படி இன்னொரு நாட்டின் பகுதியாக இலங்கை இராணுவமும் ஏற்றுக்கொண்டிருக்கும் பட்சத்தில் அது இப்போது அங்கே நிலை கொண்டிருப்பதனை எப்படி அழைப்பது என்பதுதான்.

'ஆக்கிரமிப்பு' என்ற சொல்தான் பொருத்தமாக தெரிகிறது.

ஏனென்றால், அங்குள்ள மக்களை 'ஆள' இலங்கை இராணுவத்தை விட புலிகளுக்கு அதிகம் பாத்தியதை இருக்கிறது என்கிறார் என்னுடைய நண்பர் ஒருவர்.

'ஆளப்படவே பிறந்தவர்கள்' என்ற எம்மவரின் தலைவிதியை நினைக்க நீண்ட பெருமூச்சு வருகிறது.

○

## சுதந்திரம் எப்போதும் உண்டு!

யாழ்ப்பாணத்திலிருந்து கடிதம் ஒன்று வந்திருந்தது. வரிகள் தாங்கி வந்த செய்திகளை விட அந்தக் கடிதத்தின் வரிகளுக்கிடையில் வெளிப்பட்ட செய்திகள் அதிகம். ''வீட்டுக்குப் போனோம். வீடு மட்டும்தான் இருந்தது. வீட்டிற்குப் பின்னால் இருந்த ஆட்டுக்கொட்டில் இருந்த இடத்தில் கொட்டில் கம்புகள் மட்டும் இருந்தன. திரும்பி வந்து விட்டோம். அவையளும் வந்து போற இடம் அது. அங்கை இருக்கிறது பயம்''

''காசுதான் இஞ்சை பிரச்சினை. எத்தினை நாளைக்குத்தான் ஆரிட்டையும் கடன் வாங்கிறது. வாங்கவும் தாறதுக்கும் ஆக்களிட்டை காசு இருக்கோணுமே''

000

கொழும்பிலே கற்பகத்தில் பெயர் பதிந்து விட்டு ஊருக்கு போக கப்பலை எதிர்பார்த்து நிற்கும் நண்பர் ஒருவர் சொன்னார்:

''சண்டை நடக்கேக்கைதான் வந்தனாங்கள். மாட்டுப்பட்டுப்போனம். இப்ப யாழ்ப்பாணம் பிடிப்பட்டது நல்லது எண்டு கதைக்கினம். ஆனால் இப்பதான்

→ 18

www.tamilarangam.net



# நட்ட நடுக்கடலில்...

நத்தார் தினத்துக்கு முதல் நாள் நள்ளிரவு. ஜியோஹாம் என்ற கப்பல் முன்னூறுக்கு மேற்பட்ட பயணிகளை ஏற்றிக் கொண்டு சிசிலித்தீவின் கடல் எல்லைக்கும் கிரேக்கத்தின் கடல் எல்லைக்குமிடையே சென்று கொண்டிருக்கிறது. விடிந்தால் நத்தார். பயணம் செய்து கொண்டிருந்தவர்களில் ஒரு சில பாகிஸ்தானியர்களையும், இந்தியர்களையும் தவிர பெரும்பாலானோர் தமிழர்கள்; இலங்கைத் தமிழர்கள். 97 புதுவருடத் தினத்தன்று தாம் விரும்பிய ஏதோவோர் ஐரோப்பிய நாடொன்றில் அடைக்கலம் கோரிவிடலாமென்பது அவர்களுடைய நம்பிக்கை. அது பிரான்ஸாகவோ, சுவிட்சர்லாந்தாகவோ, ஜேர்மனியாகவோ எதுவாகவுமிருக்கலாம். இதுகாலவரை தங்கள் சொந்த நாட்டில் அவர்கள் அனுபவித்து வந்த துன்பங்களுக்கும், துயரங்களுக்கும் ஒரு முடிவு வந்து விட்டாற் போன்ற நம்பிக்கை!

○○○

இனி பொம்பர் சத்தத்தைக் கேட்டு அரண்டு எழுந்திருக்கத் தேவையில்லை. பங்கருக்குள் ஓடி ஒளியத் தேவையில்லை. அல்லது அடையாள அட்டையை றோட்டில் மறிக்கிற ஒவ்வொரு காக்கிச் சட்டைக்கும் காட்டத் தேவையில்லை. அடையாள அட்டையைக் கொடுத்து விட்டு ஒரு புழுவை பார்ப்பது போன்ற அவனது பார்வைக்கு கூனிக்குறுகி நிற்கத் தேவையில்லை. நாய்கள் குரைக்கும் போதெல்லாம் எந்தக் காவல் நாய் வந்து அழைத்தோ கடத்தியோ போகப் போகுதென்று பயப்படத்தேவையில்லை. எந்தத் தவறும் இழைக்காமலே மூத்திரமும், பீடியும் நாறும் கொழும்பின் ஏதாவது ஒரு பொலிஸ் நிலையக் கூண்டுக்குள் வேர்வை பிசுபிசுக்க அச்சத்துடன் கதவு திறப்பதற்காய் காத்திருக்கத் தேவையில்லை.

இவ்வாறான அவர்களுடைய எல்லா நம்பிக்கைகளும் சிதறுமாப் போல் நடந்து முடிந்து விட்டது அந்தச் சம்பவம்.

○○○

காணியை ஈடு வைத்தும், நகை நட்டை விற்றும், கடன்பட்டும் என மொத்தமாக ஐந்து லட்சத்துக்கும் மேல் செலுத்தியிருந்தனர் அந்தப் பிரயாணத்துக்கு.



கப்பல் விபத்தில் உயிர் தப்பி கிரேக்கப் பொலிசாரால் சிறைவைக்கப்பட்டுள்ளோரில் சிலர்

தான் ஐந்து வருடங்களுக்கு மேலாக சேமித்த பணத்தைக் கொண்டு ஐந்து லட்சம் வரை வழங்கியதாகச் சொல்கிறார் இலங்கையிலிருந்து பிரயாணம் செய்த கணபதி பரம்சோதி.

கொழும்பிலிருந்து எகிப்தின் கெய்ரோ விமான நிலையத்திற்கு அழைத்து வரப்பட்ட இவர்கள் அங்கிருந்து அலெக்ஸாந்திரியா துறைமுகத்துக்கு அழைத்து வரப்பட்டார்கள். அலெக்ஸாந்திரியாவிலிருந்து கிரேக்கத்துக்கும் கிரேக்கத்திலிருந்து சிசிலித்தீவின் ஊடாக இத்தாலிக்குள் நுழைவதே அவர்களுடைய பிரயாண வழி. கிரேக்கத்திலிருந்து சிசிலியை நோக்கிச் செல்கையிலேயே 2,3 தடவை வெவ்வேறு கப்பல்களில் மாறி ஏற வேண்டியதாயிற்று.

கப்பலினூடான இந்த நீண்ட பிரயாணத்தின் போது அவர்களுக்கு வழங்கப்பட்டதெல்லாம் நாள் ஒன்றுக்கு ஒரு துண்டு பாணும் அரைக்குவளை தண்ணீரும் தான் என்கிறார் அக்கப்பலில் பிரயாணம் செய்து உயிர் தப்பிய அமீர் மக்பூல். -இந்தியாவைச் சேர்ந்தவர். மிருகங்கள் போல் பலவாரங்கள் தாங்கள் அக்கப்பலினுள் அடைத்து வைக்கப் பட்டதாகவும் அவர் சொல்கிறார்.

○○○

நள்ளிரவுக்குச் சற்று அப்பால் கப்பல் நடுக்கடலில் நிறுத்தப்பட்டது. கடல் உறை குளிரிலிருந்தது. அலைகளோ மிகப்பெரிதாக எழுந்து நீரை வாரியிரைத்தன. நூறுபேர் மட்டுமே ஏறக்கூடிய சிறிய கப்பலொன்று இந்தப் பெரிய கப்பலுடன் இணைக்கப்பட்டது. கப்பலிலிருந்த எல்லோரையும் - முன்னூறுக்கு மேற்பட்டோர் - கயிற்றின் மூலம் அச்சிறிய கப்பலினுள் இறங்குமாறு பணித்தான் மாலுமி. நூறு பேருக்கு மேல் இறங்கியாயிற்று. அச்சிறிய கப்பலினுள் ஒரே நெரிசல். மீதிப்பேர் இறங்க முடியாமல் திண்டாடினர். மாலுமியோ இறங்குமாறு கூச்சலிட்டான். மேலும் கொஞ்சப்பேர் இறங்கினார்கள். அளவுக்கதிகமான ஆட்கள்; நெரிசல்! இடமில்லாததால் 'ஏனையோர் இறங்க மறுக்கவே மாலுமி துப்பாக்கி முனையில் மிரட்டினான்' என்கிறார் அஹமட் சஹாப் எனும் பிரயாணி.

அச்சிறிய கப்பல் புறப்பட்டு சிறிது தூரம் சென்றிருக்கும். அதிலிருந்தவர்கள் அபயக் குரல் எழுப்பினார்கள். துவாரம் ஒன்றினூடாக கப்பலினுள் தண்ணீர் வேகமாக உட்புகுந்து கொண்டிருந்தது. மாலுமி கப்பலை பெரிய கப்பலை நோக்கித் திருப்பி விட்டான். தண்ணீர் எதிர்பார்த்ததற்கும் வேகமாக உட்புகவே மாலுமி அதிவேகமாகக் கப்பலைச் செலுத்தினான். என்னே துரதிர்ஷ்டம்! அச்சிறிய கப்பல் பெரிய கப்பலுடன் மோதி இரண்டாகப் பிளந்தது.

இரண்டு கப்பல்களிலும் உயிர்காக்கும் சாதனங்கள் போதியளவில் இருக்கவில்லை. காப்பாற்ற வேண்டும் என்ற அக்கறையும் இருக்கவில்லை. பலருக்கு நீந்தவும் தெரியவில்லை. அலையெறியும் அக்கடலில் நீந்துவதும் சாத்தியமில்லை. மாலுமியோ அசட்டையாகக் கப்பல் மூழ்குவதைப் பார்த்தபடியே நின்றிருந்தான். மூழ்கிக்கொண்டிருந்த கப்பலிலிருந்தவர்கள் எழுப்பிய அபயக்குரல் அக்கடல் பிராந்தியம் முழுவதுமே எதிரொலித்தது. ''நாங்கள் செய்வதறியாது பார்த்துக் கொண்டிருந்தோம். ஏன், என்னுடைய சகோதரன் நீரில் மூழ்குவதையே நான் என் கண்களால் பார்த்தேன்'' என்கிறார் பாகிஸ்தானைச் சேர்ந்த அஹமட் சஹாப்.

○○○

கப்பலிலிருந்த முன்னூறுக்கு மேற்பட்டோரில் 280பேர் இறந்திருக்கின்றனர். இலங்கையைச் சேர்ந்த 149பேரில் 57பேர் மட்டுமே கிரீஸைச் சென்றடைந்துள்ளனர்.

○○○

அகதிகளாக ஐரோப்பிய நாட்டை நோக்கி ஓடும் இந்த ஓட்டத்தில் கடலிலும், ஆற்றிலும், எண்ணெய்த் தாங்கிகளுக்குள்ளுமாக நிகழ்கின்ற மரணங்கள் பற்றிய சேதிகள் அவ்வப்போது வந்தவண்ணம் தான் உள்ளன. 94 ஒகஸ்டில் போலந்து ஜேர்மனி எல்லையைக் கடப்பதற்காக நைச (Neisse) என்ற எல்லையோர ஆற்றில் இறங்கியவர்களுள் எட்டுப்பேரை ஆறு காவு கொண்டது. இதில் இருவர் பெண்கள். எண்ணெய்த் தாங்கி ஒன்றினுள் ஒளிந்து எல்லையைக் கடக்க முற்பட்ட 18 பேர் மரணமடைந்த சம்பவமும் அதன் பின்னர் நடந்தது தான். ஆனால் மிகப் பெரியளவில் நடைபெற்றது இது தான் முதல் தடவை. இந்த உண்மை நிலவரத்தை தங்களால் நம்ப முடியவில்லை என்கின்றனர் இத்தாலிய மக்கள்.

○○○

இச்சம்பவத்தில் கப்பலின் மாலுமி உட்பட எட்டுப் பேருக்கெதிராக வழக்குத்தாக்கல் செய்திருக்கிறது கிரேக்கப் பொலிஸ். இலங்கைப் பொலிஸாரோ இங்கிருந்து அனுப்பிய பயண முகவர்களான திருநாவுக்கரசு சற்குரு, கணபதிப்பிள்ளை ரமேஷ், நடராஜா விநாயகமூர்த்தி

—▷18

**அருபன்**

# முஸ்லிம் கட்சிக்குள் இழுபறி?

ஸ்ரீலங்கா முஸ்லிம் கட்சி முஸ்லிம்களுக்கான அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுள் மூன்றாவது கட்சியாகும். இப்போது இக்கட்சிக்குள் ஏற்பட்டிருக்கும் உள்கட்சி அதிகாரப் பூசலானது இக்கட்சியின் தலைமைப்பதவிக்கு இரு அணிகள் உரிமை கொண்டாடும் நிலைவரை கொண்டு சென்றிருக்கிறது. சேகுஇஸ்ஸதீன் தலைமையிலான ஒரு அணியும், அப்துல் றசூல் தலைமையிலான ஒரு அணியும் முஸ்லிம் கட்சிக்கு உரிமை கொண்டாடும் நிலைமையில் விஷயம் நீதிமன்றம் வரை போகப் போகிறது.

சேகு இஸ்ஸதீன் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் இரண்டாவது தலைவராக இருந்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் வளர்ச்சியில் அதிக பங்களிப்பைச் செய்தவர். பின்னர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரஃபுடன் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகளின் கராணமாக முஸ்லிம் காங்கிரசிலிருந்து வெளியேற்றப்பட்டவர். அப்துல் றசூலும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் மூன்றாவது நிலை தலைவர்களுள் ஒருவராக இருந்து வெளியேறியவர்.

பிரேமதாசவின் ஜனாதிபதிக் காலத்தில் பிரேமதாசவுக்கு எதிராக கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத்தீர்மானத்தின் போது பிரேமதாசவை ஆதரிக்கக் கூடாது என்ற சேகு இஸ்ஸதீனின் கருத்தே அஷ்ரஃப்புக்கும் சேகுஇஸ்ஸதீனுக்கும் முரண்பாடு வளர காரணமாகவிருந்தது. அந்நேரம் முஸ்லிம் காங்கிரசில் இருந்த அப்துல் றசூல் பிரேமதாசவை ஆதரிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருந்தார். இதனால் முஸ்லிம் காங்கிரசில் இருந்து சேகுஇஸ்ஸதீன் வெளியேற்றப்பட்டவுடன் முஸ்லிம்



சேகு இஸ்ஸதீன்

காங்கிரசின் தவிசாளராக அப்துல் றசூல் நியமிக்கப்பட்டார். வடக்கு கிழக்குக்கு வெளியே முஸ்லிம் காங்கிரஸ் 1993ம் ஆண்டு நடைபெற்ற மாகாண சபைத்தேர்தலில் தனித்துப்போட்டியிடத் தீர்மானித்ததால் - குருநாகல் மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியில் சேர்ந்து போட்டியிட்டு தோல்வியடைந்தார். 1995இறுதிப் பகுதிகளில் தேர்தல் ஆணையாளரால் அங்கீகரிக்கப்பட்ட முஸ்லிம் கட்சியில் சேகு இஸ்ஸதீன் கட்சியின் ஸ்தாபகர் ஆகவும் அப்துல் றசூல் கட்சியின் தலைவராகவும் செயல்பட்டார். கலைக்கப்பட்ட வடகிழக்கு மாகாண சபையின் உறுப்பினர்களான ஜவாத் மரைக்கார் பொதுச் செயலாளராகவும் தவிசாளராக மாகாண சபை உறுப்பினர் பதுருதீன் அவர்களும் நியமிக்கப்பட்டனர்.

முஸ்லிம் கட்சியின் யாப்பின் பிரகாரம் அதி அசாதாரணமான நிலைமைகளில் எந்தவொரு அங்கத்தினரையும் இடைநிறுத்தம் செய்ய கட்சியின் தலைவருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அவ்வதிகாரத்தை தலைவர் பிரயோகிக்கும் போது கட்சியின் தலைமைத்துவக்குழுவுக்கு அறிவிக்க வேண்டுமெனவும், வலியுறுத்தப்படுகிறது. தலைமைத்துவக் குழுவுக்கு அறிவிக்காமல் 13/12இல் பொதுச் செயலாளரையும் கட்சியின் ஸ்தாபகர் சேகுஇஸ்ஸதீனையும் இடைநிறுத்தி உள்ளதாக அறிவித்திருக்கிறார். இச்சூழ்நிலையில் முஸ்லிம் கட்சியின் ஸ்தாபகர் சேகுஇஸ்ஸதீன் தலைமையிலான தலைமைத்துவக் குழு கட்சியின் தலைவர் அப்துல் றசூலை தலைமைப்பதவியிலிருந்தும் கட்சியின் அங்கத்துவ பதவியிலிருந்தும் இடைநிறுத்தி உள்ளதாக அறிவித்திருக்கின்றனர்.

முஸ்லிம் கட்சிக்குள் ஏற்பட்டிருந்த முரண்பாடுகள் இவ்விடைநிறுத்தல்களால் ப்கிரங்கத்திற்கு வந்திருக்கிறது. இந்த வருட ஆரம்பத்தில் அடுத்த நிர்வாகக்குழு தெரிவு செய்யப்படுவதற்கு மகாநாடு கூட்டப்படும் போது அப்துல் றசூல்



அப்துல் றசூல்

தலைவராக வருவதற்கு எந்த வாய்ப்பும் இல்லாத நிலையில் தனது தலைமைப்பதவியை காப்பாற்றிக்கொள்வதற்காக அப்துல் றசூல் இப்படி நடக்க முற்பட்டார் என்கிறார் சேகு இஸ்ஸதீன். முஸ்லிம் கட்சியை பலவீனப்படுத்துவதற்காக முஸ்லிம் கட்சியின் எதிராளிகள் அப்துல் றசூலை பயன்படுத்துவதாகவும் சேகு இஸ்ஸதீன் குற்றம் சாட்டுகிறார். அப்துல் றசூல் அவர்களோ முஸ்லிம் கட்சியை தவறான வழியில் சேகு இஸ்ஸதீன் நடாத்த முற்படுகிறார் எனத்திருப்பிக் குற்றம் சாட்டுகிறார். வடக்கு கிழக்கு முஸ்லிம்களுக்காக உருவாக்கப்பட்ட முஸ்லிம் கட்சியில் வடகிழக்கை சாராத எந்தவிதமான அரசியல் தொடர்பும் இல்லாத ஒருவர் தலைவராக இருப்பது வடகிழக்கு முஸ்லிம்களின் பிரச்சினைகளில் முஸ்லிம் கட்சியின் நிலைப்பாடு தவறான பாதைக்கு திசைதிருப்பப்படுவதற்கு ஏதுவாக இருக்கும் என்கிறார் கிழக்கைச் சேர்ந்த அரசியல்வாதி ஒருவர். முஸ்லிம் காங்கிரசினர் முஸ்லிம் கட்சிக்குள் ஏற்பட்டிருக்கும் உட்பூசலால் சந்தோசத்தில் திளைத்து நிற்கின்றனர். இவ்வளவு விரைவில் இப்படியொரு உட்கட்சிப் பூசலை எதிர்பார்க்கவில்லை முஸ்லிம் கட்சி ஆதரவாளர்கள்.

தலைமைத்துவக் குழுவின் பெரும்பான்மையான உறுப்பினர்கள் சேகுஇஸ்ஸதீனுடன் இருப்பதாக அப்துல் றசூல் நம்பியதன் விளைவாக தலைமைத்துவக் குழு ஏனைய உறுப்பினர்களான நிலாம் றஸ்ஸாக், பதுருதீன் லியகத் அலிகான் ஆகியோரையும் இடைநிறுத்தியுள்ளார். இதனால் முஸ்லிம் கட்சியின் அடுத்த தலைவராக பழைய தலைமைத்துவக்குழுவால் சேகுஇஸ்ஸதீன் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். ஆனால் முஸ்லிம் கட்சியின் சட்ட ரீதியான உரிமை யாருக்கு என்பதை தீர்மானிக்கப்போவதில் முக்கிய பங்காற்ற இருப்பது நீதிமன்றம் தான்.

*- அம்ரிதா*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 'கூட்டணியும் பிரபாகரனும் தமிழ் மக்களின் ஆதரவை துஷ்பிரயோகம் செய்து விட்டார்கள்!'

**-டக்ளஸ் தேவானந்தா**

''பலஸ்தீன - இஸ்ரேல் ஒப்பந்தமாக விருந்தாலும், நெல்சன் மண்டலோ - டி கிளார்க் ஒப்பந்தமாக விருந்தாலும் எந்த ஒப்பந்தமாக விருந்தாலும் அதற்கு ஆதரவும் இருக்கும் எதிர்ப்பும் இருக்கும்! எல்லோருடைய ஆதரவையும் பெற்றுத்தான் நிறைவேற்ற வேண்டும் என்பது கதைப்பதற்கு இனிமையாக இருக்கலாம். அது நடைமுறையில் சாத்தியப்படாது. சொந்த அனுபவங்களில் கூட இதனை நாங்கள் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறோம்.

ஆனபடியால் இவ்விரு கட்சிகளும் தேசியப் பிரச்சினைகளில் ஒரு முடிவுக்கு வரல் வேண்டும். அல்லது ஆட்சி அதிகாரத்தில் உள்ள கட்சி தமிழ் பேசும் மக்களின் தலைவர்களுடன் பேசி ஒரு இணக்கம் கண்டு உடனடியாக ஒப்பந்தங்களை அமுல்படுத்த வேண்டும். இல்லாவிட்டால் பண்டா - செல்வா, டட்லி - செல்வா ஒப்பந்த காலகட்டங்களிலும் அதற்குப் பின் வந்த கால கட்டங்களிலும் சொந்த அரசியல் இலாபங்களுக்காக ஐ.தே.கவும், பொ.ஐ.முயும் மாறி மாறி செயற்பட்டது போல் தான் நடந்து கொண்டிருக்கும்.'' என்கிறார் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா.

சந்திப்பு - எம். பௌஸர்



**அண்மையில் நீங்கள் யாழ்ப்பாணம் சென்று வந்தீர்கள். யாழ்ப்பாணத்தின் இன்றைய நிலை பற்றிச் சொல்லுங்கள்?**

யாழ்ப்பானத்தில் குறுகிய நாட்கள் நான் இருந்தாலும் பல்வேறுபட்ட சமூகப்பிரதிநிதிகள், மக்களுடன் கலந்துரையாடினேன். அதிலிருந்து எனக்கு தெளிவாகப் புரிந்த செய்தி இதனை மக்கள் ஒரு தற்காலிக விடுதலையாகவே கருதுகிறார்கள் என்பதாகும். முதலில், புலிகள் ஆயுதங்களுடன் இருந்தார்கள். இப்போது சிங்கங்கள் ஆயுதங்களுடன் இருப்பதாகவே மக்கள் கருதுகின்றனர். புலிகள் அங்கு இருக்கும் போது மக்கள் எதிர்கொண்ட பிரச்சினைகள் வேறு, படைகள் அங்கு இருக்கும் பொழுது மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் வேறு. புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த பொழுது மக்களுக்கு கருத்துச் சுதந்திரம், ஜனநாயக சுதந்திரம் இருக்கவில்லை. அவ்வாறான சுதந்திரங்களை அனுபவிக்க விரும்பியவர்கள் காணாமல் போயினர். வரி அறவிடல், மக்களிடம் பலாத்காரமாக வளங்களைப் பெற நிர்ப்பந்தித்தமை ஆகியவற்றை பிரதானமாகக் கூறலாம். படைகளின் கட்டுப்பாட்டில் இருக்கும்போது குண்டுவீச்சு ஷெல்லடி போன்றவற்றைக் காண முடியவில்லை. ஆனால் பல்வேறு வழிகளில் தனிமனித சுதந்திரம் ஜனநாயக சுதந்திரம் அடக்கப்பட்டும் மறுக்கப்பட்டும் இருக்கும் சூழல் காணப்படுகிறது. மனித உரிமைமீறல்களும் இருக்கின்றன. புலிகளுடைய காலகட்டத்தில் யாழ்ப்பாணத்தில் மக்கள் ஊருக்குள் நடமாடக் கூடிய சூழல் இருந்தது. இன்று படையினரின் கட்டுப்பாட்டில் மக்கள் ஊருக்குள் நடமாட முடியாத சூழல் காணப்படுகிறது.

நான் அங்கு மக்களுடன் உரையாடிய நேரத்தில் இன்னாரு விடயத்தையும் தெளிவாகப்புரிந்துகொள்ளக் கூடியதாகவிருந்தது. முன்னைய காலகட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி ஜனநாயக ரீதியாக செயற்பட்டு தமிழ் மக்களுடைய பேராதரவை பெற்றிருந்தது. ஆயினும் அவர்கள் அதனை தங்களுடைய விடுதலைக்கு சரியாகப் பயன்படுத்தத் தவறி விட்டனர். எங்களை அவர்கள் கைவிட்டு ஓடிவிட்டனர். அடுத்து பிரபாகரனுக்கு தமிழ் மக்களின் பேராதரவு இருந்தது. அந்த ஆதரவை, தளத்தை பிரபாகரன் துஷ்பிரயோகம் செய்து விட்டதாக மக்கள் கருதுகிறார்கள். அதாவது தங்களின் அப்பாவித்தனத்தை, நம்பிக்கையை பிரபாகரன் சூறையாடி விட்டார் எனக் கருதுகின்றனர். தாங்கள் பிரபாகரனுக்கு கொடுத்த ஆதரவைக் கொண்டு பிரபாகரன் எம்மைக் குப்புற வீழ்த்தி விட்டார் என்ற உணர்வுகள், அபிப்பிராயங்கள் யாழ்ப்பாணத்தில் நான் சந்தித்த மக்களிடம் பரவலாகக் காணப்படுகிறது. நான் அங்கு மக்களிடம் சொன்னேன். ''உழுதது போதும், இனி விதைப்போம்'' என்று. தொடர்ந்தும் நாம் உழுது கொண்டிருக்க முடியாது!

அடுத்து யாழ்ப்பாணத்தில் மக்களின் உடனடிப்பிரச்சினைகளாக பதினொரு விடயங்களை இனம் காணக்கூடியதாக விருந்தது. இப்பிரச்சினைகளுக்கு ஒரு குறுகிய காலத்தினுள் தீர்வு காணப்படல் வேண்டும். உணவு விநியோகம், மருத்துவ வசதி, சுகாதார வசதி, போக்குவரத்து, கல்வி, பாதுகாப்பு, கருத்துச் சுதந்திரம், அடிப்படை மனித உரிமைகள், கள்ளச் சந்தை பதுக்கல், நியாயமற்ற விலையேற்றம் ஆகியவற்றை ஒழித்தல், அரச அதிகாரிகளின் குளறுபடிகளும்நிர்வாகச்சீரக்கமும், விவசாய உற்பத்தி துறையை ஊக்குவித்தல், தொலைத்தொடர்பு, தபால் சேவை, மின்சார வசதி, வணக்கஸ்தலங்களை மீட்டெடுத்தல், யுத்தத்தால் மக்களுக்கு ஏற்பட்ட இழப்பீடுகளுக்கு நஷ்டஈடு வழங்கல், இதைவிட புலிகளால் துரத்தப்பட்ட யாழ் முஸ்லிம்களை விரைவில் மீளக்குடியேற்றல் போன்ற விடயங்கள் உடனடியாக நிறைவேற்றப்படல் வேண்டும் என்கிறேன்.

**அரசாங்கம் யாழ்ப்பாணத்தில் உள்ளூ ராட்சித் தேர்தல் நடாத்துவது தொடர்பாய் உங்கள் கட்சியின் நிலைப்பாடு என்ன?**

நாங்கள் யாழ்ப்பாணம் போனது அரசியல் வேலைகளுக்காக அல்ல. நாங்கள் அங்கு போனதன் பிரதான நோக்கம் யுத்த சூழலில் சிக்கி இருக்கும் மக்களின் சுமைகளை நீக்குவதுதான். ஆரம்பத்தில் நாங்கள் தீவுப் பகுதிக்குப் போய் அங்குள்ள மக்களுக்கு அடிப்படை வசதிகளை எப்படி பெற்றுக் கொடுக்க முற்பட்டோமோ அதே மாதிரியான ஒரு நோக்கத்துடன் தான் நாங்கள் குடா நாட்டின் பிரதான நிலப்பரப்புக்குப் போய் இருக்கிறோம்.

இதற்கு அடுத்த கட்டமாக மக்களுடைய நாளாந்த பிரச்சினைகள் தீர்ந்த பிறகுதான் நாங்கள் உள்ளூராட்சி தேர்தலில் கலந்து கொள்ளலாம் அல்லது உள்ளூராட்சித் தேர்தல் வைக்கப்படல் வேண்டும் என்ற அபிப்பிராயத்தில் இருக்கிறோம். இன்றைக்கு அரசியல் உரிமைப் பிரச்சினை தீவிரமாக இருக்கும் காலகட்டத்தில் உள்ளூராட்சி சபையை ஒரு அதிகாரமற்ற சபையாகவே கருதுகிறோம். வீதி திருத்தவும், மின்குமிழ்கள் போடுவதற்கும்தான் அச்சபை போதுமானதாகவிருக்கும். இன்று அத்தேவைகள் இருந்தாலும் கூட மக்கள் இன்று உச்சமாக எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு உள்ளூராட்சி அதிகாரங்கள் மூலம் தீர்வு காண முடியாது! ஆனபடியினால், எங்களுக்கு உள்ளூராட்சி தேர்தலில் கலந்து கொள்ளும் நோக்கம் இப்போது கிடையாது!

**தமிழ்,முஸ்லிம் மக்களுடைய பிரச்சினைக்கான தீர்வில் இந்நாட்டில் உள்ள இரு பெரும்பான்மையினக் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியினதும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினதும் நிலைப்பாட்டைநீங்கள் எப்படிப் பார்க்கிறீர்கள்?**

தமிழ் பேசும் மக்களுடைய பிரச்சினையில் மாத்திரமல்ல,இலங்கையின் ஏனைய தேசியப் பிரச்சினைகளிலும் கூட இவ்விரு கட்சிகளும் ஒருமித்து செயற்பட்டதாக வரலாறு இல்லை. உதாரணமாக ஐ.தே.க. மக்களுக்கு குளிர்ந்த நீர்தான் கொடுக்க வேண்டும் என்ற தீர்மானத்திற்கு வந்தால், பொ.ஐ.மு. சொல்லும் சுடுநீர்தான் கொடுக்க வேண்டும் என்று. ஐ.தே.க தேநீர் கொடுப்போம் என்றால் பொ.ஐ.மு. சொல்லும் கொக்காகோலா கொடுப்போம் என்று. இதுதான் அவர்களுடைய கடந்த கால செயற்பாடாக இருந்திருக்கிறது.

ஜே.ஆர்.ஜெயவர்த்தன இலங்கை - இந்திய ஒப்பந்த நேரத்தில் நடந்து கொண்ட முறையைத்தான் நான் ஏற்றுக் கொள்கிறேன். தமிழ்த் தலைவர்களுக்கும் ஆட்சி அதிகாரத்திலுள்ள சிங்களத் தலைவர்களுக்குமிடையே ஏற்படக் கூடிய ஒரு உடன்பாட்டை உடனடியாக அமுலுக்கு கொண்டு வருவதுதான் சாத்தியமானது என்பது என் அபிப்பிராயம்.

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு விடயத்தில் எல்லோருடைய அபிப்பிராயங்களையும் பெற்றுத்தான் தீர்வுகாண வேண்டும் என்றால் அது சாத்தியமற்றது என்பது என் கருத்து. பலஸ்தீன - இஸ்ரேல் ஒப்பந்தமாக விருந்தாலும், நெல்சன் மண்டலோ - டி, கிளார்க் ஒப்பந்தமாகவிருந்தாலும் அதற்கு ஆதரவும் இருக்கும், எதிர்ப்பும் இருக்கும். எல்லோருடைய ஆதரவையும் பெற்றுத்தான் நிறைவேற்ற வேண்டும் என்பது கதைப்பதற்கு இனிமையாக இருக்கலாம். அது நடைமுறையில் சாத்தியப்படாது. சொந்த அனுபவங்களில் கூட இதனை நாங்கள் பார்த்துக்கொண்டு தான் இருக்கிறோம்.

ஆதலால் இவ்விரு கட்சிகளும் தேசியப் பிரச்சினைகளில் ஒரு முடிவுக்கு வரல் வேண்டும். அல்லது ஆட்சி அதிகாரத்தில் உள்ள கட்சி தமிழ் பேசும் மக்களின் தலைவர்களுடன் பேசி ஒரு இணக்கம் கண்டு உடனடியாக ஒப்பந்தங்களை அமுல்படுத்த வேண்டும். இல்லாவிட்டால் பண்டா - செல்வா, டட்லி - செல்வா ஒப்பந்த காலகட்டங்களிலும் அதற்குப் பின் வந்த காலகட்டங்களிலும் சொந்த அரசியல் இலாபங்களுக்காக ஐ.தே.கவும், பொ.ஐ.முயும் மாறி மாறி செயற்பட்டது போல் தான் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கும்.

**பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் நீங்களும் ஒரு அங்கத்தவராக இருக்கிறீர்கள். இன்றைய பாராளுமன்றத் தெரிவுக்குழு தமிழ், முஸ்லிம் மக்களின் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு காணும் என்பதில் நீங்கள் நம்பிக்கை வைத்திருக்கிறீர்களா?**

பாராளுமன்றத்தெரிவுக்குழுவிற்குத்தலைமை தாங்குகின்ற அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் இனப் பிரச்சினைக்கு தீர்வு காணப்படல் வேண்டுமென அக்கறையாகவும், ஆர்வமாகவும் செயற்படுவதாகவே நான் கருதுகிறேன். ஆனால் அந்த பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் அங்கம் வகிக்கின்ற அரசதரப்பு உட்பட பெரும்பாலானோர் ஜி.எல். பீரிஸ் சிந்திப்பது போல் செயற்படுகிறார்கள் என்பதில் எனக்கு நம்பிக்கை இல்லை.

இலங்கையில் உள்ள அரசியலமைப்பில் ஏதாவதொரு திருத்தத்தை கொண்டு வருவதற்கு அல்லது அதனை நடைமுறைப் படுத்துவதற்கு பாராளுமன்றத்தின் மூன்றில் இரண்டு வாக்குப்பலம் அவசியம். ஆனால் இன்றிருக்கக்கூடிய சூழலில் அந்த மூன்றில் இரண்டு வாக்குப்பலத்தை பெறுவதில் சிக்கல்கள் இருக்கின்றன. அதாவது நான் ஏற்கெனவே ஐ.தே.க., பொ.ஐ.மு. வைப்பற்றி சொன்னது போல் தேசியப்பிரச்சினைகளில் அவர்களின் தொடர்ச்சியான முடிவுகளை நாம் கண்டுள்ளோம். அந்த அணுகுமுறை முதலில் மாற வேண்டும். மாற்றவேண்டும். ஆளும் கட்சி கூட ஐ.தே.கவின் ஆதரவை, மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறக்கூடிய வகையில் அணுகுவதாக எனக்குத் தெரியவில்லை.

இப்படியான சூழலில் பாராளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைக்கும் என்பதில் எனக்கு நம்பிக்கை இல்லை. இன்னும் முடிவுகளை எட்டுவதற்கு 3,4 மாதங்கள் இருக்கின்றன. அந்தக் காலக்கட்டத்தில் தான் உறுதியான பதிலைத்தரமுடியும். இருந்தாலும் எனக்கு இந்த பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் நிலை நம்பிக்கை தரக்கூடியதாக இல்லை. ஆனால் நான் இதனை குழப்பி விடக்கூடாது என்ற நிலையிலும் அடிக்கு மேல் அடி அடித்தால் அம்மியும் நகரும் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலும் தான் சந்தர்ப்பங்கள் கிடைக்கும் போது தெரிவுக் குழுவில் கலந்து கொள்கிறேன்.

**ஆயுதப்போராட்டத்தில் இருந்து பின் இலங்கையின் பாராளுமன்றவாதியாகிய நீங்கள் இப் பாராளுமன்ற ஜனநாயகத்தின் மூலம் பிரச்சினையை தீர்க்கலாம் என உங்கள் அனுபவத்தின் ஊடே நம்புகிறீர் களா?**

எந்தப் போராட்டமும் முழுக்க முழுக்க பிரச்சினைகளை, ஆயுதப் போராட்டத்தின் ஊடாகவும் முழுக்க முழுக்க அரசியல் போராட்டத்தின் ஊடாகவும் தீர்த்துக் கொண்டதாக வரலாறு இல்லை. வன்முறையும் அவசியப்பட்டிருக்கிறது. அரசியல் போராட்டமும் அவசியப்பட்டிருக்கிறது. எம் முன்னோர்கள், மூத்த தலைவர்கள் ஜனநாயகப் போராட்டத்தின் ஊடாக பிரச்சினையைத் தீர்க்கலாம் என ஆரம்பித்து பின் அந்த ஜனநாயகப்போராட்டத்தின் உச்சகட்டமாக அவர்களால் ஆயுதப் போராட்டம் ஆரம்பிக்கப் பட்டது.

அந்த ஆயுதப்போராட்டம் கூட சரியான திசையில் முன்னெடுக்கப்படாத காரணத்தினால், அவ்வாயுதப் போராட்டத்திற்கு இப்போது ஒரு ''கமா'' போடவேண்டியிருக்கிறது. அதைவிட நான் ஆரம்பத்தில் சொன்னது போல் யாழ்ப்பாணத்து மக்கள் இன்று நினைப்பது போல் புலிகளுக்கு தங்களால் வழங்கப்பட்ட முழு ஆதரவினையும் அவர்கள் துஷ்பிரயோகம் செய்து விட்டார்கள் என கருதுவது போல்தான் உண்மை நிலவரங்களும் இருக்கின்றன.

தனிநாடு தான் பிரச்சினையைத் தீர்க்கும் என செயற்பட்டு வந்த நாங்கள் இலங்கை - இந்திய ஒப்பந்தத்திற்கு பிற்பாடு ஐக்கிய இலங்கைக்குள் தமிழ்பேசும் மக்கள் சம உரிமைகளையும் விகிதாசார வாய்ப்புக்களையும் அனுபவிக்கக் கூடிய ஒரு அரசியல் ஏற்பாட்டிற்கு வரலாம் என்ற நம்பிக்கையில் தான் நாம் ஆயுதப்

→16

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# குஜ்ராலின் வருகை

இந்திய வெளிநாட்டமைச்சர் குஜ்ரால் அவர்களது வருகை குறித்து பரபரப்பான எதிர்பார்ப்பு இலங்கையின் அரசியல்வாதிகள் மத்தியிலும், குறிப்பாக தமிழ் அரசியல்வாதிகள் மத்தியிலும் பத்திரிகைகள் மத்தியிலும் வெளிப்பட்டிருந்தது. சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகள் இலங்கையின் இனப்பிரச்சினை விடயத்தில் அரசாங்கத்துக்கு சார்பான நிலைப்பாட்டை இந்தியா எடுப்பதற்கு குஜ்ராலின் இந்த விஜயம் துணை செய்ய வேண்டும் என்று எழுதின. ஒரு சில பத்திரிகைகள் காலாவதியாகிப்போன இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை கைவிட்டு புதிய ஒப்பந்தம் ஒன்றை நோக்கிச் செல்லவேண்டும் என்று கோரிக்கை வைத்தன. இதற்கு அவை சொன்ன பிரதான காரணம் இலங்கை - இந்திய ஒப்பந்தம் இலங்கை அரசு மீது இந்திய அரசு மேலாதிக்கம் செலுத்தும் விதத்தில் அமைந்திருந்தது என்பதும், விடுதலைப் புலிகள் அவ்வொப்பந்தத்தை உதறிவிட்டு யுத்தத்தில் இறங்கியதன் காரணமாக அது இப்போது காலாவதியாகிவிட்டது என்பதுமாகும். இதற்கும் மேலாக சில பத்திரிகைகள் இந்தியாவை புலிகளின் யுத்தத்திற்கு உதவியளிக்கும் ஒரு களமாக பயன்படுத்துவதைத் தடுப்பது, இப்பிராந்தியத்தின் புலிகளின் நடமாட்டத்தை கட்டுப்படுத்துவது போன்ற நடவடிக்கைகட்கு இந்தியா உதவவேண்டும். அதற்கு குஜ்ராலின் விஜயம் வழிசமைக்க வேண்டும் என்று கோரின.

தமிழ் அரசியல்வாதிகள் தரப்பிலோ வென்றால், இந்திய அரசாங்கம் தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கு. அல்லது அவர்களுக்கு உரிய பாதுகாப்பினை உத்தரவாதம் செய்வதற்கு இந்திய அரசின் தலையீடு அவசியம் என்ற அபிப்பிராயம் வெளியிடப்பட்டது

நீண்ட கால இடைவெளிக்குப்பிறகு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தந்திருப்பவர் என்ற முறையில் இந்திய வெளிநாட்டமைச்சரான குஜ்ரால் இலங்கையின் இன்றைய மனநிலையை படம்பிடித்துச் செல்ல விரும்புவார் என்பது வெளிப்படை. எனவே இந்த விருப்பங்களை பலத்த எதிர்பார்ப்புக்களுடன் இரு தரப்பினரும் வெளியிட்டிருந்தனர்.

உண்மையில் இருதரப்பினரும் முன்வைத்துள்ள இந்திய வெளிவிவகார அமைச்சரை நோக்கிய கோரிக்கைகளில் தத்தமது நிலையிலிருந்து இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் இந்தியா தலையிட வேண்டும் என்ற விருப்பமே மேலோங்கி நிற்கிறது. தலையிடாக் கொள்கையை இந்தியா கடைப்பிடிக்கவேண்டும், இலங்கை அரசாங்கம் அதன் உள்விவகாரத்தைக் கையாள்வதை அனுசரித்துப் போகவேண்டும். புலிகளுக்கு எதிரான அதன் நடவடிக்கைகட்கு ஆதரவாக இருக்க வேண்டும் என்று கோரும் சிங்கள அரசியல்வாதிகள் மற்றும் பத்திரிகையாளர்களின் கோரிக்கையின் சாரம் இனப்பிரச்சினையில் இந்தியாவை தலையிடுமாறு கோருவதேயன்றி வேறல்ல.

அதேவேளை, தமிழ்க்கட்சிகளது கோரிக்கையும் அத்தகைய ஒரு நேரடியான தலையீட்டுக் கோரிக்கைதான்.

ஆக, உள்ள வேறுபாடு என்னவென்றால், ஒன்றுக்கொன்று எதிரான இருதரப்பினரும் தமக்கு விருப்பமான விதத்தில் இந்தியா தலையிடவேண்டும் என்று கோருவதுதான்.

இவர்கள் இருவரும் இன்றைய நெருக்கடி காரணமாகவோ என்னவோ, கடந்த கால கசப்பான அனுபவங்களை இலேசாக மறந்துவிடுகிறார்கள்.

இந்தியாவை தத்தமது நலன்களின் அடிப்படையில் இருந்து தமக்கு சார்பாக தலையிடுமாறு கோரும்போது, 'இந்தியாவின் நலன்' என்ற ஒன்றை இவர்கள் வசதியாக மறந்து போய் விடுகிறார்கள்.

ஆனால் இந்தியா அதை மறந்துவிடவில்லை.

இதை அவரது பேச்சுக்கள் தெளிவாகவே காட்டுகின்றன.
இந்திய வெளிநாட்டமைச்சர் குஜ்ரால் மிகவும், அவதானமாக பொறுக்கியெடுத்த வார்த்தைகளால் இந்தியாவின் வெளிவிவகாரக் கொள்கையை மீளவும் வலியுறுத்திப் பேசியுள்ளார்.

பிராந்திய நாடுகளுடன் நட்புறவு அவர்களின் உள்ளக விவகாரங்களில் தலையிடாக் கொள்கை, அவர்களது இறைமையை கௌரவித்தல், குறிப்பாக இலங்கையின் விஷேட நல்லுறவை பேண விரும்புதல்... இத்தியாதி விடயங்களை தமது கொள்கையாக அவர் அறிவித்துள்ளார்.

இலங்கையின் இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கான முயற்சியில் அரசியல் தீர்வொன்றுக்காக இலங்கை அரசாங்கம் முயல்வது, அரசியல் தீர்வொன்றே நிரந்தரத்தீர்வாக அமையும் என்று அது நம்புவது போன்ற விடயங்களை இந்தியா வரவேற்பதாகவும், ஜனாதிபதியின் அதற்கான முயற்சிகளை பாராட்டுவதாகவும் அவர் சிலாகித்துப் பேசினார். கூடவே இந்த முயற்சிகளை மிகவும் அக்கறையுடனும் அவதானத்துடனும் தாம் கவனித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

குஜ்ராலின் இந்த அறிவிப்பை படிக்கும் எவரும் அவர் புதிதாக எந்த விடயத்தையும் சொல்லிவிடவில்லை என்பதையும், இந்தியாவின் ஏற்கெனவே இருந்த வெளிநாட்டுக் கொள்கையையே தனது வார்த்தைகளில் வெளிப்படுத்தியிருக்கிறார் என்பதையும் புரிந்து கொள்ள முடியும்.

அவரது வார்த்தைகளை எப்படியும் வியாக்கியானம் செய்து கொள்ள முடியும். ஏனென்றால், அவை மிகவும் பொதுப்படையானவை. ஆனால் அதேவேளை அவர் தெளிவாகவும் ஸ்தூலமாகவும் சில விடயங்களை தெரிவித்துள்ளார். அது இலங்கை இந்திய நாடுகளுக்கிடையிலான வணிக நடவடிக்கைகளை மேம்படுத்துவது சம்பந்தப்பட்டதாகும். வரிகளை குறைத்தல், இறக்குமதி ஏற்றுமதி வாய்ப்புக்களை அதிகரித்தல் போன்றவை அவர் தெளிவாக தெரிவித்துள்ள விடயங்கள்.

ஆக, அரசியல் விடயத்தில் அவர் மிகவும் அவதானமாகவே யாருக்கும் எதுவும், உறுதியாக கூறாமல் தனது உரையை நிகழ்த்தியுள்ளார்.

எனவே அவர் 'இந்திய நலனை' மறந்துவிடவில்லை. அந்தநாட்டின் நலனைப் பாதுகாக்கும் ஒரு 'பொறுப்பான' அமைச்சராக அவர் தன்னை வெளிப்படுத்தியிருக்கிறார்.

இலங்கை அரசாங்கம் பௌத்த, சிங்கள பேரினவாதத்தை பிரதிநித்துவப்படுத்தும் அதன் இயல்பு, அதனிடமிருந்து விடுதலைபெற துடிக்கும் வடக்குக் கிழக்கு மக்கள், இவர்களது பாதுகாப்புக்கு உத்தரவாதமளிக்கக் கூடிய ஒரு தீர்வு என்ற விவகாரங்களில் இந்தியாவின் முடிவு அதன் நீண்ட கால நலனை அடிப்படையாகக் கொண்டே அமையும் என்பது சொல்லித் தெரியவேண்டியதில்லை.

இந்த நலன்கள், இந்த நாட்டின் ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் விடுதலையுடன் சமாந்தரமாக அமையுமாக என்பது ஒரு முக்கியமான கேள்வி.

குறிப்பாக தமிழ் முஸ்லிம் மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் அரசியல்வாதிகள் கேட்டுக்கொள்ள வேண்டிய கேள்வி.

தமிழ் முஸ்லிம் மக்களின் அரசியல் உரிமையை வென்றெடுக்கும் அரசியல் தார்மீகப் பொறுப்புள்ளவர்கள் இதைக் கவனத்திலெடுப்பது நல்லது.

வரலாற்று அனுபவங்கள் வெறுமனே பேசுவதற்கு மட்டும் உரியவை அல்ல.

எதிர்காலத்தை விளங்கிக்கொள்ளவும் அவை பயன்படக்கூடியவை'

## இந்தப் பூனை...

'இந்தப்பூனையும் பால் குடிக்குமா?'' என்று நினைக்க வைக்கும் விதத்தில் பேசுவது ஒரு கலை.
எல்லாவற்றையும் கச்சிதமாக செய்துவிட்டு அப்பாவிகளைப் போல் இருக்கவும், பேசவும் தெரிந்தவர்களை இந்தக் கலையில் வல்லவர்கள் என்று சொல்வார்கள். நமது ஜனாதிபதி அவர்களுக்கும் இது கைவந்த கலை.
ஒரு அண்மைய உதாரணம்:
இஷானி விக்கிரமசிங்க என்ற ரி.எல்.எல். ஒளிபரப்பு நிலைய செய்திப் பணிப்பாளர் கைது விவகாரம் ஊர் அறிந்த செய்தி.
புத்தாண்டு பிறந்ததும், பிறவாததுமாக ரி.என்.எல் தொலைக்காட்சி நிலையம் சோதனையிடப்பட்டதும், இஷானி கைது செய்யப்பட்டதும், நாலாம் மாடிக்கு அழைத்து விசாரிக்கப்பட்டதும் தெரிந்த விடயம். இந்த விசாரணைகளை பொலிஸார் செய்த விதம் சாதாரண சட்டத்துக்கு முரணானது என்று குற்றம் சாட்டப்பட்ட போது, அவர்கள் இஷானி சாதாரண சட்டத்தின் கீழ் அல்ல, பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழேயே கைது செய்யப்பட்டுள்ளார் என்று அறிவித்ததும், புதிய கதை அல்ல.
இதை எதிர்த்து பத்திரிகையாளர்கள் ஆர்ப்பாட்டம் நடாத்தியதும், அறிக்கைகள் வெளியிட்டதும் கூட பழைய கதை தான்.
பயங்கரவாத தடைச் சட்டத்தினை தொடர்புசாதனவியலாளர்கட்கு எதிராகப் பயன்படுத்தாதே, பத்திரிகையாளர்கள் பயங்கரவாதிகள் அல்ல என்று எழுதப்பட்ட சுவரொட்டிகளும் பதாகைகளும் கூட கட்டப்பட்டன. பத்திரிகைகளில் முன்பக்கச் செய்திகளும் கூட வந்திருந்தன. இவையெல்லாம் எல்லோருக்கும் தெரிந்த கதைதான்.
ஆனால் ஒருவருக்கும் தெரியாத ஒரு கதை யும் இருக்கிறது.
அது தான் இந்த விடயம் ஜனாதிபதிக்கு தெரியாது என்பது.
ஏனென்றால், இஷானி கைது செய்யப்பட்டபோது ஜனாதிபதி இந்தியாவில் இருந்தாராம்.
பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் இஷானியை கைது செய்திருக்கத் தேவையில்லை. அவர் மீது சாதாரண சட்டத்தின் கீழேயே நடவடிக்கை எடுத்திருக்கலாம் என்று இப்போது ஜனாதிபதி அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதுவும் வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் மத்தியில். இது நடந்தது ஜனவரி 19ம்திகதி.
இந்தச்சட்டம் பயன்படுத்தப்பட்டதை எதிர்த்து போராட்டங்கள் நடந்தது, பத்திரிகைகளில் செய்திகள் வெளிவந்தது பற்றியெல்லாம் ஜனாதிபதிக்கு ஜனவரி 19ம் திகதி வரை எதுவுமே தெரிந்திருக்கவில்லை.
தெரிந்திருந்தால், அவர் உடனேயே அப்படிக் கைது செய்தது தவறு என்று அறிவித்திருப்பார்.
ஆக, அவருக்கு இந்த விடயம் 19 நாட்களாகத் தெரியாது.
ஜனாதிபதியின் செயலாளரும் வெகுஜனதொடர்பு சாதனத்துறை அமைச்சரும் கூட இதை ஜனாதிபதிக்குத் தெரிவிக்கவில்லைப் போலும். பாவம் ஜனாதிபதி, அவர் தான் என்ன செய்வார்?
இதுதான் ஒருவருக்கும் தெரியாத கதை.
இதையும் பத்திரிகையாளர்கள் - வெளிநாட்டு பத்திரிகையாளர்கள் - நம்புவார்கள்.
ஏனென்றால், 'இந்தப் பூனையும் பால் குடிக்குமா?'

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# சிங்களப் பேரினவாத + ஆணாதிக்கக் கூட்டும் தமிழ்ப் பெண்களும்!

ஒவ்வொரு இராணுவ நடவடிக்கைக்குப்பின்னரும் மோதலில் ஈடுபட்ட தரப்பினர்கள் தமது தரப்பில் ஏற்பட்ட இழப்பு, எதிரிக்கு ஏற்பட்ட இழப்புக்கள் பற்றி கூறுவது வழக்கம். இதனை நிரூபிப்பதற்காக தம்மால் கைப்பற்றப் பட்ட ஆயுதங்கள், உபகரணங்கள் என்பனவற்றை காட்சிக்கு வைப்பர். சில நேரம் தம்மால் கொலை செய்யப்பட்ட எதிரிப்படையினரின் சடலங்களைப் பொது மக்களுக்குக் காட்டி அதன் மூலம் தமது வீரத்தைப் பறைசாற்றியும் கொள்வர்.

அண்மைக் காலங்களில் இலங்கை அரசுக்கும் புலிகள் இயக்கத்துக்கும் இடையில் நடைபெற்ற பாரிய இராணுவ நடவடிக்கைகளின் போது தம்மால் கொல்லப்பட்ட புலி உறுப்பினர்களின் சடலங்களை அரச படையினர் காட்சிக்கு வைத்தனர். தொலைக்காட்சியில் இவை தொடர்ச்சியாக ஒளிபரப்பப்பட்டன. பத்திரிகைகளும் 'நானா...நீயா" என போட்டிப் போட்டுக் கொண்டு வெளிக்காட்டின. இதில் தொடர்ச்சியாக அவதானிக்கக்கூடியதாயிருந்த ஒரு விடயம், இறந்து கிடந்த பெண் புலி உறுப்பினர்களின் சடலங்களில் உடைகள் நீக்கப்பட்டு நிர்வாணமாக்கி காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தமை தான். எந்த விதமான மன உறுத்தலோ, மனித நாகரிகமோ இன்றி தொலைக்காட்சியிலும் பத்திரிகைகளிலும் இப்படங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

பெண் ஜனாதிபதி ஒருவர் ஆட்சி செய்யும் நாடொன்றில், அரசியலமைப்பு ரீதியாகவே அவருக்கு முப்படைகளின் தலைவராகவும் அது தவிர பாதுகாப்பு அமைச்சராகவும் இருக்கும் நிலையில் இறந்து போன பெண்களை நிர்வாணமாக்கி சர்வதேச தொடர்பு சாதனங்களுக்கூடாக வெளிப்படுத்துவது பற்றி யாரும் எதுவிதக் கேள்வியும் எழுப்பவில்லை. குறைந்தது இந்நாட்டின் பெண்கள் இயக்கங்கள் கூட வாய்திறக்கவில்லை. காரணம் இறந்தவர்கள் "எதிரிகள்". எதிரியின் பிரேதத்துக்கும் கூட மரியாதை செலுத்த வேண்டும் என்பதை பௌத்த தேசம் மறந்து போய்விட்டது.

எதிரி தரப்பின் மனோவலிமையைச் சிதைப்பதற்காகவும், தமது தரப்பை உற்சாகமூட்டவும் மக்களை தமது யுத்த தந்திரோபாயம் படைகளின் ஆற்றல் மீது நம்பிக்கை கொள்ளச் செய்யவும் வீழ்ந்துவிட்ட எதிரிகளை படம் பிடித்துக் காட்டுவது இராணுவ ரீதியான தந்திரோபாயமாக இருக்கலாம். ஆனால் களத்தில் வீழ்ந்த பெண்களை நிர்வாணமாகக் காட்டும் வக்கிரத் தனத்தின் பின்னால் அதைப் பார்த்து எள்ளி நகையாடும் குரூர மனோபாவத்தின் பின்னால் இருப்பது அப்பட்டமான ஆணாதிக்க சிந்தனை தான்.

எதிரி தரப்பு பெண்களை அவமானத்துக்குள்ளாக்குவதன் மூலம் எதிரியை உயர்ந்த பட்ச அவமானத்துக்குள்ளாக்க முடியும் என்பதை ஆணாதிக்கம் நன்றாகவே அறிந்து வைத்துள்ளது.

ஆணாதிக்க சமூகத்தில் பெண்கள் ஆண்களின் சொத்தாகக் கருதப்படுகின்றனர். இந்த சிந்தனை சமூகத்தில் ஆழமாகப் புரையோடிப் போயிருப்பதுடன் ஆணுக்கும் பெண்ணுக்குமான சமூக ரீதியிலான கடப்பாடுகள், ஐதீகங்கள், சம்பிரதாயங்கள், பண்பாட்டுப்பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள் போன்றவற்றினூடாக தலைமுறை தலைமுறையாகக் கடத்தப்பட்டும் வருகிறது.

பண்டைய குலச் சமூகங்களுக்கடையிலான யுத்தங்களின் போது வெற்றி பெறும் தரப்பு எதிரி தரப்பு ஆண்களைக் கொலை செய்துவிட்டு அவர்களது சொத்துக்களை அபகரித்துச் செல்லும். இப்படி அபகரிக்கப்படும் சொத்துக்களில் பெண்களும் குழந்தைகளும் அடங்குவர். இது பற்றி ஆ நிரை கவர்தல் (ஆடு மாடுகளை அபகரித்தல்), பெண்டிரை கவர்தல் (பெண்களை அபகரித்தல்) என பண்டைய தமிழிலக்கியங்களிலும் கூறப்பட்டுள்ளது.

இச் செயல் நாகரீக சமூகங்களாக மக்கள் வளர்ச்சியடைந்த பின்னரும் தொடர்ந்தது. ஒரு தார மணமுறையுடன் நாகரீக சமூகங்கள் தோற்றம் பெறுகின்றன. இப்பொழுது யுத்தங்களின் போது பெண்களை அபகரிப்பதாயில்லாமல் பாலியல் வல்லுறவு செய்து கொலை செய்வதாக மாறியது. மகா அலெக்சாந்தரின் படைகள் சென்ற இடமெல்லாம் தமது வெற்றியை பறைசாற்ற உயரமான தூண்களை நிறுவினர். இத்தூண்கள் ஆண்குறியைக் குறிப்பன. இப்படித் தூண்களைக் கட்டுவதன் அர்த்தம் எதிரியின் மீது தமது ஆண்மையை நிறுவியதாகக் கருதும் உளவியலின் வெளிப்பாடே எனப் பெண்ணிலைவாதிகள் கூறுவர்.

பொஸ்னிய-சேர்பிய யுத்தத்தின் போது 20,000 இற்கும் மேற்பட்ட பெண்கள் பாலியல் வல்லுறவு செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டனர். இதன் மூலம் எதிரிக்கு மாத்திரமே சொந்தமான அவனது உடமையை அழிப்பது, அவனுக்கு வாரிசுகளை உருவாக்கி அவனின் சமூக இருத்தலைத் தொடர்ந்து நிலைநாட்டும்- பாதுகாக்கும் பெண்ணின் மீது தமது ஆண்மையை நிறுவுவது, அப்பெண்ணின் உடலில் தமது வாரிசுகளை அத்துமீறி உருவாக்குவது போன்ற செயலுக்கூடாக எதிரி தேசத்தின் இனத் தூய்மையை மாசுபடுத்துவதாக இச்செயல் அர்த்தம் பெறுகிறது.

இவ்விரு தேசங்களும் (பொஸ்னிய-சேர்பிய) தமது தேசியப் பகைமையை வெளிப்படுத்தவும், எதிரியை பழிவாங்கவும் எதிரிக்கு உயர்ந்தசபட்ச அவமானத்தை ஏற்படுத்தவும் பெண்கள் மீது வன்முறைகளை பிரயோகித்தன.

பிற்போக்கு சக்திகளின் கூட்டு அவற்றை எந்தளவுக்கு பலப்படுத்திவிடுகிறது என்பதை பொஸ்னிய-சேர்பிய யுத்தத்திலிருந்து நாம் கற்றுக்கொள்கிறோம். பேரினவாதமும் ஆணாதிக்கமும் கூட்டுச் சேர்ந்ததன் மூலம் பெண்கள் மிகக் குரூரமான சித்திரவதைகளை முகம்கொடுக்க நேர்ந்ததற்கு பொஸ்னிய-சேர்பிய யுத்தம் சான்றாயுள்ளது.

தெலுங்கானா புரட்சிப் போராட்டங்களின் போது ஒடுக்கும் வர்க்க-உயர்சாதி எதிரியினால் விவசாயப் பெண்கள் பலவிதத்திலும் அவமானப்படுத்தப்பட்டனர். அதில் ஒரே ஒரு சம்பவத்தைப் பற்றி இங்கு கூறுவதுவதற்கு விரும்புகி றேன். தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த ஏழை விவசாயி ஒருவர் தான் வளர்க்கும் பசுவின் பாலை மேற்கொண்டும் எஜமானுக்கு வழங்க மறுத்துவிட்டார். இதனால் ஆத்திரமுற்ற எஜமானின் கையாட்களும் பொலிஸ்காரரும் விவசாயியின் கண்முன்னாலேயே அவரது மனைவியைக் கட்டிவைத்து அப்பெண்ணின் மார்பிலிருந்து பாலைக் கறந்து சென்றனர்.

இங்கே சுரண்டும் வர்க்கமும், ஆணாதிக்கமும், சாதி வெறியும், அரச அதிகாரமும் (பொலிஸ்காரர்) கூட்டுச் சேர்ந்து கொண்டு பெண்ணை ஒடுக்குவதைக் காண முடிகிறது.

ஒடுக்குமுறைச் சக்திகள் ஒவ்வொன்றும் தமக்குள் கூட்டுச் சேர்ந்து கொண்டு கூட்டு ஒடுக்குமுறையாகவே வெளிப்படுத்துகின்றன. இத்தகைய கூட்டிற்கூடாக தமக்குள் கிடைக்கும் பலத்தை அவை நன்கு உணர்ந்தே வைத்திருக்கின்றன.

ஒடுக்குமுறைக்குள்ளாகும் சக்திகள் இதைப் புரிந்து கொண்டு தமக்கிடையே புரட்சிகரக் கூட்டை ஏற்படுத்திக் கொள்ளாத வரையில் அவற்றின் செயற்பாடுகள் காத்திரமற்றதாயும் மட்டுப்படுத்தப்பட்டதாயுமே இருக்கும் என்பதையும் இவ்விடத்தில் குறிப்பிட்டாக வேண்டும்.

பல்வேறு ஆதிக்கக் கூறுகளாலும் பிற்போக்கு சித்தாந்தங்களாலும் கட்டமைத்திருக்கும் இலங்கை சமூகத்தில் ஆணாதிக்கமென்பது தன்னளவில் காத்திரமான பாத்திரத்தை வகித்து வருகிறது. இதனுடன் பேரினவாதம் கூட்டுச் சேர்கையில் ஆணாதிக்கத்தைப் போன்றே பேரினவாதமும் பலம்பெறுகிறது. (இலங்கையில் ஆணாதிக்கம், தேசியவாதம் ஆகியவற்றுடன் இன்னும் பல பிற்போக்கு சமூகக்கூறுகளும் கூட்டுச் சேர்ந்து ஒடுக்குமுறையை தீவிரப்படுத்தி வருகின்றன. தற்போதைக்கு பேரினவாதம், ஆணாதிக்கம் ஆகியவற்றை மாத்திரம் நமது உரையாடலுக்கு எடுத்துக் கொள்வோம்) இக்கூட்டு இவ்விரு பிற்போக்கு சக்திகளுக்கும் பயன் மிக்கதாயிருக் கிறது. பின்வரும் சம்பவத்தை எளிய உதாரணமாய்க் கொள்வதன் மூலம் இதை நாம் விளங்கிக் கொள்ள முடியும்.

சில வாரங்களுக்கு முன்னர் வீரகேசரியில் வெளிவந்த செய்தி இது. மலையகத்துத் தோட்டமொன்றில் கொழுந்து பறிக்க சென்று கொண்டிருந்த ஒரு இளவயது பெண்ணை சிங்கள ஆண் ஒருவர் பாலியல் வல்லுறவு கொள்ள முயன்றுள்ளார். இப்பெண் தப்பித்து ஓடி அத்தோட்டத்தைச் சார்ந்த இன்னொரு ஆணிடம் முறையிட, அவர் பாலியல் வல்லுறவு புரிய முயன்றவரை துரத்திவிட்டுள்ளார். அன்று மாலை இந்த சிங்கள ஆண், தனது கிராமத்தைச் சேர்ந்த இன்னும் ஆட்கள் சிலருடன் வந்து குறிப்பிட்ட பெண்ணின் கணவனை "தெமல கொட்டியா..." எனக் கூறித் தாக்கியிருக்கிறார். இந்த வன்முறையில் அந்த லயத்தைச் சார்ந்த பலரும் தாக்கப்பட்டிருக்கின் றனர். இதனால் பாதிக்கப்பட்ட 5 குடும்பங்கள் தோட்டப்பகுதி கோயிலொன்றில் தஞ்சமடைந் திருக்கின்றனர்.

இங்கு இன ரீதியான உறவில் ஆதிக்க நிலையிலிருப்பது சிங்கள இனம். பால் ரீதியான உறவில் ஆதிக்கம் பெற்றிருப்பது ஆணினம். ஒடுக்குமுறை உறவு, சிங்கள ஆண் எதிர் தமிழ்ப் பெண் என்று வரும் போது சிங்கள ஆணின் பலம் இரட்டிப்பாகிறது. தமிழ்ப் பெண் மிகவும் பலவீனமான நிலைக்குத் தள்ளப்படு கிறார்.

எமது நாளாந்த அனுபவங்களே இதற்கு சான்றாவதுடன் இந்தப் பிற்போக்குக் கூட்டைப் பற்றிய விளக்கத்தைப் பெறவும் இவை எம்மை இட்டுச் செல்கின்றன.

ஆதிக்க சக்திகள் ஒன்றுடன் ஒன்று கூட்டுச் சேர்ந்து கொண்டு ஒடுக்குமுறையைக் கட்டவிழ்த்து விடும் போது அந்த ஒடுக்குமுறையின் பண்பு முனைப்பானதாயிருக்கிறது. சிங்களப் பேரினவாதத்துடன் ஆணாதிக்கம் இணைந்து கொண்டு குறிப்பாகத் தமிழ்ப் பெண்கள் மீது ஒடுக்குமுறையைப் பிரயோகிக்கையில், தமிழ்ப் பெண்கள் தம்மை ஒடுக்கும் இரு பெரும் ஒடுக்குமுறைகள் தொடர்பாக எவ்வளவு காலத்திற்குத்தான் கண்களை மூடிக் கொண்டிருப்பது?

துஷ்யந்தி

---



# பெண் புலிகளும் பெண் விடுதலைப் பிரச்சினைகளும்!

## — ஓர் எதிர்வினை

எஸ்.ஜி.இராகவன்

இதழ் 112 சரிநிகரில் வெளிவந்த கலாநிதி ராதிகா குமாரசுவாமியின் கட்டுரையை வாசிக்க முடிந்தது. அவரது கருத்துக்கள் குறைவிளக்கமுடையதாகவும், ஏற்புடையதற்றதாகவும் இருப்பதைக் காணக் கூடியதாக உள்ளது. ஏனைய நாடுகள் சிலவற்றின் ஆயுதம் தரித்த பெண்களை ஒப்பீடாகக்கொண்டு ஒரு புத்தகப் பூச்சியின் தன்மையோடு தான் தமிழீழப் பெண்களின் போராட்டப் பிரவேசத்தை அவர் நோக்குகின்றார் என்று நான் கருதுகிறேன். தமிழ்ச் சமூகத்தின் தற்போதைய மாற்றத்திற்குள்ளான இயங்கியலை முற்றாக உற்று நோக்குபவர்கள் பீற்றர் ஷல்க்கையோ ஒரு பூப்புனித நீராட்டு விழா விளம்பரத்தையோ ஆதாரமாகக் காட்ட வேண்டியதில்லை.

கட்டுரையின் ஆரம்பத்தில் தமிழ்ப் போராளிப் பெண்களின் போராட்டப் பிரவேசம் என்பது பெண்களின் விடுதலையில் ஏற்பட்ட சிந்தனை மாற்றம் அல்ல எனச் சொல்லும், ராதிகா குமாரசுவாமி பின்னர் பெண் புலிகளின் வருகையானது தமிழ்ச்சமூகத்தின் இயங்கியலையே மாற்றியதாகக் குறிப்பிடுகிறார். இந்த சமூக இயங்கியல் மாற்றத்திற்கு பெண்களை இராணுவ மயப்படுத்தும் புலிகளின் யுக்தியே காரணமெனக் கூறும் இவர் தெற்காசிய பெண்களாக இருக்கின்ற இப்பெண்கள் சீதா தேவியின் நிலையில் இருந்து கெரில்லாக்களாக மாறியமை ஒரு தற்காலிக யுத்த அழுத்தத்தால் ஏற்பட்ட விளைவெனக்கூறி போர்ச் சூழல் இல்லாத நிலையில் இம்மாற்றம் கூட சீதா தேவியின் நிலைக்கே திரும்பி விடும் என்பதை ஒரு பத்திரிகை விளம்பரத்தை அடிப்படையாகக்கொண்டு நிறுவ முற்படுகிறார்.

அவர் மேலும் சொல்கிறார் வன்முறையால் பாதிக்கப்படுகின்ற பெண்களை பாதுகாக்கின்ற நான் எவ்வாறு பெண்களே வன்முறையாளர்களாக மாறுகின்ற ஒரு சூழலை எதிர்கொள்வது எனக் கேள்வி எழுப்புகிறார். தமிழீழத்தில் வன்முறையால் நேரடியாகவும் மறைமுகமாகவும் பாதிக்கப்பட்ட பெண்களே வன்முறையாளராக மாறுகின்றனர். ஈழத்தில் பல நூறு ஆயிரம் கிரிஷாந்திகள் பலியாகி விட்டனர். இவர்களைப் போன்று மற்றவர்களும் பலியாகாமல் இருப்பதற்காக வன்முறையை நாடுவது தவறாகாதே!

வன்முறையால் பாதிக்கப்படுகின்ற பெண்களைப் பாதுகாக்கும் உங்களது ஐ.நா போன்ற நிறுவனங்களும் எத்தனை ஈழத் தமிழ்ப் பெண்களை காப்பாற்றியிருக்கின்றன?

ஒருவன் அல்லது ஒருத்தி, தான் வாழும் சமுதாயத்தில் நெருக்கடிகள், வன்முறைகள் பிரயோகிக்கப் படும் போது அதனை எதிர்கொள்ள முடிவது நியதி. அந்த வகையில் தமிழ்ச் சமூகம் எதிர்நோக்கும் வாழ்வியல் பிரச்சினைக்கு ஆயுத அரசியல் மூலமாக தீர்வு காண முற்படும் சக்திகளுடன் பெண்களும் இணைதலென்பது எப்படி இவரை நெருக்கடிக்கு உள்ளாக்குகின்றது என்பது எனக்கு விளங்கவில்லை. தான் வாழும் சமூகத்திற்குரிய நெருக்கடிகளை தீர்க்க முனையும் சீதாதேவியின் பெண் விம்பத்திலிருந்து (கட்டுரையாளர் சொல்வது போல்) மாற்றம் பெறும் பெண்கள் நிச்சயமாக புதுமைப் பெண்களாகத்தானே இருக்கவேண்டும். அதே நேரம், தமிழர்கள் யுத்தச் சூழலுக்கு இலங்கை அரசால், தள்ளப்பட்டார்களே ஒழிய அவர்கள் தாமாகவே யுத்தச்சூழலை உருவாக்கி அதற்குள் பெண்களை உள்வாங்கவில்லை என்பதும் குறிப்பிடப்படல்வேண்டும்.

பீற்றர் ஷல்க்கின் கட்டுரையொன்றில் உண்மையொன்றினை கண்டுபிடித்ததாகக்கூறும் இவர் 1987ற்கு முன் மரணித்த பெண்புலிகளின் விபரப்பட்டியல் எதுவுமே இல்லையென்கிறார். இது நகைப்புக்குரிய விடயம் ஏனெனில், 1987ற்கு முன் எந்தவொரு பெண்புலியும் கொல்லப்படவில்லை. 1987ல் தான் இந்தியப்படையினருடனான சமரில் பெண் புலி மாலதி கொல்லப்பட்டார். 1987ற்கு முன்னர் ஈழப் போராட்டத்துடன் சம்பந்தப்பட்ட இரு பெண் போராளிகள் மரணித்திருக்கின்றனர். ஒருவர் புளொட் அமைப்பினரோடு தொடர்புடைய ஊர்மிளா, சுகவீனம் காரணமாக மரணித்தவர். மற்றவர் ஈ.பி.ஆர்.எல்.எப்பைச் சேர்ந்த வதனி எனும் பெண் போராளி. இவர் சமரில் மரணித்தவர். இதிலிருந்து ஈழப் போராட்டம் பற்றியதகவல் குறைபாடுகளுடன்தான் ராதிகா குமாரசுவாமியின் ஆய்வுகளும் கருத்துக்களும் அமைகின்றன என நாமறியலாம்.

ஆயுதப்போராட்டம் தொடங்கிய எண்பதுகளிலிருந்து மரணித்த போராளிகளுக்கு துண்டுப்பிரசுரம், சுவரொட்டிகள் மூலம் அஞ்சலி செலுத்தும் பழக்கம் பூரணமாக இருந்துள்ளது. இக்காலகட்டங்களில் (80-87) பெண்களின் போராட்ட நடவடிக்கைகள் மறக்கப்படவுமில்லை, மறைக்கப்படவுமில்லை. (உ+ம் 1984லில் ரெலோவால் வெளியிடப்பட்ட கலண்டரில் ரெலோ பெண் போராளிகள் பயிற்சி பெறும் அட்டைப்படம் வெளிவந்தமை, ஈ.பி.ஆர்.எல்.எப் பெண் போராளி வதனிக்கு அஞ்சலி செலுத்தி வெளிவந்த துண்டுப் பிரசுரங்கள்) இந்நிலையில் ஏனைய அமைப்புகளை விட புலிகள் மரணித்த போராளிகளின் விபரப் பட்டியல்களை மிகச் சிறப்பாகவே தற்போதும் பேணிவருகின்றனர். புலிகள் நினைவு கூறும் மாவீரர் தினங்களில் ஒவ்வொரு போராளியையும் முழுவிபரங்களோடும் நினைவு கூறுகிறார்கள் என்பதை அறியக்கிடைக்கின்றது. 1982ல் சத்தியன் மரணித்தது முதல் தற்போது மரணிக்கின்ற கடைசிப் புலியின் விபரப்பட்டியலும் புலிகளிடம் இருக்கும். அதற்குள் பெண் புலியின் விபரங்களும் அடங்கும். மரணித்த பெண்புலிகளின் விபரப் பட்டியலை உளச் சுத்தியோடு சேகரிப்பதில் புலிகளுக்கு தடையேதும் இருப்பதாகத் தெரியவில்லை. போராட்டம் தொடங்கிய 80களில் விடுதலைப் போராட்டத்தில் பெண்களின் பங்களிப்பின் அவசியம் போராளிகளால் வலியுறுத்தப்

→19

www.tamilarangam.net



# இப்படி சொல்ல வேண்டி இருப்பதே துயரம்!

ஆத்மாவின் செங்கோல் =

சிவப்பு+ கோல் கவிதை (சரிநிகர் இதழ் - 104) தொடர்பாக வ.ஐ.ச.ஜெயபாலன் அதிர்ச்சிதெரிவித்திருப்பது பற்றியும் (சரிநிகர் இதழ் 105) சுவிஸ் ரவீந்திரனது எதிர்வினை பற்றியும் (சரிநிகர்இதழ் 106) சில வரிகள் எழுதியாக வேண்டியுள்ளது. ஆத்மாவின் கவிதையின் வீச்சு பற்றி இவர்கள் இருவருக்கும் பெரிய அளவில் கருத்து மாறுபாடில்லை என்று நம்புகிறேன்.

''கவிதை மோசமானது'' என்று அபிப்பிராயப்படும் சுவிஸ் ரவி, அத்தகைய தீர்ப்புக்கு வந்தமைக்குக் காரணம் கவிதை பேசுகிற அரசியல் தான்.

வ.ஐ.ச. ஜெயபாலனுக்கு அதிர்ச்சி ஏற்படக் காரணமாயிருந்தது ''கால, நேரப்பொருத்தமில்லாமல்'', ''கால மாற்றத்தை நிராகரிப்பதாக'' இருக்கிற ஆத்மாவின் கவிதை.

0 0 0 0

இந்தச் சந்தர்ப்பத்தில் இத்தகைய கவிதைகள் எழுவதன் பகைப்புலம் பற்றியும் இத்தகைய கவிதைகளின் முக்கியத்துவம் பற்றியும் சில குறிப்புக்களைத் தருதல் பயனுள்ளது. முதலில் சில பழைய நினைவுகள்:

என்னுடைய இரண்டாவது கவிதைத் தொகுதியான யமன்(1984) வெளியான போது அதிலிருந்த 'எல்லைப் புறத்துக் கிராமம்' எனும் கவிதை நண்பர்கள் உட்படப் பலரால் தீவிர விமர்சனத்துக்குள்ளானது. சுத்த இராணுவக் கண்ணோட்டத்தினடியாக மேலெழுந்த கண்மூடித்தனமான நகர்ப்புறக் கெரில்லாத் தாக்குதல்களை, ஒரு வகை எள்ளலோடு? விமர்சித்திருந்தது அக் கவிதை. கவிதையின் மையக் கருத்தோடு உடன்பாடு கொண்டிருந்த நண்பர்களில் சிலர் கூட, கேலியும், கிண்டலும் மிகுந்த தொனியில் விமர்சனங்களை முன்வைப்பதால் ஆக்கபூர்வமாக எதுவும் விளையப் போவதில்லை என்று குறிப்பிட்டார்கள். கவிதையை வாசித்த விடுதலைப் புலித் தலைவர்களில் ஒருவர் கூட இத்தகைய கருத்தை முன்வைத்த தோடு மட்டுமல்லாமல் புல்மோட்டையில் நடைபெற்ற ஒரு கண்ணிவெடித்தாக்குதலுக்குப் பிற்பாடு ''எல்லைப் புறத்துக் கிராமங்கள் எல்லாம் இப்ப கலங்குதாம் எண்டு கவிஞருக்குச் சொல்லுங்கோ'' என்று வேறு தகவல் அனுப்பியிருந்தார். இதே போலவே அனுராதபுரத்தில் சிங்களப் பொதுமக்கள் புலிகளால் படுகொலை செய்யப்பட்டமையின் பாதிப்பில் இளவாலை விஜயேந்திரன் 'புதுசு'வில் எழுதிய ''சொல்லப்படாத சேதிகள்'' (மறுபிரசுரம், சரிநிகர் இதழ்-100) கவிதையும் விமர்சனத்துக்குள்ளானது. குறிப்பாக ''மனித நேயம் இழந்த ஒவ்வொரு நாயையும் வாலிலே கட்டித் தூக்கிலிடுவோம்'' என்ற வரிகள் சிலருக்கு அசௌகரியத்தையும், கோபத்தையும் ஏற்படுத்தின. ''விடுதலைப் போராளிகளை இப்படிக் கொச்சைப்படுத்தி எழுதுவது மோசமான தவறு'' என்று ஒரு இலக்கியப் பத்திரிகையின் ஆசிரியரும் ஆவேசப்பட நேர்ந்தது.

''புனிதமான'', ''தூய்மையான'', ''அப்பழுக்கற்ற'', ''விமர்சனங்களுக்கும் விசாரணைகளுக்கும் அப்பாற்பட்டது'' போன்ற கருத்து நிலைகளுக்கும் நம்பிக்கைகளுக்கும் ''துரோகம்'' செய்வதே காலங்காலமாக இலக்கியங்களினதும் இலக்கியகாரரதும் முக்கிய பணிகளில் ஒன்றாக இருந்து வந்திருக்கிறது என்பது ஒரு புறமிருக்க; ஆத்மா தனது கவிதையில் சொல்ல வரும் முக்கியமான விஷயம் என்ன வென்பதைப் பார்க்கலாம்.

0 0 0 0

ஆத்மாவின் கவிதையையும் அதன் கவித்துவ வீச்சையும் வசனத்துக்குள் சுருக்குவதற்கு முதலில் அவரிடம் மன்னிப்பு வாங்கிக் கொள்கிறேன். முஸ்லிம்களைக் கொன்று கன நாளாயிற்றே/ கொல்வதில்லையா இனி/ என்று மூளையைக் கழற்றி விட்ட, சயனைட் குப்பி ஏந்திய தமிழ்ப்பாலகனின் கேள்விக்கு ''கொல்வதில்லையென்றெதுவுமில்லை / இப்போதில்லை'' என்று பதில் தருகிறான் அரசன் (அவன் கைகளில் சிங்கள மக்களின் குருதி நிரம்பிய கிண்ணம்). ஆத்மாவின் கவிதை வீசியெறிகிற இரத்தம் + தசை+ மண்டையோட்டுக் கொலைப் படிமங்களுக்கு அப்பால் (இத்தகைய படிமங்கள் ஈழத்துக் கவிதையில் பரவலாகப் பாவிக்கப் பட்டுள்ளமையால் இப்போது அவை தரும் அதிர்ச்சி அவ்வளவு உக்கிரமானதல்ல என்பது இன்னொரு விஷயம்) முஸ்லிம் மக்களுடனான உறவுகளை விடுதலைப் புலிகள் சீர்ப்படுத்திக் கொண்டு வருகிற ஒரு சமயத்தில் ஆத்மா இப்படியான ஒரு கவிதையை எழுதியமை காலப் பொருத்தமும், அரசியல் பொருத்தப்பாடும் அற்றது என்பதே சுவிஸ் ரவியும் ஜெயபாலனும் சொல்லும் ஒரு விமர்சனம். புலிகளை ஒட்டுமொத்தமாக முஸ்லிம் எதிர்ப்பாளர்களாகப் பார்ப்பது தவறு என்பது இந்த விமர்சனத்தின் உட்கிடக்கை. இன்னுமொரு தளத்தில், தற்கொலைப் போராளிப்படையின் அர்ப்பணிப்பையும் வேட்கையையும் ஆத்மா 'பண்டமாக்கியிருக்கிறார்' - அதாவது கொச்சைப் படுத்துகிறார் என்றும் சுவிஸ் ரவி குற்றம் சாட்டுகிறார்.

0 0 0 0

மருதமுனைக் கொலைகளுக்கு முன்பாகத்தான் இந்த விமர்சனங்கள் எழுதப்பட்டிருந்தமையால், ஆத்மாவின் ''தீர்க்க தரிசனம்'' ஒரு வகையில் சரிதான் என்பது இப்போது தெரிந்து விட்டது. முஸ்லிம் மக்களை வடக்கை விட்டுத் துரத்தியடித்தமை பற்றித்தான் 'மனம் வருந்தி' பாலசிங்கம் குறிப்பிட்டிருந்தாரே தவிர முஸ்லிம் மக்களின் படுகொலைகள் தொடர்பாக விடுதலைப் புலிகள் எத்தகைய குற்ற உணர்வையோ, மனக்கிலேசத்தையோ உரிய முறையில் இன்னும் வெளிப்படுத்தவில்லை. அவர்களுடைய கருத்தியலும் 'விளைவு நடைமுறைகளை நியாயப் படுத்தும்'' என்ற முரட்டு நம்பிக்கையும் சாதாரணத் தமிழ், முஸ்லிம், சிங்களப் பொதுமக்களின் உயிர்களையும் கிள்ளுக்கீரையாகப் பார்க்கிற இராணுவ மேலாதிக்கம் வாய்ந்த அரசியலும் ஆத்மாவின் கவிதை படிமப்படுத்துகிற காட்சியையே உருவாக்கி வந்திருக்கிறது. புலிகள் இயக்கத்தின் உட்கட்டமைப்பும் அதனுடைய இறுக்கம் மற்றும் 'புனிதம்', 'கட்டுப்பாடு', 'விசுவாசம்' போன்ற கருத்தியலிலிருந்து உருவாகும் சிந்தனையும் தர்க்க ரீதியாக எதேச்சாதிகாரத்துக்கு இட்டுச் செல்கிறது. முஸ்லிம் மக்கள் விடயத்தில் அவர்கள் நடந்து கொண்ட முறை 'தவறு' (இது மிகவும் மென்மையான சொல்!) என்று அவர்கள் உணர்வார்களானால் முதலில் அவர்கள் பகிரங்கமாகத் தமது தவறுகளையும், செய்த கொலைகளையும் ஏற்றுக்கொண்டு முஸ்லிம் மக்களிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும். இரண்டாவதாக புலிகளால் கொல்லப்பட்ட/ பாதிக்கப்பட்ட அத்தனை முஸ்லிம் மக்களுக்கும் நஷ்டஈடு வழங்குவது முதல் வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட அனைத்து முஸ்லிம் மக்களின் மீள் குடியேற்றத்துக்குப் பொறுப்பேற்க வேண்டும். குறைந்த பட்சம் இவற்றையாவது பகிரங்கமாக உத்தியோகபூர்வமாக அறிவிக்காதவரை எந்த முஸ்லிம் பொதுவரும் புலிகளை எள்ளளவேனும் நம்புவர் என எதிர்பார்க்க முடியாது.

அவ்வப்போது தந்திரோபாயம் கருதி பாலசிங்கம் அவர்கள் உதிர்க்கும் 'மன்னிப்பு' வார்த்தைகளை சிரமேற்கொண்டு நாம் ''ஆஹா! புலிகள் திருந்தி விட்டார்கள்!'' என்று கூத்தாட முடியாது. செயல் அதுவே சிறந்த சொல். இதைத்தான் சந்திரிகா அரசிடம் தமிழ் மக்கள் பிரச்சினை தொடர்பாகவும் வலியுறுத்துகிறோம். ''இராணுவத்தினர் இப்போது நல்லபடியாக நடந்து கொள்கிறார்கள் என்ற அறிக்கைகளை நாம் எப்படி எதிர்கொண்டோம் என்று ஒரு முறை யோசித்துப் பார்க்க வேண்டும்.

0 0 0 0

அரசியல் கோணத்திலேயே ஆத்மாவின் கவிதைக்கு இவ்வளவு நியாயங்கள் இருக்கும் போது கவிதைத் தளத்தில் அவருக்கு இருக்கக்கூடிய பரந்த சுதந்திரத்தையும், உரிமையையும் பற்றி நாம் அதிகம் எழுதத் தேவையில்லை. எதேச்சாதிகாரத்தால் மோசமாகப் பாதிக்கப்படுவதாலேற்படும் எதிர்ப்புக் குரலுக்கு நிறையக் கோபமும் ஆக்ரோஷமும் இருக்கத் தான் செய்யும். ஆத்மாவின் கோபத்தைக் கேள்விக்குள்ளாக்குவதை விட்டு விட்டு எதேச்சாதி காரத்தை கேள்விக் குள்ளாக்க வேண்டும். எல்லாக் கொடுங்கோலர்களையும் இலக்கியமும் கவிதையும் நிறையச் சந்தர்ப்பங்களில் ஆத்மா படிமப்படுத்துவதை விடப் பயங்கரமாகவே சாடியிருக்கின்றன.

0 0 0 0

ஆத்மாவின் கவிதை தமிழ் - முஸ்லிம் உறவுகளுக்குக் குந்தகம் ஏற்படுத்தும் என்று நண்பர்கள் ஜெயபாலனும், சுவிஸ் ரவியும் கருதினால் முஸ்லிம் மக்களின் நிலை அவர்கள் தரப்புக் குரல் தொடர்பாக எம்முடைய உணர்திறன் இன்னும் அதிகமாக கூர்மைப்படவேண்டும் என்றுதான் சொல்ல முடிகிறது! இப்படிச்சொல்ல வேண்டி இருப்பதே துயரம்!

சேரன்

## சஜியின் இரு கவிதைகள்



### யுத்தகாலத்து சொப்பனங்கள்

தொழிற்சாலையின்
மங்கல், இரைச்சல், நெடிகளுக்கிடையில்,
நான் நின்ற நிலையில்
எனது வலது முன்னங்கை
நீண்டு வளர்ந்தது.

குனியாமலே கை விரல்கள்
பாதத்துக்கு அப்பாலும் தரையை வருடின.
பாதத்துக்கு அருகே,
கீழே,
பாதாளத்திலிருந்து நிரலாய் உயர்ந்து வரும்
சிறிய காட்போட் பெட்டிகளில்
மனிதப் பிணங்களின்
முகம், வாய், தலை, தோள்,
முழங்கால் மடிப்பில் தொடை, முன்னங்கால்-
இவைகளை மூடும்
புயங்களும் கைகளுமாய்,
முதுகும், இடையும், வயிறும் சற்றே தெரிய
முழுச் சடலத்தையும்
குறுக்கி அமுக்கிய நவீன தொழில்நுட்ப பொதிகள்.

பொதிகளின் உட்புகுந்து,
பாதத்துக்கு அப்பாலும் பரவும்
எனது வலது கை விரல்கள்
தொட்டு துளாவி சுவைக்கின்றன,
புதிய ஏற்றுமதிக்காய்.

○

### போரை அடை காத்தல்

அவளின் பின்புறமா, அல்லது அதன் பின்புறமா?
அவளுந்தான், அதுவுந்தான்.

வெள்ளை ஏப்ரனை
மேல்தொடை வரை அணிந்த
அகன்ற பிருஷ்டங்களின் கீழ்
அவளுடைய சாம்பல் நிற வால்.

அடியிலிருந்து சற்று விரிந்து
தொடைகளுக்கிடையில்
இரண்டு முழம் நீட்டிய
கரிய கற்றை மயிர்.

அவள் அப்பால் நகர....
தெரிந்தது,
அவள் பொரித்த குழந்தை

நீகிரோ சுருள் முடி
முழங்கால்கள் உயர கீழே குந்தி
பெரிய முழிகளுடன்.

○

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# முஸ்லிம்கள் தமிழர்களின் விரோதிகள்?

## -புலிகளின் கடிதம் குறித்து சில எதிர்வினைகள்

**-எம்.எம்.நூறுல்ஹக்**

தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டு/அம்பாறை அரசியற் துறைப் பொறுப்பாளர் துரை அவர்களினால் *''நலிவுறும் முஸ்லிம் தமிழ் சமூகங்களுக்கிடையேயான நல்லுறவு''* எனும் தலைப்பில் தீட்டப்பட்ட கடிதமொன்று *''பள்ளிவாசல் சம்மேளனங்களுக்கு''* அண்மையில் அனுப்பி வைக்கப் பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தின் முக்கியபகுதிகளை சரிநிகர் 110ம் இதழில் *''புலிகளின் கடிதம்''* என்ற தலைப்பில் வெளியிட்டது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம். இம்மடல் தமிழ், முஸ்லிம் மக்களுக்கிடையிலான ஒற்றுமையை வலியுறுத்தும் நோக்கில் எழுதப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது.

தமிழ், முஸ்லிம் மக்களுக்கிடையில் ஐக்கியம், பரஸ்பர நல்லுறவு, நல்லெண்ணம் போன்ற ஆரோக்கிய சூழல் பேணப்படவேண்டியது இக்காலகட்டத்தின் மிக அவசரமான, அவசியமான பணியாகும் என்பதில் இரண்டாம் கருத்துக்கூறுவதற்கில்லை.

ஆனால் புலிகளின் மேற்படி மடலில் சிலவரிகள் தமிழ், முஸ்லிம் மக்களுக்கிடையிலான வேற்றுமைக்கு வழிசமைத்தவர்கள் முஸ்லிம்கள்தான் என்றும் அரசின் சதி ஆலோசனையில் சோரம் போனவர்களும் அவர்களே என்பது போலும் அழுத்தம் தருவது தான் வேதனையானதும், கண்டிக்கத் தக்கதுமாகும்.

நல்லிணக்கத்தை மையமாகக் கொண்டு எழுதுவது என்ற போர்வையில் இக்கடிதத்தூடாக முஸ்லிம்களைத் தமிழ் மக்களின் விரோதிகள் போல் சித்திரிக்கும் ஒரு கைங்கரியத்தில் புலிகள் இறங்கியுள்ளனரா என்ற சந்தேகத்தையும் தருகிறது.

புலிகளினால் இதற்கு முன்னரும் கூட *''தமிழ், முஸ்லிம் மக்களுக்குள் ஐக்கியம் பேணப்பட வேண்டும் என்றும் ஒற்றுமைக்கு வேட்டுவைப்போர்கள் இனங் காணப்பட்டுத் தண்டிக்கப்படுவார்கள்''* என்றும் அறிக்கைகள் விடப்பட்ட சந்தர்ப்பங்களும் உண்டு.

இப்படி ஐக்கியத்தை வலியுறுத்திக் கூறிவிட்டு வேற்றுமைகளுக்கு ''வாய்க்கால்'' வெட்டிய நிகழ்வுகளுக்கும் புலிகள் பொறுப்பாகவிருந்த சந்தர்ப்பங்களும், வடக்கு கிழக்கு மாகாணங்களில் இல்லாமலில்லை.

தமிழ், முஸ்லிம் மக்களுக்கிடையில் ஐக்கியம் வலுப் பெறுவதற்கான முயற்சிகளை இவ்விரு சமூகங்களும் முன்னெடுத்துச் செல்ல வேண்டுமென்ற அடிப்படையான கருத்துக்கு முரண்பட்ட அபிப்பிராயங்களை இங்கு அவிழ்த்து விடுவது எனது நோக்கமில்லை.

மாறாக ஒற்றுமைக்கு எதிரானவர்கள் முஸ்லிம்கள் என்று உண்மைக்குப் புறம்பாக புலிகள் இனம்காட்டியிருப்பது தவறானதென்பதும், இத்தகைய இனங்காட்டல்கள் எதிர்காலத்தில் தமிழ், முஸ்லிம் மக்களுக்கிடையில் ஐக்கியத்தை வளர்த்தெடுக்காதென்பதையும் சுட்டுவதே என் இலக்காகும்.

*''ஸ்ரீலங்கா அரச படைகளுடன் இணைந்து தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு எதிராகச் செயற்படும் எவரும் இன, மத, பால், பிரதேச வேறுபாடற்று எம்மால் தண்டிக்கப்படும் சம்பவங்கள் இங்கு எவருக்கும் புதிதல்ல''*

இது அண்மையில் மருதமுனையைச் சேர்ந்த முஸ்லிம் ஊர்க்காவற்படையினரை புலிகள் கொன்று தண்டித்த தொடரில் கூறப்பட்டாலும், அவர்களின் அடிப்படைக் கொள்கைகளுள் இதுவும் ஓர் அம்சம் என்பதை *''தண்டிக்கப்படும் சம்பவங்கள் இங்கு எவருக்கும் புதிதல்ல''* எனும் வரிகள் மிகத்தெளிவாகச் சுட்டிக் காட்டுகின்றன.

*''பாகுபாடின்றி ஸ்ரீலங்கா அரச படைகளை கொன்று வருகின்றோம்.''* என்ற கூற்றில் எவ்வளவு தூரம் ''மெய்மை''யுடையவர்களாக புலிகள் இருக்கிறார்கள் என்று நாம் அலசிப்பார்ப்போமானால், ''பூஜ்யம்'' தான் முடிவாகக் கிடைக்கும். 1990களில் கிழக்கில் 13 பொலிஸ் நிலையங்களைத்தாக்கிய புலிகள் 10 பேரைக்கொன்று சுமார் 800 பொலிசாரை பணயக் கைதிகளாகப் பிடித்துக் கொண்டனர். அவர்களுள் 75%மானவர்கள் முஸ்லிம்கள்.

தப்பிவந்த சிலரது கூற்றுப்படி தமிழ்ப் பொலிஸார் விடுவிக்கப்பட்டனர். முஸ்லிம் பொலிஸார் காடுகளில் வரிசையாக நிறுத்தப் பட்டு சுட்டுக் கொல்லப்பட்டனர்.

பொலிஸ்நிலையங்கள், படைகளின் காவல் அரண்கள் கூட்டு மொத்தமாகத் தாக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் தவிர்ந்த வேளையில் ஸ்ரீலங்கா அரச படைகளில் கடமையாற்றும் தமிழர்கள் தண்டிக்கப்பட்ட சம்பவங்கள் இல்லையென்றே கூற வேண்டும்.

*''இன, மத, பால், பிரதேச வேறுபாடுகளின்றித் தண்டிக்கின்றோம்''* என்ற அவர்களது கூற்றை இது வலுவிழக்கச்செய்வதுடன் உண்மை வேறொன்றாயிருப்பதையும் மிகத் தெளிவாகக் காட்டுகிறது.

*''கடந்த எண்பதுகளில் கூட இதே போன்றதொரு நிலையை அரசு திட்டமிட்டு ஏற்படுத்தியது. மத்திய கிழக்கு முஸ்லிம்களின் இரத்தத்தினால் கறைபடிந்த வரலாற்றையுடைய புலனாய்வு அமைப்பொன்றின் ஆலோசனையின் பேரில் எம்மிரு இனங்களுக்கிடையேயும் விரோதத்தை உருவாக்கியது. இரு இனங்களும் அந்த மோசவலையில் வீழ்ந்து விட எமது தென் தமிழீழ பிரதேசமே அல்லோல கல்லோலப்பட்டது உங்களுக்கு நினைவிருக்கலாம்.''* எனவும் அக்கடிதத்தில் காணப்படுகிறது.

இந்தச் சமூக மோதல் நடந்தது 1985 சித்திரை மாதம் என்பதே சரியானதாகும். இக்காலத்தின் பின்னர்தான் தமிழ், முஸ்லிம் மக்களின் உறவில் விரிசல் பரவலாக பற்றிக்கொண்டது.

எது எப்படி இருப்பினும் இக்கலவரம் உருவாகுவதற்கான பின்னணியில் இருந்த காரணிகள் யாவையென்றும் இம்மோதலின் ஆரம்ப நிலை தோற்றம் பெற்றது எவ்வாறு என்றும் நாம் தெளிவாக விளங்கிக் கொள்வதன் மூலமே 1985களில் ஏற்பட்ட சமூக மோதலின் தூண்டுகோலர் யாரென்பதும் அரசின் சதி வலையில் சோரம் போனோர் யாரென்பதும் துலங்கும்.

தமிழீழவிடுதலைப்போராட்டத்தில் ஈடுபட்ட குழுக்களிலிருந்த சிலர் முஸ்லிம்களின் பொருளாதாரம், கல்வி, கலாசாரம், சமயம் என்பனவற்றுக்கு ஊறுவிளைவிக்கும் வகையில் நடந்து கொண்டனர். இதனால் உடமை, உரிமை என பல இழப்புகளை கிழக்கு மாகாண முஸ்லிம்கள் ஏற்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

இத்தகைய சமூக விரோதப்போக்குகள் கைவிடப்படவேண்டுமெனவும், மன்னார் மாவட்டத்தின் ரசூல் புதுவெளிக்கருகாமையில் அமைந்துள்ள அளவக்கைப்பள்ளிவாசல் வளவில் வைத்து தபால் அதிகாரி ஆப்தீன், கரீம் பாய் அப்துல் ஸலாம் என்போர்கள் ஆயுதமேந்திய தமிழ் இளைஞர்களால்

சுட்டுக்கொலை செய்யப்பட்டதையும் கண்டித்து அதுவும் அமைதியான முறையில் கடையடைத்து தமது அனுதாபங்களையும், எதிர்ப்பையும், வேதனையையும் முஸ்லிம்கள் வெளிப்படுத்தினார்கள். இதனை ஜீரணித்துக்கொள்ளும் மனோநிலையில்லாத ஆயுதமேந்திய சில தமிழ் இளைஞர்களினால் அது குழப்பப்பட்டது.

ஆயுதமேந்திய தமிழ் இளைஞர்களிற் சிலரும் காரைதீவு கிராமவாசிகளிற் சிலருமாகச் சேர்ந்து அருகிலிருந்த மாளிகைக்காடு, சாய்ந்தமருது கிராமங்களில் தீவைத்தும், தாக்குதல்களை நடத்தியும் சேதங்களை முதன் முதலில் ஏற்படுத்தினர்.

இதனைத் தொடர்ந்து கிழக்கு மாகாணம் பூராவும் தமிழ் முஸ்லிம் மக்களுக்கிடையில் கலவரங்கள் ஏற்பட்டன. இம்மோதலின் போது ஆயுதமேந்திய தமிழ் இளைஞர்களும் நிராயுதபாணிகளான முஸ்லிம்கள் மீது தாக்குதலில் ஈடுபட்டனரென்பது கவனிக்கத்தக்கது.



இம்மோதலினால் முஸ்லிம்கள் தரப்பில் நிகழ்ந்த இழப்புக்கள் தமிழ் மக்களை விட அதிகமானதென்பது சந்தேகத்திற்கு அப்பால் நிரூபிக்கக் கூடியதாகும்.

இக்கலவரத்தின் போது மாளிகைக் காடு, சாய்ந்தமருது ஊர்கள் பாதுகாப்பின் நிமித்தம் இலங்கைப் பாதுகாப்புப் படையினரை நம்ப வேண்டிய நிலை உருவாகியது ஆயுதம் தரித்த தமிழ் இளைஞர்களிற் சிலர் மேற்கொண்ட நடவடிக்கைகளாலேயே இந்நிலைமை உருவாகியது. அதுவல்லாது வெறுமனே இஸ்ரேலின் ஆலோசனையின் பேரில் அரசு உருவாக்கிய சதியில் முஸ்லிம்கள் வீழ்ந்து விட்டார்கள் என்று ஆர்ப்பரிப்பதில் அர்த்தமே இல்லை.

எனவே, 1985 சித்திரை மாதம் கிழக்கில் ஏற்பட்ட தமிழ் முஸ்லிம் மக்களுக்கிடையேயான வன்செயல்களை ஆரம்பித்து வைத்தவர்கள் ஆயுதமேந்திய தமிழ் இளைஞர்களிற் சிலரும், காரைதீவு கிராமத்தைச் சேர்ந்த தமிழ் மக்கள் சிலரும் என்பது வெளிப்படை. ஆயுதம் தரித்த இளைஞர்கள் மீது முஸ்லிம்கள் நல்லெண்ணம் கொள்ளாத வகையில் அவர்கள் முஸ்லிம்களின் கல்வி, கலாசாரம், சமயம், பொருளாதாரம் போன்ற துறைகளில் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டனர் என்பதும், 1985களில் ஏற்பட்ட சமூக மோதலினால் கிழக்கு வாழ் எல்லா முஸ்லிம்களும் வெகுவாகப்பாதிக்கப்பட்டு உயிர், உடமைச்சேதங்களை ஏற்க வேண்டியவர்களாக இருந்தனர் என்பதும் ஐயங்களுக்கு அப்பாலான உண்மைகளாகும்.

ஏற்றுக் கொள்ளுதல், புரிந்துணர்வுகள்தான் சிலவேளை எதிர்காலத்தில் இங்குள்ள தமிழ், முஸ்லிம் மக்களுக்கிடையே பழைய நல்லுறவுக்கும் பரஸ்பர நேசத்துக்கும் நிரந்தர ஐக்கியத்திற்கும் வழியாக அமையலாமென்ற நம்பிக்கை உண்டு.

*''தொண்ணூறுகளின் ஆரம்பத்தில் கூட அரசு சதிமேல்சதிதீட்டி மோசம் செய்தது''* என துரை அவர்கள் கூறுவது, அவர்களின் ஈனச்செயல்களை மறைப்பதற்காக முஸ்லிம்களின் சிந்தனைகளை வேறொருதிசையை நோக்கி நகர்த்த கையாளும் திட்டமா? என்று நாம் மீண்டும் சந்தேகத்துடன் கேட்க நிர்ப்பந்திக்கப்பட்டுளோம்.

1990களின் ஆரம்பத்தில் மட்டுமல்ல, அவ்வாண்டின் இறுதிவரை புலிகள் முஸ்லிம்களுக்கு வரலாறு மறக்காத கொடுமைகளைச் செய்துள்ளனர் என்பதை வரலாறு உள்வாங்கியுள்ளது. இவ்வாண்டிற்கு முன்னரும் புலிகள் கிண்ணியா, காத்தான்குடி, கல்முனை, போன்ற பிரதேசங்களில் முஸ்லிம்கள் மீது தாக்குதல் சம்பங்களில் ஈடுபட்டனரென்பதும் வரலாறே.

ஆயுதமேந்திய தமிழ்க்குழுக்களுள் புலிகள்தான் முஸ்லிம்களுக்கு அநேகமான இழப்புக்களை ஏற்படுத்தியுள்ளனர் என்ற முடிவிற்கு இட்டுச்சென்ற ஆண்டுகள் இந்த 1990கள் என்பது அவர்களுக்கு மறந்து போயிருக்கலாம். ஆனால், முஸ்லிம்களின் மனதிலிருந்து விலகிப்போயிருக்காதே?

1990களின் ஆரம்ப நாட்களில் முஸ்லிம்களுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் ஏற்பட்ட முரண்பாடுகளை கீழ்க்காணும் காரணங்களுடன் தொடர்புபடுத்திப் பார்க்கக் கூடியதாகவுள்ளது. தவிர துரை அவர்கள் கூறுவது போல் ''அரசின் சதி''யுடன் அல்ல.

மாறாக புலிகளின் தவறான அணுகுமுறையினால் ஏற்பட்டவைகள் என்று கூறுவதற்குத்தான் சான்றுகள் நிறையவுண்டு. 1990களில் நடைபெற்ற சம்பங்களின் யதார்த்தங்களை தெளிவாகப்பார்க்கும் போது இம்முடிவிற்கே இவை நம்மை இட்டுச்செல்கின்றதெனலாம்.

0 '' கடந்த வாரம் புலிகள் இயக்க உறுப்பினர் கல்முனைக்குடி பள்ளிவாசலில் வைத்து முஸ்லிம் ஆயுதபாணிகளால் கடத்திக்கொல்லப்பட்டார்... காத்தான்குடியில் திங்கட்கிழமை புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவர் சுட்டுக்கொல்லபட்டார்.''

(வீரகேசரி 31.01.1990)

0 '' பிரபல கவிஞர் அன்பு முகைதீன் சில தினங்களுக்கு முன்பு தமிழ் இயக்க கோஷ்டியொன்றினால், எடுத்துச்செல்லப்பட்டு தீவிர விசாரணையின் பின்பு விடுதலை செய்யப்பட்டார்.''

(தினகரன் 28.01.1990)

0 '' காத்தான்குடியில் நேற்றுக்காலை புலிகள் ஒலிபெருக்கி மூலம், 'அன்புள்ள காத்தான்குடி மக்களே! நேற்றிரவு எமது இயக்க ஆதரவாளர் ஒருவர் காத்தான்குடியில் சுட்டுக்

→

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கொல்லப்பட்டுள்ளார். இதனை அடுத்து காத்தான்குடியில் துக்க தினத்தை அனுஷ்டிக்கும் பொருட்டு ஊரடங்குச் சட்டத்தை பிறப்பிக்கின்றோம் என்றும், தேடுதல் நடவடிக்கையில் சம்பந்தப்பட்டவர்களை தேடுகிறோம் என்றும் அறிவித்தனர்.''

(தினகரன் - 31.01.1990)

0 '' ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மாகாண சபை உறுப்பினர் எம்.வை.எம். மன்சூர் நேற்றுக்காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டார்.''

(தினகரன் - 31.01.1990)

0 '' முஸ்லிம் காங்கிரஸ் அரசியல் நடவடிக்கையில் தொடர்ந்து ஈடுபடக்கூடாதென்று புலிகள் இயக்கம் எச்சரிக்கை விடுத்திருக்கிறது. இதேவேளை முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்களில் ஒருவரான ஜனாப் மருதூர்கனியும் இந்தப் பயங்கரவாதிகளினால் கடத்திச் செல்லப்பட்டார். கல்முனை சந்தைப் பிரதேசத்திலிருந்து 15 வர்த்தகர்களும் 25 முஸ்லிம் இளைஞர்களும் புலிகளினால் கைதுசெய்யப்பட்டு கடத்தப்பட்டுள்ளனர்.''

(தினபதி - 31.01.1990)

0 '' ஆயுதங்களை வைத்திருக்கும் முஸ்லிம் இளைஞர்கள் அவற்றை கையளித்து சரணடையுமாறு புலிகள் ஒலிபெருக்கி மூலம் நேற்று வேண்டுகோள் விடுத்தனர். கல்முனை, கல்முனைக்குடி, சாய்ந்தமருது பகுதிகளில் வாகனங்களில் ஒலிபெருக்கிமூலம் இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டது''

(வீரகேசரி - 31.01.1990)

0 '' கல்முனைப்பகுதியில் கடந்த இருதினங்களாக புலிகளால் கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்யக்கோரி நேற்றுக்காலை ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்று நடைபெற்றது. ஊர்வலத்தில் மீது கிரனைட் வீசப்பட்டதாகவும், இதனால் 4 பேர் கொல்லப்பட்டதாகவும், 25 பேர் காயமடைந்ததாகவும் தெரியவருகிறது''

(வீரகேசரி - 02.02.1990)

0 ''தனியார் (கல்முனையில்) ஆஸ்பத்திரி ஒன்றில் சிகிச்சை பெற்று வந்த 5 முஸ்லிம் நோயாளிகளை தமிழ் துப்பாக்கி நபர்கள் சுட்டுக் கொன்றனர்.''

(தினகரன் - 03.02.1990)

இது புலிகளினால் 1990களின் ஆரம்பத்தில் முஸ்லிம்கள் மீது திணித்தவற்றின் ஒரு பகுதியே. ஜூன் மாதத்திலிருந்து அனுபவித்த கசப்பான வாழ்க்கையையும் ஏற்றுக் கொண்ட இழப்புகளின் ஒரு பகுதியையும் கீழ்க் காணும் செய்திகள் ஊர்ஜிதம் செய்கின்றன.

0 '' 30 முஸ்லிம் வர்த்தகர்கள் புலிகளினால் கடத்தப்பட்டு பெருந்தொகையான பணத்தை கப்பமாகப் பெற்றுக்கொண்டு விடுதலை செய்யப்பட்டுள்ளனர். கிழக்கில் உள்ள பௌத்த விகாரை ஒன்றை முஸ்லிம்களைப்போல் தொப்பி அணிந்து விடுதலைப்புலிகள் தகர்க்க முனைந்துள்ளனர்.''

(தினகரன் - 22.06.1990)

0 ''கல்முனை நகரம் சுடுகாடுபோல் காட்சி அளிக்கிறது. நகரில் சில இடங்களில் சடலங்கள் அரைகுறையாக எரிந்த நிலையில் காகங்கள் கொத்திக்குதறுவதைக் காணக்கூடியதாக இருக்கிறது. கல்முனை நகரத்திலுள்ள பெரும்பாலான கடைகள் சூறையாடப்பட்டு எரிந்த நிலையில் காணப்படுகின்றது. கடையொன்றினுள் 5 சடலங்கள் எரிந்த நிலையில் காணப்பட்டன.''

(சிந்தாமணி - 24.06.1990)

0 ''புலிகள் இயக்கத்தினரால் விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்ட 5 முஸ்லிம் இளைஞர்களையும் விடுதலை செய்ய உதவுமாறு பெற்றோரும் . கல்முனை வாழ் பொது மக்களும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திற்கும் சர்வதேச மன்னிப்புச் சபைக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(தினகரன் - 09.07.1990)

0 '' 1990 -07-14 ஹஜ் கடமையை நிறைவேற்றி விட்டு வந்தோர் ஒந்தாச்சி மடம் எனும் இடத்தில் வைத்து வழிமறிக்கப்பட்டு அவர்களது உடைமைகள் பறிக்கப்பட்டன. இறுதியில் கொன்று தீயில் வீசப்பட்டனர். அவ்வாறு கொலையுண்டவர்கள் 65 பேர்கள் ஆவார்.''

(அல்ஹஸனாத், ஜூலை - ஒகஸ்ட் 1992)

0 '' சம்மாந்துறையில் நேற்று புலிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்த போது 55 வயதான இப்ராஹிமும், 23 வயதான மரிக்கார் கமால்தீனும் கொல்லப்பட்டனர். புதுப்பள்ளிவாசலும் குண்டால் சேதமுற்றது. 15 பேர் காயமடைந்தனர்.

(தினகரன் - 25.07.1990)

0 ''சம்மாந்துறையில் கைக்காட்டியடி ஜாரியா பள்ளிவாசல் வளவுக்குள் நேற்று முன்தினம் இரவு 5 இளைஞர்கள் ஆயுதபாணியான கோஷ்டியொன்றினால் சுட்டுக் கொல்லப்பட்டனர். மேலும் இருவர் காயங்களுக்கு இலக்காகியுள்ளனர்.

(தினகரன் - 30.07.1990)

0'' அக்கரைப்பற்றில் திங்கள் இரவு விடுதலைப் புலிகள் விவசாயிகள் என வர்ணிக்கப்படும் 13 முஸ்லிம்களை படுகொலைசெய்துள்ளதாகத் தெரியவருகிறது. இதனைப்பொலிசார் உறுதிசெய்துள்ளனர்.''

(தினகரன் - 01.08.1990)

0 '' சம்மாந்துறையில் உள்ள மஜீத்புரம் கிராமத்தின் மீது புலிகள் தாக்குதலை நடத்தியுள்ளனர். கடந்த புதன் இரவு நடந்ததாகக் கூறப்படும் இத்தாக்குதலில் 2 முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர்.

(தினபதி - 03.08.1990)

0 '' 1990.08.03ல் காத்தான்குடி இரண்டு பள்ளிவாசலில் இஷா தொழுதுகொண்டிருந்தவர்கள் ஒரே வேளையில் சுடப்பட்டனர். அப்பொழுது தொழுகைக்குப்போன சிறுபிள்ளைகள் கூட விடுபடாத வகையில் 167பேர் கொலைசெய்யப்பட்டனர். 38பேர் காயமுற்றனர்.''

(அல்ஹஸனாத், ஜூலை - ஒகஸ்ட் 1992)

0 '' 1990 -08- 12ல் ஏறாவூரில் புகுந்து 115 ஆண்கள் 27 பெண்கள் 31 பிள்ளைகள் என மொத்தம் 173பேர் சயனைட் பூசப்பட்ட கத்திகளால் வெட்டியும், துப்பாக்கியால் சுட்டும் படுகொலை செய்யப்பட்டனர். சில கர்ப்பிணிப் பெண்களது வயிற்றைக் கிழித்துபிஞ்சு குழந்தைகளை கொன்றமை அவர்களது கொடுமைக்கும், கொலை வெறிக்கும் போதிய சான்றாகும்.''

(அல்ஹஸனாத், ஜூலை - ஒகஸ்ட் 1992)

0 ''புலிகளினால் முஸ்லிம் மக்களுக்கு எதிராக நடத்தப்பட்ட அட்டூழியங்கள் இவ்வளவுதான் என்று அடிப்படையில்லாமல் நமது நோக்கிற்கு வலுசேர்க்கும் வகையிலேயே மேற்காணும் சான்றுகள் இங்கு தரப்பட்டுள்ளன.

உண்மையில் துரை அவர்கள் கூறுவதைப்போல் *''1990களின் ஆரம்பத்தில் கூட அரசு சதிமேல் சதி தீட்டி மோசம் செய்தது.''* என்பதில் எத்தகைய உண்மைகளும் இல்லை. ஆயினும், அரசின் சதிமுயற்சி என்றாலும் கூட அதில் முதலில் இரையாகிப்போனவர்கள் புலிகள் என்றே கூறவேண்டியிருக்கிறது.

பொதுவாக 1985 ஏப்ரல் தொட்டு 1996 செப். வரை நிகழ்ந்த தமிழ் முஸ்லிம் கலவரங்களை முதலில் ஆரம்பித்து வைத்தவர்கள் தமிழர்கள் அல்லது ஆயுதமேந்திய தமிழர்கள் என்பது தீக்கனலையொத்த உண்மைகளாகும்.

அடுத்த இதழில் முடியும்.

# தொடர்பூடக சுதந்திரம்: அவர்களும் இவர்களும் ஒன்றே!

படங்களும் கட்டுரையும் - எம்.கே.எம்.ஷகீப்



கடந்த பதினைந்தாம் திகதி காலை 11 மணியளவில், பத்திரிகையாளர்களுக்கெதிராய் அரசு மேற்கொண்டு வரும் வன்முறைகளை எதிர்த்து பாரியளவிலான ஆர்ப்பாட்டமும், சத்தியாக்கிரகமும் கோட்டை புகையிரத நிலையம் முன்பாக நடைபெற்றது.

தொடர்பூடக செயலணி (Media Action Committee) ஏற்பாடு செய்திருந்த இந்த எதிர்ப்பார்ப்பாட்டங்களில் இலங்கையின் முன்னணி பத்திரிகையாளர்கள், தொலைக்காட்சித் தொடர்பூடகவியலாளர்கள் என பல்வேறுபட்டோர் கலந்து கொண்டனர். இவ்வெதிர்ப்பு நடவடிக்கையில் சுதந்திர தொடர்பூடக இயக்கம் முக்கிய பங்காற்றியதுடன், பத்திரிகையாளர்களையும் விட்டுவைக்காத பயங்கரவாத தடைச்சட்டத்தை (PTA) உடனே ரத்துச் செய்யும் படி கோரி நகரெங்கும் சுவரொட்டிகளையும் ஒட்டி இருந்தது. 'இச்சட்டத்தை வடகிழக்கு தவிர்ந்த ஏனைய இடங்களில் நீக்கினால் போதுமானது என சில பத்திரிகையாளர் உட்பட பலர் கோரியிருந்தாலும் நாம் வடகிழக்கிலும் இது நீக்கப்பட வேண்டும்' என வலியுறுத்துவதாக சுதந்திர ஊடக இயக்கத்தைச் சேர்ந்த ஒருவர் கூறியதுடன் 'வடகிழக்கில் உள்ளவர்கள் என்ன மிருகங்களா அவர்களும் மனிதர்கள்தானே' என்று தன் ஆதங்கத்தை வெளியிட்டார்.

*''நாங்கள் என்ன பயங்கரவாதிகளா...?''*

*'சந்திரிகா அரசாங்கம் தொடர்பூடக சுதந்திரத்தை காப்பாற்றுவது நான்காம் மாடியிலா...?''*

*''அன்று பேசிய பத்திரிகைச் சுதந்திரம் இன்றெங்கே...!?''*

*''நேற்று - யூனுஸ், கய்ரிக, வெல்விடி கொட*

*இன்று - லசந்த, சிங்க, இஷினி, சுமித். இரண்டும் ஒன்றே...''*

என்று பல்வேறு பதாகைகளை தாங்கிய வண்ணம் பத்திரிகையாளர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். முதலில் சத்தியாக்கிரகம் எனவும், பின்னர் கோஷமெழுப்பி ஆர்ப்பாட்டம் எனவும் இரு வகையினதாக இவ்வெதிர்ப்பு நடவடிக்கை இடம் பெற்றது.

கலாநிதி சுனில் விஜேசிறிவர்தனா, கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து, அண்மையில் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தில் கைதான ரி.என்.எல். நிர்வாக இயக்குனர் இஷினி விக்கிரமசிங்க பெரேரா, லசந்த விக்கிரமசிங்க, லூஷன் ராஜகருணாநாயக்க, சுனந்த தேசப்பிரிய, சமன் வஹாப்பு ஆராச்சி, காமினி வீரக்கோன் போன்ற முன்னணி தொடர்பூடகவியலாளர்களும் இன்னும் பல முக்கியஸ்தர்களுமாக அநேகர் கலந்து கொண்டனர்.




இவ்வார்ப்பாட்டத்தின் முக்கிய அம்சமாக அரச கட்டுப்பாட்டில் இயங்கும் தொலைத் தொடர்பூடகவியலாளர்கள் (ரூபவாஹினி, ஐ.டி.என், லேக்ஹவுஸ்) கலந்து கொண்டமையைக் காணக்கூடியதாக இருந்தது. இவ்வரசின் பத்திரிகையாளர்களுக்கெதிரான உச்ச நடவடிக்கையின் விளைவே இவ்வாறானவர்கள் கலந்து கொண்டமையாகும் என்பதை அறிய முடிந்தது.

இவ்வெதிர்ப்பார்ப்பாட்டத்தை ஐ.தே.கவுடன் இணைத்து அரச சாதனங்கள் பிரச்சாரப்படுத்தின. எனினும் இவ்வரசுக்காக உழைத்த பத்திரிகையாளர்கள் இதில் கலந்து கொண்டதுடன், இது எந்தக் கட்சி இயக்கியோ அல்லது எந்தக் கட்சிக்குப் பின்னாலிருந்தோ செய்கின்ற ஆர்ப்பாட்டமல்ல, பத்திரிகைச் சுதந்திரத்திற்காயும்; அரச ஒடுக்குமுறைக்கெதிராயும் பத்திரிகையாளர் ஒன்றிணைந்து கொடுக்கிற குரல் இது என ஆணித்தரமாகத் தெரிவித்தார் ஒருங்கமைப்பாளர்களில் ஒருவரான சமன் வஹாராச்சி.

ஐ.தே.கவும் நவசமசமாஜக் கட்சியும் இவ்வார்ப்பாட்டத்தை கட்சி சார் எதிர்ப்பார்ப்பாட்டமாக கொண்டு செல்ல முயற்சி எடுத்தன. ஐ.தே.க. பா.உறுப்பினர் தினேஷ் தொடங்கட தன் ஆதரவாளர்களுடன் வந்து ஆர்ப்பாட்டத்தை வீதிக்கு இழுத்து போக்குவரத்து தடை ஏற்படுத்துமளவுக்கு இட்டுச் சென்றார். நவசமசமாஜக் கட்சியும் இவ்வாறான ஒரு திட்டத்துடன் இருந்ததாகக் கூறப்படுகிறது. இதனை அரச வானொலி ஆர்ப்பாட்டம் தோல்வியில் முடிந்ததாகப் பிரச்சாரப்படுத்தியதுடன், இது சில கட்சிகள் இயக்கிய ஆர்ப்பாட்டம் என்பதை ஊர்ஜிதப்படுத்த பிரயத்தனப்பட்டன. இதனை அவர்கள் ஒலிபரப்பிய செய்திகளில் இருந்து அறிய முடியுமாக இருந்தது. அது மாத்திரமன்றி ரூபவாஹினி சிங்களச் செய்தியைத் தொடர்ந்து இது தொடர்பான விஷேட நிகழ்ச்சியொன்றையும் ஒளிபரப்பியுள்ளது. இதில் ஒரே நிறுவனத்தைச் சேர்ந்த பத்திரிகையாளர்கள் எதிரும் புதிருமான நிலைப்பாட்டில் இருப்பதை பிரச்சாரப்படுத்தியுள்ளது.

இவ்வார்ப்பாட்டக் குழு முக்கியஸ்தர் சமன் வஹாராச்சிக்கு எதிராக அவர் பணியாற்றும் 'லக்பிம' பத்திரிகையின் ஏனைய ஆசிரிய குழுவினரான சுனில் மாதவ, வின்னி ஹெட்டிகொட ஆகியோர் தெரிவித்த கருத்தை வெளியிட்டு கட்சி சார் கருத்தியலை வலியுறுத்த பிரயத்தனம் எடுத்துள்ளன. எனினும் இவ்வார்ப்பாட்டத்தையும் இதில் கலந்து கொண்டோரையும் அவதானிக்கையில் இப்பிரச்சாரம் எடுபடாது என்பதைக் காட்டிநிற்கின்றன. எந்தக் கட்சிகளும் இவ்வார்ப்பாட்டத்தில் ஊடுருவல் செய்து தம்பிரச்சாரத்தை மேற்கொள்ள இடமளிக்காத வகையில் இதனை சமன் வஹாராய்ச்சி மேற்கொண்டிருந்தார் என்பதை இங்கு அவதானிக்க முடியுமாக இருந்தது.

அரசு பத்திரிகையாளருக்கெதிராக ஐ.தே.க தோற்றுப்போகுமளவுக்கு செயற்படுகின்ற விதம் யாரும் சொல்லித் தெரியப்படுத்த வேண்டியதல்ல. இவ்வாறிருக்கையில் முழுப்பூசனிக்காயை சோற்றில் மறைக்க அரசு முயல்கிறது.

அன்று பேசியது இன்றெங்கே...? என்று இவர்களுக்காக அன்று பேசியவர்களே கேள்வி எழுப்பிக் கொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாது பிறநாட்டு தொடர்பூடகவியலாளர்கள் கூட இவ்வரசின் ஜனநாயக மீறல்களுக்கெதிராய் பதாகை தூக்குமளவிற்கு பத்திரிகைச் சுதந்திரம் இங்கு கேள்விக்குறியாகியுள்ளது.

→19

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வணபிதா. ஹோர்ராட்




காலனித்துவத்தையும் அதன் பாதிப்புகளையும் பற்றி கிறிஸ்தவ திருச்சபைகள் எவ்வளவு காலம் தாழ்த்தி புரிந்து கொண்டிருக்கின்றன என்பதை, 19ம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் இருந்து வெளிவந்த கிறிஸ்தவ அறிக்கைகளை புரட்டிப்பார்த்தாலே தெரிந்து கொண்டுவிட முடியும். இரண்டாவது உலக மகா யுத்தம் முடிவுற்று நீண்ட நாட்களுக்குப் பின்னும் கூட கிறிஸ்தவ தேவாலய அறிக்கைகளில் "காலனித்துவம்" என்ற சொல் பயன்படுத்தப்படத் தொடங்கவில்லை. ஆசிய, ஆபிரிக்க நாடுகளின் மக்கள் தேசிய விடுதலைப் போராட்டங்களில் குதித்து தீவிரமாக இயங்கிக் கொண்டிருந்த ஒரு காலகட்டத்தில், (ஆயுதப் போராட்டங்கள் பலவற்றையும் அவர்கள் நடாத்திக் கொண்டிருந்தார்கள்) தேவாலய மதகுருக்களின் உத்தியோகபூர்வ ஆவணங்கள் இவை பற்றிய எத்தகைய குறிப்புகளும் பொறிக்கப்படாமலேயே வந்து கொண்டிருந்தன. 2ம் உலக மகா யுத்தத்தின் பின்பு தான் இவ்வறிக்கைகளில் ஒரு சில குறிப்புகளைக் காணக்கூடியதாக இருக்கிறது. அவையும் மிகவும் தெளிவற்ற விதத்தில்.

காலனித்துவம் பற்றிய குறிப்பை பாப்பரசரால் மதகுருக்களுக்கு அனுப்பி வைக்கப்படும் எந்த முக்கியத்துவம் வாய்ந்த சுற்றறிக்கைகளிலும் காண முடிவதில்லை. ஆனால் கடந்த நூற்றாண்டு முடிவதற்குப் பல காலங்களுக்கு முன்பே, காலனிய எதிர்ப்பு இயக்கங்கள் தொடங்கி விட்டிருந்ததும் அல்லாமல் 1925ம் ஆண்டில் புருசலில் நடாத்தப்பட்டது போல பல சர்வதேச மாநாடுகளையும் அவ்வியக்கங்கள் நடாத்தியிருந்தன. ரோமன் கத்தோலிக்க திருச்சபையை (RCC-Roman Catholic Church) பொறுத்தவரை அதனது முதலாவது இது பற்றிய மறை[illegible]மா[illegible] குறிப்பு இரண்டாவது வத்திக்கா[illegible] கவுன்சிலின் போது வெளிவந்தது. [illegible]லக [illegible]ருச்சபை மன்றத்தைப் பொறுத்தவரையோ (WCC-World Council of Church) 1954இல் நடந்த இவன்ஸ்ரன் மாநாடு மற்றும் 1961இல் நடந்த டெல்லி மாநாடு வரை இதற்காக காத்திருக்க வேண்டியிருந்தது. ஆயினும் சுற்றறிக்கைகளில் வெளியான இத்தகைய குறிப்புகள் பொதுவாகவே சமூக ஆய்வு என்ற அடிப்படையில் மிகவும் சுருக்கமானவையாகவும், காலனித்துவத்தின் மீது நம்பிக்கையை ஏற்படுத்துபவையாகவுமே அமைந்திருந்தன. உதாரணமாக 1967இல் வெளியான இது பற்றிய குறிப்பு ஒன்று இவ்வாறு கூறுகிறது.

"காலனித்துவ சக்திகள் எப்போதும் தமது சொந்த நலன்களையும் அதிகாரத்தையும் வெற்றியையும் மேம்படுத்திக் கொள்வதிலேயே கவனமாக இருந்தார்கள் என்பதுவும், அவர்கள் விட்டுச் சென்ற இடங்களில் ஒரு வகை ஸ்திரமற்ற பொருளாதார நிலையே நிலவியது (சாதாரணமாக, அடிக்கடி விலையில் பாரிய மாற்றங்களைக் கொண்டிருக்கக் கூடிய ஒரு பயிரை அடிப்படையாக கொண்ட பொருளாதாரம்) என்பதுவும் நிச்சயம் ஏற்றுக்கொள்ளப்படத்தான் வேண்டும். அதே வேளை இத்தகைய சில காலனித்துவ சக்திகளினால் ஏற்படுத்தப்பட்ட பாதிப்புகளையும் அதன் பின் விளைவுகளையும் அடையாளம் காண்கின்ற அதே வேளை, பல்வேறு பின்தங்கிய பிராந்தியங்களில் தாம் வந்து இருந்ததன் மூலமாகவும் தமது விஞ்ஞான, தொழில்நுட்பங்களை அறிமுகப் படுத்தியதன் மூலமாகவும் அவர்கள் ஏற்படுத்திய தர வுயர்ச்சியையும், சாதனைகளையும் அதன் மூலமாக அவர்கள் விட்டுச் சென்ற பயன்களையும் ஒப்புக் கொள்ள ஒருவர் மறந்து விடக்கூடாது. அவர்கள் உருவாக்கிய கட்டிடங்களும் போக்குவரத்துப் பாதைகளும் இன்னபிறவும் அவை எவ்வளவுதான் குறைபாடுடையவையாயினும் இன்னமும் இருக்கின்றன. மக்களின் அறியாமையையும் நோயையும் இல்லாதொழிப்பதில் அவர்கள் பங்காற்றினர், வாழ்க்கைத் தரத்தில் உயர்வையும் தொடர்பு சாதன வாய்ப்புகளையும் அவர்கள் வழங்கினார்கள்".

சமகால நிலைகளை மதிப்பிடுவதில் திருச்சபைகளிடம் இருந்த வரலாற்றுக் குறைபாட்டை நாம் விளங்கிக் கொள்வது எப்படி?

ஒரு சில பரிந்துரைகள் இவை:

**மிசன்களின் வரலாறும் கானித்துவத்து வமும்:-**

காலனித்துவ வரலாற்றில் இரண்டு முக்கிய கால கட்டங்கள் இருக்கின்றன. ஒன்று வணிக மயமாதல் கட்டம். மற்றையது தொழிற்துறை முதலாளியம்.

**வணிக காலனித்துவம் (mercanatile colonialism)** :இந்தக் கட்டம் போத்துக்கல், ஸ்பெயின் ஆகிய நாடுகளினதும் அதன்பின் நெதர்லாந்து, இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகிய வட ஐரோப்பிய நாடுகளினதும் அரச குடும்பத்தவர்களால் தொடங்கி வைக்கப்பட்டதாகும். வணிக காலனித்துவமானது நிலப்பிரபுத்துவ உயர்குழாத்தினரிற்கும், வணிக வர்க்கத்துக்குமிடையேயான அதிகாரப் போட்டியில் ஏற்பட்ட சமநிலையின் விளைவாக தோன்றிய ஒன்றாகும்.

நிலப்பிரபுத்துவ தத்துவமானது மதத்துடன் இணைந்த ஒன்றாக இருந்ததால், அது தொடர்ந்தும் மேலாட்சி நிலையில் இருக்கும், அதே வேளை வணிக வர்க்கத்துக்கும் ஒரு சட்டபூர்வமான அங்கீகாரம் கிடைத்தது. இவ்வணிக நடவடிக்கைகளை, ரோமன் கத்தோலிக்க திருச்சபை, அன்றைய காலகட்டத்தில் புரிந்து கொள்ளப்பட்ட அர்த்தத்தில் பைபிளின் அடிப்படையில் கிறிஸ்தவத்தை பரப்புவதற்கான ஒரு வாய்ப்பாக கருதியது. இதன் காரணமாகத் தான் வணிக காலனித்துவ காலகட்டம் முழுவதும் தொடர்ச்சியாக வெளியிடப்பட்ட மதகுருக்களின் அறிக்கைகளில் போர்த்துக்கலினதும் ஸ்பெயினினதும் மன்னர்களது நடவடிக்கைகள் சட்டபூர்வமானவையாக அறிவிக்கப்பட்டன. இதேவேளை ஒரு சில மிசனரிகள், குறிப்பாக மதம் சார்ந்த மிசனரிகள், இந்த அரசர்களது நாடுகளை கைப்பற்றும் மிலேச்சத்தனமான செயல்களுக்கு எதிராக போரிட்டது மட்டுமல்லாமல் பைபிளின் அடிப்படையில் வீடுபேறு அடைதல் குறித்த வேறு விதமான ஒரு புரிதலையும் நடைமுறையையும் வளர்த்தெடுக்கவும் முனைந்தார்கள் என்பது உண்மையே. ஆனாலும் சில சந்தர்ப்பங்களில் மிகவும் வீரம் செறிந்ததாக இருந்த இத்தகைய முயற்சிகளினால் நடந்து கொண்டிருந்த நிகழ்ச்சிகள் மீது பெரிய தாக்கம் எதையும் கொண்டு வர முடியவில்லை. இதற்கான பிரதான காரணம் இவற்றின் அரசு சார்பு நிலையும் காலனித்துவ வாதிகளின் நலன்களுடன் ஒத்துப் போகிற திருச்சபையின் நலன்களுமாகும்.

இத்தகைய சட்டபூர்வமாக்கல்களுக்குப் பதிலுபகாரமாக பைபிள் கருத்துக்களைப் பரப்பும் முயற்சிகளுக்கு அந்த அரசுகளது அரசியல் மற்றும் பொருளாயத சலுகைகள் கிடைத்துக்கொண்டிருந்தன. பைபிள் கருத்துக்களைப் பரப்பும் நடவடிக்கையானது ஒரு புறத்தில் உள்நாட்டு மக்களுடன் எழுதப்படாத ஒப்பந்தங்களை செய்து கொள்வதற்கான அல்லது அடிமைகளை கொண்டு வருவதற்கான ஒரு வழிமுறையாகவே பார்க்கப்பட்டது. மறுபுறத்தில் கிறிஸ்தவர்களை அதிகாரத்தைக் கொண்டிருப்பவர்களாக செய்வதற்கும் இது பயன்பட்டது.

**தொழிற்துறை தேசங்களின் காலனித்துவம்:-** இந்தப் புதிய காலனித்துவம் மூலப் பொருட்களை கண்டுபிடிப்பதிலும் அவற்றை தொழிற்துறை வளர்ச்சிக்காக சுரண்டுவதிலும் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை சந்தைப்படுத்துவதிலும் கவனம் செலுத்தியது. நெதர்லாந்து, சுவீடன், பிரான்சு, பிரித்தானியா போன்ற நாடுகளின் பெரும் கம்பனிகள் இக் காலனித்துவத்திற்கு வழிசமைத்தன. இந்தப் புதிய காலனித்துவம் வணிக காலனித்துவத்தில் ஈடுபடுகின்ற பாரம்பரிய அதிகார சக்திகளுடன் படிப்படியாக போட்டியிலும் போரிலும் ஈடுபடவேண்டி வருவதை உணரத் தொடங்கியது. இதன் விளைவாக ஒல்லாந்துக்கும் பிரித்தானியாவுக்கும் இடையிலான யுத்தம் ஒருபுறமும் ஸ்பெயினுக்கும் போர்த்துக்கலுக்குமான யுத்தம் ஒருபுறமுமாக நடந்ததுடன் இவற்றைத் தொடர்ந்த ஸ்பெயினின் வெற்றிகள் ஆசிய, ஆபிரிக்க லத்தீன், அமெரிக்க நாட்டு காலனிகளை கைப்பற்றுவதில் போய் முடிந்தது. இந்தக் காலனித்துவம் வணிக காலனித்துவ காலத்தில் நடைபெற்றது போல திருச்சபையின் மதரீதியான சட்டபூர்வமாக்கப்படும் வாய்ப்பைப் பெற முயற்சிக்கவில்லை. பதிலாக நடைமுறை சார்ந்த விடயங்களில் அது கவனம் செலுத்தியது. காலனிகளின் அரசாங்கங்களைப் பயன்படுத்தியது மட்டுமல்லாமல் கத்தோலிக்க புரட்டஸ்தாந்து திருச்சபைகளுக்கு உதவியளித்து அவற்றின் மிசனரிகளை காலனிகளுக்கு வர ஊக்குவிக்கவும் செய்தது. தமது அன்றைய காலனிய நோக்கங்களுக்கு அவசியமான கல்வி மற்றும் மருத்துவ சேவைகளை செய்யும் பொறுப்பையும் இம் மிசனரிகளுக்கு வழங்கியது. சொந்த நாட்டில் சில ஐரோப்பிய அரசாங்கங்கள் இம் மிசனரிகளுடன் எதிர்ப்புப் பாராட்டிய போதும், காலனிகளில் இவற்றின் செயற்பாடுகட்கு எந்த தடையையும் விதிக்கவில்லை.

**தேசியவாத காலனித்துவ, ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கங்களின் எழுச்சி:-** ஏகாதிபத்திய, காலனித்துவ இயக்கங்கள் காலனிய நாடுகளில் தொடங்கப்பட்டதுடன் இந்த இயக்கங்கள் மேற்குலகுக்கு எதிராக செயற்படவும் தொடங்கின. லத்தீன் அமெரிக்காவில் இவை 19ம் நூற்றாண்டின் தொடக்கத்தின் போதே ஆரம்பமாகிவிட்டன.

ஸ்பெயினுக்கு விசுவாசமாக நீண்ட காலமாக இயங்கி வந்த கிறிஸ்தவ புனித உயர் பீடங்கள் இப் புதிய தேசங்களின் உருவாக்கத்தை அங்கீகரிக்க மறுத்ததுடன் அந்நாடுகளில் இயங்கி வந்த திருச்சபைகளின் நடவடிக்கைக்கு அச்சுறுத்தலாகவும் இருந்தன. கீழ்மட்ட மதகுருக்கள் பலர் அன்றைய தேசியவாத இயக்கங்களில் இணைந்தனர். இவர்களது சேர்க்கை அன்றைய சாதாரண மக்களைவிட மத்திய வர்க்க வகுப்பினரது விடுதலையையே அதிகம் பிரதிநிதித்துவப்படுத்துவதாக இருந்தது. இருந்த போதும் இந்த இயக்கங்கள் மிகவும் முக்கியமான வரலாற்றுப் பாத்திரத்தை ஆற்றின.

ஆசியாவில் பாரம்பரிய கலாசாரம், மதம் என்பவற்றை சார்ந்த பலமான தேசவிடுதலை இயக்கங்கள் தோன்றி வளர்ந்தன. இந்தியாவில் இது இந்து இயக்கமாகவும், இலங்கை பர்மா, வியட்நாம், லாவோஸ் போன்ற நாடுகளில் பௌத்த இயக்கமாகவும் பெரும்பாலான அரபு நாடுகள் ஈரான், மலேசியா, இந்தோனேசியா, பிரித்தானிய இந்தியாவின் ஒருபகுதி (இன்றைய பாகிஸ்தான், பங்களாதேஸ்) ஆகியவற்றில் இஸ்லாமிய இயக்கங்களாகவும் வெடித்தன.

இவற்றால் கலவரமடைந்த கிறிஸ்தவ திருச்சபைகள் எழுந்துவரும் தேசிய விடுதலை எழுச்சியை எதிர்கொள்வதற்காக காலனித்துவ சக்திகளுடன் தமது உறவைப்பலப்படுத்திக் கொண்டன. ஒரு சில திருச்சபைகள் மட்டுமே உண்மையான தேசிய நிலைப்பாட்டை எடுத்தன. அங்கொன்று இங்கொன்றான ஒரு சில குரல்கள் மட்டுமே இந்நிலைப்பாட்டுக்கு சார்பாக எழுந்தன - அனேகமான புத்திஜீவிகள் வட்டத்திலிருந்து. இந்தோனேசியா, கொரியா போன்ற நாடுகளை இவ்விடயத்தில் விதிவலக்காக கொள்ளலாம். இவற்றுள் கொரியா ஜப்பானினால் காலனியாக்கப்பட்ட ஒரு நாடாகும்.

பொதுவாக பேசுவதானால், சீர்திருத்த திருச்சபைகளுக்கு காலனிய சக்திகளுடன் தொடர்பு வைத்துக் கொண்டு செயற்படுவதில் பெரிய் சிக்கல்கள் இருக்கவில்லை. ஏனென்றால் இவற்றுக்கு காலனிய சக்திகளுடன் குறைந்தளவு தொடர்பே இருந்தது. இதற்கு ஒரு விதிவிலக்காக இந்தியாவிலிருந்த அங்கிலிக்கன் திருச்சபையைக் கூறலாம். ஒரு ஸ்தாபிதம் பெற்ற அரச திருச்சபை என்ற முறையில் அது பெரும்பாலும் அரசாங்கத்தின் காலனித்துவ கொள்கைகளையே தனது கோட்பாடுகளாக கொண்டிருந்தது. காலனிகளைக் கைவிடும் கொள்கையை அரசாங்கம் எடுத்த காலங்களில் அதுவும் அக் கோட்பாட்டை பின்பற்றியது. இந்தத் தகவல்கள், சுதந்திரத்துக்குப் பின்னான ஆசிய நாடுகளின் அரசியற் தலைவர்கள் பலர். தேசியவாத சார்புடைய கிறிஸ்தவர்களாக இருந்த அதே வேளை, மேற்கத்தேய முதலாளித்துவ சிந்தனைகளின் விளைபொருட்களாகவும் இருந்ததை விளக்குகின்றன.

ஆப்பிரிக்காவில் இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின் எழுந்த விடுதலைக்கான இயக்கம், திடீரென தோற்றம் பெற்ற ஒன்றாகும். அங்கிருந்த உள்ளூர் மதகுருக்கள் பெருமளவுக்கு வெளிப்படையாகவே விடுதலை நிலைப்பாட்டை எடுத்தனர். ரோமன் கத்தோலிக்கத்தைப் பொருத்தவரையிலும் பெரும்பாலான மாவட்ட தலைமைக் குருக்களின் நிலை இதுவாகவே இருந்தது. அதுவும் பெருமளவுக்கு இவர்களது மட்டத்தில் இருந்தவர்கள் வெள்ளையர்களாகவே இருந்த போதும் கூட இந்த நிலை நிலை நிலவியது. இந்த நிலைமை பின்னாளில் பல்வேறு பிசப்புகளின் கடிதங்கள் மூலமாக உறுதிப்படுத்தப்பட்டது. இதேவேளை வெள்ளையர் எதிர்ப்பு விடுதலை இயக்கங்கள் பலவற்றை உருவாக்கிய ஆப்பிரிக்கர்கள் தமக்கென சுயாதீனமான மத வழிபாட்டுத் திருச்சபைகளையோ மத இயக்கங்களையோ உருவாக்கவும் செய்தனர்.

குறிப்பாக, போர்த்துக்கேய காலனித்துவத்தின் நிலையானது, கவலையூட்டும் ஒன்றாகும். 1974ம் ஆண்டு வரை றோமன் கத்தோலிக்க திருச்சபை போத்துக்கேயரினால் நடாத்தப்பட்ட காலனித்துவ யுத்தங்களிலிருந்து தன்னை விலக்கிக் கொள்ளவில்லை.. கிறிஸ்தவ புனித உயர் பீடங்களுக்கும் போர்த்துக்கேய அரசாங்கங்களுக்கு மிடையிலான உறவு இன்னமும் நிலவவே செய்கிறது. கிறிஸ்தவ புனித உயர் பீடங்கள் இதை இன்றை வரை எதிர்க்கவில்லை. மிகச்சிறிய எண்ணிக்கையிலான மதகுருக்களும் கத்தோலிக்கர்களுமே புரட்டஸ்தாந்து திருச்சபையின் தலைவர்களுடன் சேர்ந்து தம்மை தேசிய விடுதலை இயக்கங்களுடன் அடையாளம் காட்டியுள்ளனர்.

எனவே, கிறிஸ்தவ திருச்சபைகள் மிகவும் தெளிவற்றதான, ஸ்தூலமான ஆய்வுக்கு அப்பாற்பட்ட, மதசார்பான பார்வையையே கொண்டிருந்திருக்கின்றன என்பது இதன்மூலம் தெளிவாகின்றது. சோசலிச இயக்கங்களாலும் பின்னாளில் மாக்சீய ஆய்வுகளாலும் வளர்த்தெடுக்கப்பட்ட மேற்குலகின் காலனித்துவம் மீதான விமர்சனங்களில் திருச்சபைகளின் பங்களிப்பு என்று எதுவுமே கிடையாது. அத்துடன் பாரம்பரிய மதங்களால் உந்தபட்ட கலாச்சார விடுதலையை அடிப்படையாகக் கொண்ட காலனிய நாட்டு மக்களது போராட்டங்களிலும் கூட கிறிஸ்தவ திருச்சபைகளுக்கு எந்தவித பங்களிப்பும் கிடையாது. மிகவும் காலம் தாழ்த்தியே தென்னாப்பிரிக்கப் போராட்டங்களில் உலகத் திருச்சபை மன்றத்தின் (WCC) தலைமையின் கீழ் சில திருச்சபைகள் தமது காலனித்துவ நிலைப்பாட்டிலிருந்து விடுபட்டதுடன் உள்ளூர் திருச்சபையை சார்ந்தவர்களுடன் சேர்ந்து விடுதலை இயக்கங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டன. ஆனால் இவை மிகவும் வன்மையாக கண்டிக்கப்பட்டு வந்துள்ளன என்பதை நாம் தெரிந்து கொள்வது அவசியம்.

காலனித்துவத்தின் முடிவு காலத்தில் கூட கிறிஸ்தவ திருச்சபைகள் தாம் எடுத்த நிலைப்பாடுகளில் எல்லாம் முக்கியமாக உள்ளூர் திருச்சபைகளின் சுயாதீனத தன்மையின் அவசியம் பற்றி கவனம் செலுத்தியிருக்கின்றன வேயொழிய தமது காலனித்துவ கால நடைமுறைகளை விமர்சனபூர்வமாக ஆராயவில்லை. உதாரணமாக 1968இல் நடந்த WCC உப்சலா மாநாட்டின் நிலைப்பாட்டைக் கூறலாம்.

**ஐரோப்பிய மையவாத பார்வை**

திருச்சபை ஆவணங்களின் இன்னொரு அம்சம் என்னவென்றால், "கிறிஸ்தவ" ஐரோப்பியகளின் உயர்ந்த நாகரிகத்தை, நாகரிகமடையாத மக்கள் மத்தியில் எடுத்துச் செல்வது குறித்த அவர்களது ஆழ்ந்த அக்கறையாகும். 15ம் நூற்றாண்டு முதல் 16ம் நூற்றாண்டு வரையான கடந்த இஸ்லாத்துக்கு கெதிரான போர்களை இந்த நிலைப்பாடே

—ப18

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கத்தோலிக்க திருச்சபைக்கு ஒரு சவால்!

—என்.சரவணன்

"அன்று கலிலியோவை இல்லாமலே செய்தார்கள். இன்று அப்படி இலகுவில் செய்துவிட முடியாது. அறிவுலகின் வளர்ச்சிக்கு முன்னால் சகலதுக்கும் பதில் கூறியே ஆகவேண்டும்."

இவ்வாறு கூறியிருப்பவர் வண.பிதா. திஸ்ஸ பாலசூரிய. இவர் எழுதிய "மரியாளும் மானுட விடுதலையும்" ("Mary & Human Liberation") எனும் நூல் பற்றி வத்திக்கான் கத்தோலிக்க திருச்சபை கண்டனம் தெரிவித்து திருச்சபையிலிருந்து விலக்கியுள்ளது. இவர் இதுவரை பல நூல்களை எழுதியுள்ளார். முற்போக்கான எண்ணம் படைத்தவர். "சமூக நீதி" கோட்பாடு பற்றி கதைத்து வருபவர். "மரியாளும் மானுட விடுதலையும்" எனும் நூல் 1990 நடுப்பகுதியில் வண.திஸ்ஸ பாலசூரிய சேவையாற்றிவரும் சமூக சமய நடுநிலையத்தினால் (CSR) வெளியிடப்பட்டிருந்தது. சர்ச்சைக்குள்ளாகியிருந்ததிலிருந்து உலகம் முழுவதும் இவரது நூலுக்கு ஏகப்பட்ட கிராக்கி. இத்தனைக்கும் இவர் மதத்துக்கு எதிரான கருத்தை எழுதியதாகவும் தெரியவில்லை.. அன்னை மரியாளை ஒரு விடுதலைப் பெண்ணாகவே சித்திரிக்கிறார்.

பாப்பரசரின் அதிகாரத்துவம் தொன்மையானது, பாரம்பரியமானது. அமைதியானது. ஆனால் அது இன்றும் வலிமை வாய்ந்தது. உலகின் ஏகாதிபத்தியங்களைக்கூட தன்னை மீறி விடாத வகையில் அவற்றின் மீது செல்வாக்கு செலுத்தும் வலிமை இதற்கேயுரியது. "பாப்பரசரின் அதிகார பீடம் மானுடனது அல்ல இறைவனதே. முழு அண்டத்தையும் புதுப்பித்துக்கொண்டேயிருக்கும் அதிகாரம் அவருக்கேயுரியது" பாப்பரசர் குறித்து ரோமன் கத்தோலிக்க அகராதியில் இப்படித்தான் குறிக்கிறது. இது இன்னும் செல்லுபடியாகும்.

வண.பாலசூரிய எழுதிய நூல் பற்றி முதல் முதலில் இலங்கை கத்தோலிக்க சபையினரே பிரச்சினை கிளப்பினர். அதில் குறிப்பிட்ட சில விடயங்கள் சபையின் கற்பித்தலுக்கு எதிர் விரோதமெனக் கூறி அந்நூலை முதலில் தடை செய்தனர். இதன் பின்னர் தான் ரோமில் பாப்பரசரால் பிரச்சினைக்குள்ளாக்கப்பட்டது. பாப்பரசரின் செய்தியே இறுதியானது. அதுவே இறைவனது செய்தியும். கத்தோலிக்கர்களின் நம்பிக்கையும் அதுவே. எனவே வண.பாலசூரியவின் பாதிரிய சீருடை பாப்பரசரின் தீர்மானத்திற்கிணங்கவே அகற்றப்பட்டது.

இன்று அவர் அத்தீர்மானத்துக்கு எதிராக போராடத் தயாராகி விட்டார். இங்கு முக்கியமாக ஒன்று கவனிக்கப்பட வேண்டும். அவரது போராட்டம் கத்தோலிக்க இறையியலுக்கு எதிரான போராட்டமல்ல. மாறாக அவர் மீது எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கு எதிரான போராட்டமே. ஜனநாயக விரோத ரீதியிலேயே அவர் மீது தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன. அதன் போது "இறையியல்", "மரியாள்" என்பன குறித்தும் சிலபல கேள்விகளை எழுப்புகிறார். அக்கேள்விகள் மரபு வழி கத்தேலிக்க நடைமுறைகளுக்கு சற்று சவாலான ஒன்று தான்.

"யேசு கிறிஸ்துவின் தாயாரான மரியாள் சூசையுடன் விவாகம் புரிந்திருந்த போது விவாகத்தின் முன்னரே மரியாள் கர்ப்பம் தரித்திருந்ததை அறிந்த சூசை மரியாளை விட்டு விலக தீர்மானித்திருந்த வேளை இறை தூதர்கள் கனவில் வந்து "தாவீதின் புதல்வனான சூசையே உனது மனைவியாகிய மரியாளை ஏற்க தயங்கத் தேவையில்லை. ஏனெனில் அவள் இறைவனால் கர்ப்பம் தரிக்கப்பட்டவள்."

"இதோ கன்னியொருவள் கர்ப்பமுற்று குழந்தையையும் பெறுவாள்"

இந்த விடயங்களை கிரமமாக வண.பாலசூரியவின் நூலிலும் குறிப்பிட்டு அதனை தர்க்கிக்கிறார். அதன் மூலம் அவர் மரியாளை மூன்றாம் உலகின் விடுதலைப் பெண்ணாக சித்திரிக்கிறார். இதறகூடாகத்தான் மூன்றாம் உலக நாட்டு மக்கள் மத்தியில் மதக்கருத்தினை முன்கொண்டு செல்லலாம் என்பது வண.பாலசூரியவின் போக்கு. ஆனால் மார்க்சீய சக்திகள் திருச்சபைக்குள்ளிருந்தே உயிர்த்தெழும் செய்கையாகவே இதனைக் கருதியது.

குறிப்பிட்ட நூல்பற்றி திருச்சபைக்கும் வண.பாலசூரியவுக்குமிடையில் கடந்த வருடங்களாக நீண்ட தொடர் விவாதம் நடந்து வந்துள்ளது. இதில் பெரும்பாலும் நூல் பற்றிய வாதத்தைவிட திருச்சபை இவ்விடயத்தில் நடந்து கொண்ட முறை பற்றியே அக்கறை கொள்ளப்பட்டதாக தெரிகிறது.

இது பற்றி சரத் பெர்ணாண்டோ, நிவ்டன் பெர்ணாண்டோ ஆகிய இரு பாதிரிமார் வெளியிட்ட துண்டுப் பிரசுரமொன்றில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. "...அவர் பிழையான கருத்தொன்றை கொண்டுள்ளாரெனில் அதனை விசாரணையொன்றில் நிருபிக்குமாறு இலங்கை கத்தோலிக்க தலைவர்களிடமும் ரோம கத்தோலிக்க தலைமையிடமும் ஆயிரக் கணக்கான தடவை கேட்டுள்ளோம். அதனை சபையினர் உதாசீனம் செய்தே வருகின்றனர். அவர் ஒரு மூன்றாம் உலக நாட்டவர் என்பதால் தான் அவரும் அவரது கருத்துக்களும் நிராகரிக்கப்பட்டு வருவதாக சில எழுத்தாளர்கள் குறிப்பிடுகின்றனர்...

வண.பாலசூரியவை திருச்சபைக்கு நம்பிக்கையை உறுதி செய்வதற்கான அறிக்கையொன்றில் கையெழுத்திடுமாறு வத்திக்கான் ஆணையிட்டிருந்தது. ஆனால் அவ்வறிக்கையில் பெண்கள் மதகுருவாக ஆவதற்கு முடியாதென இயேசு கிறிஸ்துவினால் சொல்லப்பட்டிருப்பதாகவும் கத்தோலிக்கர்கள் தவிர்ந்த வேறெவருக்கும் இரட்சிப்பு என்பது இல்லை என்றும் கூறப்பட்டிருப்பதால் அவ்வறிக்கையை தன்னால் மனச்சாட்சிக்கு விரோதமாக ஏற்றுக்கொண்டு கையெழுத்திட முடியாது என்றும் கூறியுள்ளார்.

இதன் பின்னர் மதக்கோட்பாடுகளை நிராகரித்துவிட்டாரென்று இலங்கை கத்தோலிக்க சபையினர் பிரச்சாரம் செய்தனர். அது வெளியிடும் பத்திரிகைகளான (messanger) மெசேன்ஜர், பிரதீபய ஆகியவற்றிற்கூடாக இது பிரச்சாரப்படுத்தப்பட்டது. இது குறித்து சரிநிகருக்கு கருத்து தெரிவித்த வண.பாலசூரிய அவர்கள், "என் மீதான அவதூறுகளுக்கு நான் பதில் எழுதியும் கூட அப்பத்திரிகைகள் அதனைப் பிரசுரிக்கவில்லை. வாதம் நடந்து கொண்டிருக்கையில் சரியான நிலைப்பாட்டுக்கு வாசகர் வருவதற்கு உள்ள உரிமையை இதன் மூலம் அவர்கள் மறுத்துள்ளனர்." என்றார்.

மேலும் வண.பாலசூரிய திருச்சபைக்கும் தனக்குமிடையில் நடந்த விவாதத்தை தொகுத்து மூன்று பகுதிகளாக வெளியிட்டுள்ளார். அதில் "முடிவுறா விவாதம்" எனும் நூலில் இப்படிக் குறிப்பிடுகிறார்.

"திருச்சபை கடந்த கால தவறுகளினால் ஐதீக மத, கலாசாரங்களை எதிரிகளாகவே மக்கள் காண்கின்றனர். நாம் அவற்றிலிருந்து மாறுபட்டவர்கள் எனக் கூறுவதன் மூலம் மட்டும் எமது பண்டைய செய்கைகளுக்கு மன்னிப்புப் பெற்று விட முடியுமா? கடந்த காலத் தவறுகளை இனங்கண்டு அவற்றை திருத்தும் வழியைக் காண வேண்டாமா?

சில சந்தர்ப்பங்களில் எமது பிழைக்கான விலையையும் கொடுத்தாக வேண்டுமல்லவா? ஆகக்குறைந்தது அறிவார்ந்த விலையாவது கொடுக்க வேண்டுமல்லவா? எமக்குள் "கலிலியோ" கறை இருந்ததல்லவா?

மதங்களுக்குள் சிறைப்பட்டிருக்கும், பெண்கள் கிரமமாக அடிமைப்பட்டு வரும் நிலையில் சபை அதிலும் கவனம் செலுத்தியே ஆக வேண்டும். இப்பெண்கள் அடிப்படைவாத மதங்களில் பால் சமத்துவத்தை வேண்டி நிற்கின்றனர்.

இலங்கை உட்பட ஆசிய நாடுகள் பலவற்றில் இறையியலும் அடிப்படைவாதமும் நாளுக்கு நாள் பெருகி வருகிறது. அதுபோல இன்று இளம் சந்ததியினர் எல்லாவற்றையும் மிகவும் ஆழமாக கேள்விக்குட்படுத்துகின்றனர். இளம் தலைமுறையினரில் சிலர் மதங்களிலிருந்து அந்நியப்பட்டு தனிமைப்பட்டுள்ளனர். யதார்த்த வாழ்விலிருந்து அந்நியப்பட்ட சம்பிரதாய மதங்களை விமர்சிக்கிறார்கள். குறிப்பாக மதங்களில் காணப்படுகின்ற பொய்மையான மூடக் கருத்தியலையும் ஆதிக்க சக்திகளுக்கு மதம் துணை போவதையும் கண்டிக்கின்றனர்....

சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி கட்டுப்படுத்துகின்ற பொருளாதாரம், கலாசாரம், ஏகாதிபத்தியம் போன்ற நவீன ஆக்கிரமிப்புகளுக்கு எமது மக்கள் சிக்கிவிடவில்லையா?

காணாமல் போனோரின் தாய், பிள்ளைகள், 1980 ஜூலை வேலை நிறுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மரியாள் கூறும் செய்திதான் என்ன?

எனவே திருச்சபை மட்டத்தில், விரிந்த தளத்தில் கருத்தாடல்கள் நடத்தப்பட வேண்டும். பொருத்தமான கருத்தாடல், இன நல்லிணக்கம், மனித உரிமை, கிராமிய மக்கள் தொழிலாளர், மீனவர்களுக்கு நியாயம் கிடைக்கச் செய்தல், மத்திய கிழக்கு தொழிலாளர்கள், பாலியல் சமத்துவம், பெண்கள் மீதான நியாயங்கள், சுதந்திர வர்த்தக வலய பெண்கள், சிறுவர் உரிமை, சுற்றுச் சூழல் என்பன குறித்து இந்த தேடல்கள் நடக்க வேண்டும். இலங்கையில் எந்தச் சபையிலாவது "பெண்ணிய இறையியல்" குறித்த பாடத்திட்டம் உண்டா?...

கத்தோலிக்க ஆணைக்குழு பெண்கள் இறையியல் குழுவுடன் கருத்தாடுவது உகந்தது. எமது நாட்டில் உள்ள பல்மத, சுரண்டும் சமூக அமைப்பில் பெண் விடுதலை தொடர்பாக இறையியல் ரீதியிலான முன்னெடுப்புகளை செய்ய இலங்கைப் பெண்கள் அணி திரண்டுள்ளனர்."

என்கிறார் வண.பாலசூரிய அவர்கள்.

வண.பாலசூரிய கத்தோலிக்க இறையியலுக்குள் சீர்திருத்த முயற்சிகளை மேற்கொள்பவராகவே காண முடிகிறதே தவிர மற்றும் படி பெரிய அளவில் மத சித்தாந்தத்தின் அடிப்படையை கேள்விக்குட்படுத்தியவரல்லர்.

1987ஆம் ஆண்டு ஜே.ஆர் ஆட்சிக் காலப்பகுதியில் தலைமறைவாகவிருந்த ஜே.வி.பிக்கும் அரசாங்கத்துக்குமிடையில் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையில் மத்தியத்துவம் வகித்து பாடுபட்டவர் வண.பாலசூரிய. பிரேமதாச ஆட்சிக்காலப்பகுதியில் கொல்லப்பட்ட இளைஞர்களுக்காக குரல் கொடுத்தவர். சமூகத்தில் காணப்படுகின்ற பல்வேறு அடக்குமுறைகள் தொடர்பாகவும் குரல் கொடுத்து வந்தவர். அவை பற்றி அதிக நூல்களையும் எழுதியிருப்பவர். இன்றும் Social "Jusfice", "சாதாரணய" ஆகிய பத்திரிகைகளின் ஆசிரியராகவும் கடமையாற்றிவருகிறார்.

இவர் இன்று கத்தோலிக்க திருச்சபையை நோக்கி எழுப்பியுள்ள கேள்வி புதிய கருத்தாடல் தளமொன்று மேலெழும்பி வருவதை காட்டுகிறது. அது தற்கால சூழலில் மிகவும் அவ்சிய அவசரமானது என்பது மட்டும் உண்மை. இது ஏனைய மத சித்தாங்களை நோக்கியும் திருப்பப்பட வேண்டும்.



'மா பெரும் விஞ்ஞானிகளுக்கு' எதிராக போப்பும், திருச்சபையும், ஏனைய பாதிரிகளும் நடத்திய பயங்கரவாத நடவடிக்கைகளை அறியும் நாகரீக உலகின் மனிதர்கள் எவரும் வெட்கப்பட வேண்டும்; கோபம் கொள்ள வேண்டும்

- அறுவை சிகிச்சையின் போதும், பிரசவத்தின் போதும் வலி தெரியாமல் இருப்பதற்காக பயன்படும் குளோரா ஃபார்ம் எனும் மயக்க மருந்தை இங்கிலாந்தைச் சேர்ந்த ஜேம்ஸ் யங் சிம்ஸன் சென்ற நூற்றாண்டில் கண்டுபிடித்தார். இதற்கு திருமறையில் ஆதாரமில்லையே என்று கடுமையாக எதிர்த்தார்கள் பாதிரிமார்கள். 'கஷ்டத்தில் நீ குழந்தை பெறுவாய்' எனும் பைபிளின் வாக்கியத்தைக் கொண்டு தாய்மார்களின் பிரசவத்தின் போது மயக்க மருந்து பயன்படுத்தக்கூடாது அப்போதுதான் தாய்ப்பாசம் இருக்க முடியும் என வற்புறுத்தினார்கள்.
- இரத்தத்தை வகை பிரித்து இரத்த வங்கியில் சேமிக்கப்படும் முறையினால் உலகமெங்கும் பலகோடி மனித உயிர்கள் காப்பாற்றப்படுகின்றன. மனித இரத்தம் பற்றிய ஆய்வை நடத்திய 'குற்றத்திற்காக' செர்வெட்டஸ் எனும் விஞ்ஞானி கழு மரத்தில் ஏற்றி உயிருடன் கொளுத்தப்பட்டார். பரமபிதாவின் புனிதம் காக்க இந்த தண்டனை வழங்கியவர் கால்வின் என்ற புராட்டஸ்டன்ட் பாதிரியார்.
- தேவனின் மகிமை கூறி ஆவி எழுப்ப, விமானமேறி உலகைச் சுற்றிச்சுற்றி வருகிறார்கள் சுவிசேசத்தின் ஊழியர்கள். தேவனின் செய்தியை திருச்சபையின் விண்கோள்கள் பூமி உருண்டையின் மீது பொழிந்த வண்ணம் உள்ளன. ஆனால் உலகம் உருண்டையானது. தட்டையானதல்ல, பூமி சூரியனைச்சுற்றிவருகிறது என்று சொன்ன கியார்டனே புருனோவை உயிரோடு கொளுத்தினார்கள் கத்தோலிக்க மத குருமார்கள்.
- வானுலகக் கோள்களின் சுழற்சி பற்றிய தனது கண்டுபிடிப்பை 36 ஆண்டுகளுக்கு முன்பே நூலாக எழுதியும், திருச்சபையின் கொலை வெறிக்குப் பயந்து போன கோப்பர் நிகஸ் இறுதியில் தனது மரணப்படுக்கையில் இருந்து வெளியிட்டார்.
- பூமியின் இயக்கத்தையும், சூரியனைச் சுற்றி வருவதையும் கண்டு சொன்ன கலிலீயோ திருச்சபையினால் சித்திரவதை செய்யப்பட்டார். அவரது சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டன. இதனால் கலிலீயோ விவிலியத்தின் 'உலகம் பற்றிய உண்மைகளை' ஏற்று தன் கண்டுபிடிப்புகளை மறுக்க வேண்டியிருந்தது. கலிலீயோவின் தொலைநோக்கியை சாத்தானின் கருவிகள் என்றார்கள் கிறிஸ்தவ பாதிரிகள்.
- கி.பி. 370இல் அலெக்சாண்டிரியாவில் (இன்றைய கெய்ரோ நகரம்) அரும்பாடுபட்டு சேர்த்து வைத்த நூலகத்தையும், அருங்காட்சியகத்தையும் ஆர்ச் பிஷப் சிரில் தலைமையிலான பாதிரிப்படை சூறையாடிக் கொளுத்தியது. நூலகத் தலைவரும் பெண் விஞ்ஞானியுமான ஹைப்பேஷியாவை சித்திரவதை செய்து கொளுத்தினார்கள்.

விஞ்ஞானிகளை வேட்டையாடிய திருச்சபையின் இரத்தக்கறை படிந்த வரலாற்றின் ஒரு சில துளிகள் தான் இவை. அனைத்துலக பாதிரிகளின் எண்ணிக்கையை விட அவர்கள் இழைத்த குற்றங்களின் எண்ணிக்கை அதிகமானதாகும்.

கூன்விழுந்த முதுகுடன், மண் புழுவை மட்டும் மணிக்கணக்காகப் பார்த்துக்கொண்டிருப்பார் டார்வின். தான் கண்ட மயக்க மருந்தை சோதனை செய்ய தன்னுடம்பையே கருவியாக்கி பல தடவை மயக்கமடைந்தார் சிம்ஸன். எந்த உண்மையையும் சோதித்தறிய அலைந்து திரியும் கலிலீயோ தன் சொந்த வாழ்வின் எழிலைத்துறந்தார். மரணப்படுக்கையிலும் கூட கோள்களின் அமைப்புப்பற்றி 'பிதற்றிக்' கொண்டிருந்தார் கோப்பர்நிகஸ். உயிரோடு கொளுத்தப்பட்ட போதும் விவிலியத்தின் முட்டாள் தனத்தை ஏற்க மறுத்தார் புருனே.

எதிர்காலத்தில் திருச்சபை தமக்கு அங்கீகாரம் வழங்கும் என்ற நம்பிக்கையிலா இவர்கள் தங்களை வருத்திக்கொண்டார்கள்?

குடல்வால் அறுவைச்சிகிச்சைக்காக வாடிகனில் 3 ஆண்டுகளுக்கு தலைமறைவாகவிருந்தார்.

போப் சிம்ஸனின் ஆவியும், செர்வெட்டஸின் ஆவியும் போப்பிடம் வந்து நியாயம் கேட்டதோ! குளோரோஃபார்மும் இரத்தமும் கிடையாது என மறுத்திருந்தால் போப்பின் கதி என்ன? அறிவியலின் ஒழுக்கம் அவ்வாறு செய்ய அனுமதிக்கவில்லை. ஆனால் கருணையே உருவான கடவுளின் ஒழுக்கம்தான் அதை அனுமதிக்கிறது.

விஞ்ஞானம் வளர்ந்து விட்டதால் பூவுலகின் ஒழுக்கம் கெட்டுப்போய்விட்டது என்று இறுதி அஸ்திரம் ஒன்றை ஏவுகிறார்கள் பைபிளின் ஒழுக்கசீலர்கள். அதாவது களிமண்ணிலிருந்து ஆதாம் தோன்றினான் என்றால் ஒழுக்கம். பரிணாம வளர்ச்சி என்றால் ஒழுக்கக் கேடு. பூமி தட்டை என்றால் ஒழுக்கக்கேடு. அதாவது பொய்யும், முட்டாள்தனமும் ஒழுக்கம். உண்மையும், பகுத்தறிவும் ஒழுக்கக் கேடு.

இரத்தக்கறை படிந்த வரலாறு திருச்சபைக்கு மட்டும் சொந்தமானதல்ல; பார்ப்பன இந்து மதமும், இஸ்லாமும் தனித்தனியே வேத புத்தகங்கள் வைத்திருந்தது போலவே தங்கள் சொந்தக் கழு மரங்களையும் நிறுவியிருந்தார்கள்.

நன்றி. புதிய கலாசாரம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# குழந்தைகளுக்கும் உங்களுக்குமிடையே...22

நாகரீகம் பெற்றோர்களுக்கு ஒரு 'சட்டாம்பிள்ளை'யின் பாத்திரத்தை வகிக்கும் படி செய்துள்ளது. குழந்தையின் பெரும் சந்தோசங்களில் பலவற்றிற்கு 'வேண்டாம்', 'இல்லை', 'கூடாது' போன்ற மறுப்புக்களைத் தெரிவிப்பது அவர்களது கடமையாகிவிட்டுள்ளது. 'பெரு விரல் சூப்பிறேல்லை', 'ஆணுறுப்பில் தொடக்கூடாது', 'மூக்கு தோண்டக்கூடாது', 'கக்கா (மலம்) வுடன்விளையாடக்கூடாது', 'சத்தம் போடப்படாது' போன்ற உத்தரவுகளை சில உதாரணங்களாகக் கூறலாம். சிறு குழந்தைகளைப் பொறுத்தவரை நாகரீகம் என்பது மிகவும் கொடுமையானதாகும். மிகவும் மென்மையான தாயின் மார்பகத்திற்குப்பதில் அது ஒரு கடினமான 'கப்'பை(Cup) வழங்குகிறது. சுதந்திரமான கழிவகற்றலுக்குப் பதிலாக அது சூடான கழிவு தாங்கக்கூடிய அரையாடையை(Diapers) வழங்குகிறது. அல்லது ஒரு கழிவறையை வழங்கி சுயகட்டுப்பாட்டுக்கு நிர்ப்பந்திக்கிறது!

குழந்தை ஒரு சமூகப்பிராணியாக இருக்கவேண்டுமாயின் சில கட்டுப்பாடுகள் தவிர்க்க முடியாதவை. ஆனாலும் பெற்றோர்கள் ஒரு பொலிஸ்காரனின் பாத்திரத்தை ஏற்று இந்த விடயத்தில் அளவுக்கதிகமாக செயற்படக்கூடாது. தவிர்க்கக்கூடிய வெறுப்பையும் சச்சரவையும் உருவாக்குவதில் அவர்கள் ஈடுபடக்கூடாது.

### காலை வணக்கம்

பாடசாலைக்கு போகும் ஒரு குழந்தையை ஒவ்வொரு காலையிலும் துயிலெழுப்புபவர் தாயாக இருக்கக் கூடாது. தனது தூக்கத்தையும் அதன் கனவுகளையும் குழப்பும் ஒரு தாயையிட்டு குழந்தை எரிச்சலடைகிறது. தனது அறைக்கதவைத் திறந்து கொண்டு உள்ளே வரும் தாயார் தனது போர்வையைப் பிடித்து இழுப்பதையும், 'எழுந்திரு நேரமாயிட்டுது' என்று கூறுவதையும் அது வெறுக்கிறது. ஒரு மணிக்கூட்டு 'அலாம்' (Alarm) ஓசைமூலம் துயிலெழச்செய்வது, 'அலாம்' அடிப்பது போல வந்து தாயார் எழுப்புவதை விட சிறப்பானதாகும். ஜிவோனிக்கு வயது எட்டு. அவளுக்கு காலையில் படுக்கையை விட்டு எழுந்திருப்பது என்பது மிகவும் கஷ்டமான ஒரு காரியம். ஒவ்வொரு நாளும், முடிவேயில்லாத ஒரு சில நிமிடங்களுக்கு படுக்கையில் படுத்திருக்கவே அவள் விரும்புவாள். தாயார் இனிமையாக இருந்தாலும் சரி, கடுமையாக இருந்தாலும் சரி ஜிவோனி தொடர்ந்தும் அதிக நேரம் படுக்கையிலிருப்பதையே விரும்பினாள். ஆறுதலாக எழுந்தாள்; காலைச் சாப்பாட்டில் சந்தோசமாக இல்லாமல் இருந்தாள். பாடசாலைக்கு காலம் தாழ்த்தியே போனாள். நாளாந்தம் எழும் வாக்குவாதங்களால் தாய் களைப்பும் எரிச்சலும் அடைந்தாள்.

ஆனால், தாயார் கொடுத்த ஒரு எதிர்பாராத பரிசுப்பொருள் அவளில் ஆச்சரியப்படத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தியது. அப்பரிசு,வேறொன்றுமில்லை, மின்சாரத்தில் இயங்கும் ஒரு 'அலாம்' மணிக்கூடு. அந்தப்பரிசுப்பொருள் இருந்த பெட்டியில் தாயாரின் பின்வரும் குறிப்பு ஒன்று இருந்தது:

*'அதிகாலையில் தன்னை யாரும் எழுப்புவதை விரும்பாத ஜிவோனிக்கு, இப்போது உனக்கு நீயே அதிகாரி. உன்னை நீயே எழுப்பிக்கொள்ளலாம்...'* அன்பு அம்மா.

ஜிவோனி ஆச்சரியமும் சந்தோசமும் ஒருங்கே பெறப்பெற்றவளாக கேட்டாள்.

''யாரும் எழுப்புவது எனக்குப் பிடிக்காது என்று எப்படி உங்களுக்குத் தெரியும்?''.

''நான் ஊகித்தேன்''- தாயார் புன்னகையுடன் கூறினார்.

அலாம் மணிக்கூடு மறுநாட் காலை அலறிய போது தாயார் சொன்னார்:

'' இது சரியான வெள்ளன... இன்னும் கொஞ்ச நேரம் நீ தூங்கலாம் குஞ்சு ''

படுக்கையிலிருந்து துள்ளிக் குதித்தபடி ஜிவோனி சொன்னாள்:

'' இல்லை... எனக்கு பள்ளிக் கூடத்திற்கு 'லேற்றாப்' போம்!''

அதிகாலையில் எழுப்ப முடியாத ஒரு குழந்தையை நாம் சோம்பேறி என்று அழைக்கக் கூடாது. உடனடி



## குழந்தையின் வாழ்வில் ஒரு நாள்!

மூலம்: டொக்டர் ஹெய்ம் ஜீ ஜீனோவ்ட்
தமிழில்: அருண்

யாக எழுந்து தயாராகாததற்காக, அதற்கு இவ்வாறு பட்டம் சூட்டவும் கூடாது. அதிகாலையில் எழுந்து மகிழ்ச்சியாக இயங்க தொடங்குவதற்கு கஷ்டப்படும் குழந்தைகளை நாம் சிறுமைப்படுத்தக்கூடாது. அவர்களுடன் சண்டைக்குப் போவதை விட அவர்களுக்கு பொன்னான இன்னொரு 10 நிமிட தூக்கத்தையோ பகல் கனவையோ அனுமதிப்பது நல்லது. அலாம் மணிக்கூட்டை ஒரு பத்து நிமிடங்கள் முன்கூட்டியே அடிக்குமாறு செய்வதன் மூலம் இதனைச் சுலபமாகவே செய்துவிட முடியும். குழந்தையின் தூக்கம் தொடர்பான எமது சொற்கள் ஆத்திரத்துடனோ, ஏளனத்துடனோ அல்லது அதன் உடல்நலம் சம்பந்தப்பட்டதாகவோ வருவதைவிட அதற்கு அனுதாபம் காட்டுவதாக அமைய வேண்டும்.

''காலையில் எழுந்திருப்பது கஷ்டம்தான்!''

''படுக்கையில் படுத்தபடி கனவு காண்பது எவ்வளவு சுகமானது''

''இன்னொரு ஐந்து நிமிடங்கள் எடுத்துக்கொள்''

இத்தகைய சொற்கள் காலை வேளையை சந்தோசமுள்ளதாக்கி விடும். அவை சுமுகமானதும் சந்தோசமானதுமான ஒரு சூழ் நிலையை தோற்றுவிக்கின்றன. மாறாக கீழேயுள்ள சொற்கள் எரிச்சலும்புகைச்சலும்நிறைந்த ஒரு சூழலை உருவாக்கிவிடும்.

''எழும்பு.. சோம்பேறி மாடு..''

''உடனடியாக படுக்கையை விட்டு எழும்பிட வேணும்''

''கடவுளே.... நீ இன்னொரு கும்பகர்ணன்''

இது போலவே, ''ஏன் இன்னமும் படுக்கையில் இருக்கிறாய்.... சுகமில்லையா உனக்கு... உனக்கு பல் வலிக்கிறதா? தலையிடியா? நாக்கை காட்டு பாப்பம்...'' போன்ற கேள்விகளும்கூட நல்லவை அல்ல. படுத்திருப்பதற்கான வாய்ப்பை சுகயீனமாக இருப்பதன் மூலம் பெற்றுவிடலாம் என்ற எண்ணத்தை அது குழந்தைக்கு ஏற்படுத்துகிறது. அத்துடன் தாயார் சொல்லும் இவற்றில் ஏதாவது ஒன்று தனக்கு இல்லையென்று சொன்னால் அது தாயாரை ஏமாற்றத்துக்குள்ளாக்கி விடுமோ என்று குழந்தையை எண்ணத் தூண்டுகிறது. தாயாரை சமாளிப்பதற்காக குழந்தை தனக்கு சுகயீனம்தான் என்று சொல்லி விடுகிறது.

### அவசரமான நேரம்.

குழந்தையை அவசரப்படுத்தினால், அது அதிக நேரத்தை எடுக்கின்றது. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பெரியவர்கள் ''கெதியா, கெதியா'' என்று அவசரப்படுத்துவதை எதிர்ப்பதற்காகவே அது தனது வேலைகளை ஆறுதலாகச் செய்கின்றது. குழந்தைக்காக நாம் போட்டிருக்கும் அதற்குச் சம்பந்தமற்ற ஒரு நேர அட்டவணைக்காக அதனை நாம் அவசரப்படுத்தும் போது, அது வேகமாக செய்கிற காரியம் என்னவென்றால் வேகமற்ற முறையில் இயங்குவதுதான்!

குழந்தையை நாம் அவசரப்படுத்துவது கூடாது. பதிலாக அதற்கு நியாயமான அளவு நேரத்தை வழங்கி அந்த நேரத்திற்குள் தயாராகி விடுகின்ற சவாலை எதிர்கொள்ள அதை அனுமதிக்க வேண்டும்.

''பாடசாலைக்கு போகும் பஸ் இன்னமும் 10 நிமிடத்தில் இங்கு வந்துவிடும்''

''படம் தொடங்குகிறது இரண்டு மணிக்கு. இப்ப நேரம் ஒன்றரை''

''இரவுச் சாப்பாடு எட்டுமணிக்கு வழங்கப்படும். இப்ப நேரம் ஏழரை''

''உன்னுடைய விருந்தினர் இன்னமும் 15 நிமிடத்தில் இங்கு வந்து விடுவார்''

இத்தகைய சுருக்கமான வசனங்களின் நோக்கம் என்னவென்றால், அந்தக் குறிப்பிட்ட நேரத்திற்குள் அக்குழந்தை தயாராகி விடவேண்டும் என்ற எமது எதிர்பார்ப்பும் நம்பிக்கையுமாகும்.

### காலைச்சாப்பாடு.

காலைச்சாப்பாட்டு நேரம் குழந்தைக்கு அறிவு புகட்டவோ, ஒழுங்கு முறைகளையும் மேசை நாகரிகத்தையும் போதிப்பதற்கான நேரமோ அல்ல. எங்கள் வீடும், அடுப்படியும், சாப்பாட்டறையும் மிகவும் சந்தோசமான சூழலையும் நல்ல சாப்பாட்டையும் கொண்ட ஒன்றாகும் என்பதை புரியவைக்கிறதற்கு உகந்த நேரம் இதுவாகும். பொதுவாக காலைச்சாப்பாட்டு நேரம் நீண்ட உரையாடலுக்குரிய நேரமும் அல்ல. பெரும்பாலும் பெற்றோரோ குழந்தைகளோ தூக்கம் கலையாதவர்களாகவும் திருப்தி அற்றவர்களாகவும் இருக்கக் கூடும். வாக்குவாதங்கள் பெரும்பாலும் பெரும் வெறிகொண்ட சண்டைக்குஇட்டுச்சென்று விடுகின்றன.

மதிம்-

## பங்களாதேஷ்: சாவு மலிந்த தேசம்!



பங்களாதேஷ் என்றதும் எமக்கு புயல், வெள்ளம் போன்ற இயற்கையனர்த்தங்களே உடனடி ஞாபகத்திற்கு வரும். இது போக, எப்பவும் சச்சரவுப்பட்டுக்கொண்டிருக்கிற அரசியல் நிலைமைகளும், தஸ்லீமா நஸ்ரீனும் ஞாபகத்திற்கு வருவார்கள். தஸ்லீமா நஸ்ரீனை இப்போது நாம் மறந்து கூடப்போய்விட்டோம்.

சரி, இதெல்லாம் போகட்டும். நாம் பங்களாதேஷ் சினிமாப் பக்கம் கொஞ்சம் திரும்புவோம். நிச்சயமாக இந்திய துணைக்கண்டத்து நாடுகளது சினிமாக்கள் இந்தியச் சினிமாத்துறையின் பாதிப்பின்றி இருக்காது என்பதை நாம் ஊகிக்கலாம். இந்தப்பாதிப்பு பங்களாதேஷின் இளம் நடிகர் ஸல்மான் ஷாவின் விடயத்தில் மிகைத்து விட்டது போல் இருக்கிறது.

ஸல்மான் ஷா (25) பங்களாதேஷ் திரையுலகின் கனவுநாயகன். அதாவது தமிழக அஜித், அப்பாஸ், அரவிந்தசாமி, பிரசாந்த் வகையறா. இவர்கள் சக நடிகைகள் ரசிகைகளால் ஈர்க்கப்படுவதும், கிசுகிசுக்களில் அகப்படுவதும் வழமை. திருமணமான இவருக்கும் இன்னொரு நடிகைக்கும் தொடர்பிருப்பதாக மனைவிக்கு தெரியவர பிரச்சினை தொடங்கியுள்ளது. இந்தப்பிரச்சினையின் உச்சம் இவரை தற்கொலைக்கு கொண்டு போய்விட்டுள்ளது. தற்கொலை இவருடன் முடிந்து போகாததுதான் மகாதுயரம். இவரின் சாவைத்தாங்கமாட்டாத நான்கு மகாவெறிரசிகர்களும் தற்கொலை செய்து கொண்டுள்ளார்கள். இன்னும் பலர் தற்கொலைக்கு முயன்றுள்ளார்கள். இந்த நடிகனின் மரணம் பங்களாதேஷ் சினிமா வட்டாரத்தை கதிகலங்க வைத்துள்ளது. பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளை கண்காணிக்கத் தொடங்கியுள்ளனர். ஸல்மான்ஷா இறுதியாகநடித்த 'உண்மை சாவதில்லை' என்ற படம் திரையரங்குகளை நிரம்பிவழியச் செய்துள்ளது.

சம்பவங்களை விடுவோம். இதன் பின்னாலுள்ள குறிப்பாக தென்கிழக்காசிய நாடுகளின் அரசியல் சினிமாக்களுக்குப் பின்னால் நோக்கிற இவ்வாறான அவலங்களைப் பார்ப்போம். ஏன் இந்த உடன்கட்டை, சாவுக் கலாசாரம் எம் அண்டைநாடுகளுக்கு மட்டும் சொந்தமாயிருக்கிறது? இங்கு மட்டுமேன் இத்தகைய கலாசார சீரழிவுகள் ஏற்படுகின்றன. எம் சமூகக் கட்டுமானங்களைப் பார்த்து நாம் தீவிரமாகக் கேட்கவும், விடை காணவும் வேண்டிய கேள்விகள் இவை.

## 'சரிநிகர் போன்றாவது இல்லை' -

### அ. மார்க்ஸ்

கலை, இலக்கிய மற்றும் அரசியல் துறைகளில் சிற்றிதழ்கள் வகிக்கும் பங்கே சிலாகிக்கப்படுகிறது. எம் நாட்டில் கலை, இலக்கிய சிற்றிதழ்களே அதிகமாக மிகக் குறைந்த ஆயுளோடு - வெளிவருகின்றன. இந்தியாவை அதாவது தமிழகத்தைப் பொறுத்தவரை புற்றீசல்கள் போல் சிற்றிதழ்கள் - இவைகளில் சிலதுக்கும் ஆயுள் குறைவுதான் - வெளிவருகின்றன. அதன் எண்ணிக்கை, கனதி என்பவை என்றுமே பிரமிப்பைத் தருவன.

எம்மவரிற் சிலர் இந்தியாவின் கல்வித்தரத்தை எவ்வளவுதான் மட்டந்தட்டிபேசினாலும், நம்முடைய 'தமிழ்ப்புத்திசாலித்தனத்துக்கான' அனைத்துத் தீனிகளும் தமிழகத்திலிருந்தே கிடைக்கின்றன என்பது உண்மை. மாற்றுக்கலாசார, அரசியல் தளங்களில், காந்திச்செயற்பாடான Living in Actionனோடு இருக்கிறார்கள் சிற்றிதழ்காரர்கள். இவர்களில் மிகவும் அவதானத்துக்குரியவர் அ. மார்க்ஸ், 'நிறப்பிரிகை' ஆசிரியர்குழுவைச் சேர்ந்தவர். நவ உலகின் சிந்தனைகளைத் தமிழுக்குத் தருவதிலும் நியாயமான உரிமைக்காய் குரல் எழுப்புவதிலும் முன் நிற்பவர். ஓயாது இயங்கியும், எழுதியும் கொண்டிருப்பதில் என்னை ஆச்சரியப் படுத்துபவர்களில் ஒருவர். இன்னொருவர் சி.சிவசேகரம். லண்டனிலிருந்து படைப்பிலக்கிய, விமர்சனத்துறைகளில் ஓயாது இயங்குபவர்.

தமிழகத்தின் எந்த (எமக்குக் கிடைக்கப்பெறுகிற) சிற்றிதழை, அல்லது ஆய்விதழை எடுத்தாலும் அ. மார்க்ஸின் எழுத்துக்கள் இருக்கும். இவரின் எழுத்துக்களும் மற்றைய சிற்றிதழ்காரர்களால் விமர்சிக்கப்படுவதும் மறுக்கப்படுவதும் உண்டு. அ.மார்க்ஸ் சார்ந்தவர்கள் சிலவேளை தீவிர நிலைப்பாடு எடுப்பதும் உண்டு. உ+மாக, இந்தியா டுடே சிறப்பிதழை மலம் துடைக்க பாவிப்பதென்ற தீர்மானம்.

எப்படியோ இவ்வாறாக மாற்று/ சிற்றிதழ்களும் சிற்றிதழ்காரர்களது ஓயாத இயக்கமும் என்னை பிரமிக்கச் செய்கின்ற வேளை அ. மார்க்ஸின் கீழ் வரும் கூற்று என்னை வியப்போடு சந்தோஷிக்கச் செய்கின்றது.... 'கவிதாசரண்' எனும் இதழில் நீண்ட கடிதம் ஒன்றில் இவ்வாறு எழுதுகிறார்.

*''மேலைச்சூழலில் நூற்றுக்கணக்கான மாற்றுப்பத்திரிகைகள் உள்ளன. அவை ஐம்பதாயிரத்திலிருந்து பல லட்சம் பிரதிகள் வரை விற்பனையாகின்றன. எதிர்க்கலாசாரக்காரர்கள் அங்கே தனி வானொலிநிலையம் நடத்துவதற்கு கூட உரிமை உண்டு. இங்கே நமக்கு அந்த வாய்ப்புக்கள் முற்றுமுழுதாக இல்லை. குறைந்தபட்சம் கொழும்பில் இருந்து வெளிவரும் 'சரிநிகர்' போன்ற அளவிலான இதழ்கள் கூட நம்மிடம் இல்லை. சிறுபத்திரிகைகளில் பெரும்பாலானவை 200, 300 பிரதிகளுக்கு மேல் விற்பனையாவதில்லை. வட்டம் சுருங்கச் சுருங்க சிறு பத்திரிகைகளிடம் ஒரு Elitist தன்மை வேறு வந்து விடுகிறது. கருத்துக்களை மக்கள் மத்தியில் கொண்டு செல்ல நம்மிடம் ஒருங்கிணைந்த இயக்கமும் இல்லை. கட்சிக்காரர்கள் நடத்தும் பத்திரிகைகள் பற்றியோ சொல்ல வேண்டியதில்லை....''*

இது தன்னடக்கமான வார்த்தைகளா!?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஈழத்து கவிதைப் போக்கும் மு.பொ.வின் விமர்சனமும்!

–கந்தையா ஸ்ரீ கணேசன்

ஈழத்து கவிதையுலகுக்கு இன்று தேவைப்படுவது என்னவென்று ஒரு மருத்துவனாக நின்று மு.பொ. அல்லது செ. யோகராசா கூறுவதை வைத்துக்கொண்டு ஈழத்துக்கவிஞர்கள் கவிதைப் போக்கைத் திட்டமிடுவதில்லை. அது இயல்பாய் சமூகத்தின் போக்கிலும் காலத்தின் கோலத்திலும் கருக்கொண்டு கவிஞனின் பிரதிபலிப்பாக அவனது இயல்பான எழுச்சியில் ஊற்றுப்போல் பெருக்கெடுக்கும். இந்த அடிப்படையைப் புரிந்து கொண்டும், 'தொன்மத்தில் கால் ஊன்றிய புதுமொழி' பற்றிப் பேசும் மு.பொ. சோலைக்கிளியின் கவித்துவத்தை ஒரு புறம் ஏற்றுக்கொண்டும் மறுபுறம் சோலைக்கிளியின் கவிதைப்போக்கு ஏற்கெனவே நீலாவணன், சு.வி, சேரன் ஆகியோரின் கவிதைகளில் காணப்பட்ட ஒன்றே என்றும் தமக்குள் முரண்படுகின்றார்.

*''பனியின் விழிநீர் துயரத்திரையில் பாதை மறையும் முன்னே/ பிணியில் தோயும் நிலவின் நிழல் நம் பின்னால் தொடரும் முன்னே''* என நீலாவணனும், *''விடுதலைக்குருவி தன் அலகிதழ் முனையில் எம்இருள்துயரெல்லாம் கிழிய வருகிறது'*' என சு.வியும் *''முகில்களின்மேல் நெருப்பு தன் சேதியை எழுதியாயிற்று''* என சேரனும் கொண்டு வந்த படிமங்களின் பாவனை இன்று சோலைக்கிளி முதலான பல ஈழத்து இளம் கவிஞர்களில் **முனைப்**பாக தோன்றுகின்றதே என்பதே எமது வாதம்.

2

சு.வியின் 'காலத்துயர்' பற்றிய கணைக்கால் இரும்பொறை எழுதிய விமர்சனத்தை மு.பொவின் கேள்விக்கு விடையாக வழிமொழிந்த எனது கட்டுரை இன்று மு.பொவினால் திசைதிருப்பப்பட்ட ஒரு விவாதத்தில் தொடர்ந்து நிற்கிறது. இதற்கு சிவசேகரமும், ரவீந்திரனும் (சுவிஸ்) தத்தமது பங்கிற்கு மு.பொவின் ஒரு பக்க வாதத்தைச்சுட்டிக் காட்டினர்.

உண்மையில் 'அகங்களும் முகங்களும்' தொகுதியை அளித்த சு.வியின் அடுத்த படைப்பின் கவிதா வீச்சுப் பற்றிய எமது கேள்வி, தவிர்க்க முடியாதபடி 90களில் புதிய போக்கை வரைந்து நின்ற சோலைக்கிளியின் கவிதைகளை மு.பொ. கூறுபோட்டு கழிப்பதில் வந்து நிற்கிறது. இது ஒரு வகையில் கவிதை வளர்ச்சிக்கு வேண்டியது தான்.

ஆனால் 'எழுத்து' காலத்து மாற்றத்துடனும் தருமு சிவராமுவின் கவிதைப் போக்குடனும் சமகால ஈழத்து கவிதை வளர்ச்சியை ஒப்பிட முனைந்தது மிக அபத்தமானது. 'எழுத்து' காலத்து சமூக அரசியல் பொருளாதார பகைப்புலமும் இன்றைய ஈழத்து கவிஞர்களின் பகைப்புலமும் எந்த வகையிலும் ஒப்புவமை உள்ளன அல்ல. மேலும் மு.பொ. கவிதையின் அரிச்சுவடியை கற்றுத்தர முனைந்தது அதைவிட அபத்தமானது. 'பூவைப்போன்ற பெண்' என்னும் உவமையை உலகில் ஒரு கவிஞன் கையாண்டு விட்டால் வேறு எவரும் அந்த உவமையைப் பாவிக்கக்கூடாது என்பது போலத்தான், 'மாடு சப்பிய சூரியன்' என சோலைக்கிளி எழுதி விட்டால் 'ஆடு சப்பிய சூரியன்' என இன்னொரு கவிஞன் எழுதக்கூடாது என்பதும். 'இடம் மாறிப் பாவிக்கப்படும் உருவகம்' என புது இலக்கணம் வகுக்கும் மு.பொ. அடிப்படையான ஒன்றை மறந்து விட்டார். அதாவது எல்லாவித கவிதை உத்திகளும் இடம் மாறிப் பாவிக்கப்படுபவையே. உதாரணமாக 'அவள் ஒரு பெண்பூ' என்று சொல்லும் போது பூவின் மென்மையை பெண்ணின் மென்மைக்கு இடம் மாற்றியே பாவிக்கின்றோம். இங்கு அஃறிணைப் பொருளின் மென்மையை உயர்திணைப் பொருளுக்கு இடம் மாற்றி உருவகம் ஆக்குகின்றோம்.

இந்த உருவக உத்தியை சோலைக்கிளி முழுவீச்சுடன் பாவிக்கின்றார் என்றால் தம்முள் முரண்பட்டுக் கொள்கிறார். '*நான் பாடப்பாடத்தான் வானம் நிலா செய்யும்* என்ற சோலைக்கிளியின் கவிதையை உதாரணம் காட்டியபோது ''இவ்வரிகள் ஒரு வேளை ஸ்ரீகணேசன், இரும்பொறை, ஆத்மா போன்றவர்களுக்கு புதிதாக கவித்துவத்தை இறுக்கிய ஒரு சட்டகமாக நவீன கவிதையாக இருக்கலாம்'' என்று நையாண்டி பண்ணி விட்டு கட்டுரையின் இறுதிப்பகுதியில் மேற்படி வரிகள் சோலைக்கிளியின் மற்றக் கவிதைகளை விடத் தரமானவை என்றும் ஏற்றுக் கொள்கிறார். இப்படி முரண்படுபவர் மாற்றம் ஏற்பட்டதா? இல்லையா? எனக் கண்டுபிடிக்கும் தகுதியை இழந்து விடுகின்றார்.

அடுத்ததாக சோலைக்கிளியின் அலையில் அள்ளுப்பட்ட பிற கவிஞர்கள் பற்றிய மு.பொவின் குறிப்புக்கு வருவோம். பாரதியை பிச்சமூர்த்தியை பாரதிதாசனை பின்பற்றி கவிஞர்கள் எழுதவில்லையா? கவிதை வரலாற்றிலேயே சோலைக்கிளி தான் பாவிக்கின்றார் என்றில்லை. கவித்துவமாக மனிதன் பேசத்தொடங்கிய போதே அது நிகழ்ந்து விட்டது. உதாரணமாக 'அவன் ஒரு மூஞ்சூறு' என்பது பேச்சு வழக்கில் காணப்படும் உருவகம். ஈழத்துக் கவிதை வரலாற்றிலும் ஏற்கெனவே உருவக உத்தி பாவனையில் உள்ள ஒன்று தான். எழுபதுகளில் மரபுக்குள் புதுமை செய்த மகாகவி, நீலாவணன், நுஃமான், முருகையன் ஆகியோரைத் தொடர்ந்து எண்பதுகளில் சேரன், ஜெயபாலன், சு.வி. முதலியோர் கண்டு கொண்ட மாற்றம் குறிப்பிடத்தக்கதொன்றாகும். '*முகில்களின்மேல் நெருப்பு தன் சேதியை எழுதியாயிற்று*' என சேரன் எழுதிய கவிதைக்கும், '*நான் பாடப் பாடத்தான் வானம் நிலா செய்யும்*' எனும் சோலைக்கிளியின் கவிதைக்குமிடையிலே கண்டு கொள்ளக்கூடிய மாற்றத்தை, சமூக மாற்றங்களை உணர்வுடன் உள்வாங்கும் இலக்கியவியலாளர்களால் தான் கண்டு கொள்ள முடியும். சுய உள்தேடல் என்பது சமூக மாற்றங்களைப் புறக்கணித்து கண்மூடியிருத்தல் அல்ல.

தொண்ணூறுகளில் ஏற்பட்ட மாற்றம் திடீரென ஏற்பட்டதல்ல. அது எண்பதுகளிலே சேரனில், சு.வியில் முளைவிட்டது தான். மு.பொ கூறும் இமயவன் தொடர்ந்திருக்கலாம். ஆனால் அவரின் தொடர்ச்சியை நாம் காணவில்லை. பாரதி தொடக்கிய ஞாயிறு, சக்தி போன்ற வசன கவிதைகளின் இன்னொரு பரிணாம வளர்ச்சி தான் இன்றைய ஈழத்து சோலைக்கிளியின் கவிதைகள். ஆனால் மு.பொ. தனது கட்டுரையில் வீணே ஏன் சேரனைப் பின்பற்றி செழியன், இளவாலை விஜயேந்திரன் போன்றவர்கள் எழுதவில்லையா? ஆனால் சுயதன்மையில் எழுதிய சு.வி, ஜெயபாலன், சண்முகம் சிவலிங்கம் மற்றும் கால மாற்றத்தோடு தம் கவித்துவப்போக்கையும் மாற்றிக்கொண்டு நின்று பிடித்த புதுவை, சிவசேகரம், முருகையன், தா. இராமலிங்கம் போன்றோர் தமக்கென ஒரு இடத்தை ஈழத்துக் கவிதை உலகில் பெற்றுக்கொள்ள பிரதி பண்ணியவர்கள் காலத்தோடு கரைந்து போனார்கள். ஆனால் இங்கு மு.பொ, சோலைக்கிளி என்ற கவிஞனின் இருப்பையே கொச்சைப்படுத்தும் வகையில் 'சூம்பிப் போன கவிஞன்' என்கிறார். இது அவரது ஆளுமையையே பிரதிபலிக்கிறது போலும்.

ஆனால் உண்மையில் அதுவல்ல. ஏனெனில், 'பனியில் மொழி எழுதி' என்ற சோலைக்கிளியின் பிந்திய கவிதைத் தொகுதிக்கு முன்னுரை எழுதிய எஸ்.வி.இராஜதுரை, வ. கீதா ஆகியோர் கூறுவது கவனத்துக்குரியது. ''போர் புறவாழ்வை மட்டுமல்ல, அகவாழ்வையும் அழிக்கிறது. நான்கு சுவர்களுக்குள் ஒருவனால் முடங்கிக் கொள்ள முடிவதில்லை. இங்கு சுவர்கள் நடக்கும், எழுந்து ஓட முயன்றாலோ வாசல் உதைக்கும். அவன் கோழி முட்டைக்குள் ஒளிந்து கொள்ளவும், சிறுபூச்சியின் மூக்குக்குள் புகலிடம் தேடவும் முயலுவான். எறும்பின் வயிற்றுக்குள் போயிருந்து வாழ்வதற்கும் அவன் விரும்புவான்''.

சோலைக்கிளியின் 'மழைப்பழத்துக்கு' முருகையன் 'மல்லிகை'யில் எழுதிய விமர்சனத்தையே மறுதலித்து 'அலை'யில் சு.வி. எழுதிய விமர்சனத்தை ஏற்றுக் கொள்ளும் மு.பொ, இன்று சு.வி என்ற கவிஞனின் கவிதைப் போக்கில் ஏற்பட்டிருக்க வேண்டிய கவித்துவத்தில் இயக்கவியல் மாற்றம் இல்லை என்கிற போது சீறிப் பாய்வதன் பின்னணி புரியவில்லை. 'முன்னணிக் கவிஞர்கள் தமது கவிதை சொல்லும் முறையில் தேக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளாமல் பார்த்துக் கொள்ளல் அவசியம்' என்று செ. யோகராசா கூறுவதை ஏற்றுக் கொள்ளும் மு.பொ இன்னும் 'மரணத்துள் வாழ்வோம்' எனும் தொகுதியுடனும் 'சொல்லாத சேதிகள்' தொகுப்புடனும் திருப்திப் பட்டுக்கொள்கிறார்.

இன்றைய இலக்கியவியலாளர்கள் பிறமொழிக் கவிதைகளில் பரிச்சயம் அற்றவர்கள்; ஆழமான விமர்சன நோக்கு இல்லாதவர்கள் எனக்கூற முனையும் மு. பொ. வானம்பாடிக் கவிதைகள் பற்றிக் கொண்டுள்ள நோக்கு இங்கு அலசப்பட வேண்டியது அவசியம். ''வானம்பாடிகள் கவிதைகள் தம் உடல் பூராவும் இரத்த புஷ்பங்களையும் நாங்கள் நீங்களையும் செருகிக் கொண்டன'' என்கிறார் மு.பொ. ஆனால் வானம்பாடிகள் பற்றி வீ. அரசு பின்வருமாறு கூறுகின்றார்.

''வானம்பாடிக் கவிஞர்கள் கவிதை கலையாக்கத்தில் உவமை, உருவகம், குறியீடு, படிமம் ஆகிய பல்வேறு பண்புகளுக்கும் நிறப்பண்பை பயன்படுத்தியுள்ளனர்... நிறத்தை அழகியல் உத்தியாக கொள்கையில், தொன்மையான கோட்பாடுகளை மட்டும் மனதில் கொள்ளாமல் இன்றைய நிலையில் மாறிவரும் சமுதாயத்தை ஒட்டிச் சிந்தித்து சமுதாய அழகியல் உணர்வுடன் நிறத்தைப் பயன்படுத்தி உள்ளனர்.''

*''நாங்கள் கோடியில் கிடக்கின்றோம், நீங்கள் மாடியில் இருக்கின்றீர்கள்''* என்கின்ற கவிதைக்கு ஒரு சமூக அரசியல் தேவை அக்கால கட்டத்தில் இருந்தது. இதனை விளக்க ஒரு ஆங்கிலக் கவிதையை எடுத்துக்காட்ட விரும்புகின்றேன். 1983 ஆடிக்கலவரத்தின் எதிரொலியாக பேசில் பெர்ணான்டோ என்கிற சிங்களக் கவிஞர் ஆங்கிலத்தில் எழுதிய கவிதை ஒன்று இந்த 'நீங்கள் - நாங்கள்' பாணியிலேயே நகர்கிறது. இது ஒரு பரிசு பெற்ற கவிதை.

*''கட்டிடங்களை நீ எரித்தாய்;*
*என்னை சிறையில் போட்டாய்!*
*குழந்தைகளை நெருப்பில் நீ*
*எரிந்தாய்;*
*என்னை மனிதாபிமானம் அற்றவன்*
*என்றாய்!*
*பட்டப்பகலில் கொலைகளை நீ*
*செய்தாய்;*
*என்னை நீ இரத்தக் காட்டேறி*
*என்றாய்!''*

மேற்படி கவிதைப்பாணிக்கு ஒரு தேவையிருந்தது. எண்பதுகளில் ஜெர்மானிய கவிஞன் பேர்டோல்ட் ப்ரேக்ட் தரும் கவிதை ஒன்றையும் பார்ப்போம். கோஷக்கவிதைபோல் தெரியும்; ஆனால் ஆழமானது.

*''நான் பேர்டோல்ட் ப்ரெக்ட்*
*ஏழைகளின் நண்பன்*
*ஏழைகள் அணியும் டெர்பி*
*குல்லாய்தான் நானும்*
*அணிகிறேன்*
*நான் சொல்லுகிறேன்*
*ஏழைகள் நாற்றம் பிடித்தவர்கள்*
*ஏன் நானும் தான்''*

இதே போன்று இன்னுமொரு கவிதை ஈராக் கவிஞன் சாடி யூசுப் எழுதியது. பாலஸ்தீன அகதி முகாம் மீது எறிகணைத் தாக்குதல்களால் கொலைகள் நிகழ்ந்த போது எழுதப்பட்டது.

*''வானம் பாடி அருந்துகிறது*
*நட்சத்திரம் அருந்துகிறது*
*கடல் அருந்துகிறது*
*குருவியும் வீட்டுச் செடியும்*
*அருந்துகின்றன.*
*ஆனால் சப்றாவின் குழந்தைகளோ*
*எறிகணைகளின் புகையை*
*அருந்துகின்றன''*

இக்கவிதைக்ளை வாசித்து விட்டு இவை வெறும் 'நீ - நான்' பாணிக் கவிதைகள் அல்லது ஏழைகளின் நாற்றம் மணக்கும் கவிதைகள் அல்லது நட்சத்திரம் எப்படி என்னத்தை அருந்தும் என்பன போன்ற கருத்துக்களையும் கேள்விகளையும் மேலெழுந்த வாரியாக மு.பொ. கேட்கலாம். இவை வாசகர்களுக்கு சமர்ப்பணம்.

புதிய சொல்லாக்கம் பற்றிக் கூறும் மு.பொ இமயவனின் 'விழிகள் இதழ்த்தன' என்பதை வரவேற்கும் அதே வேளையில் சோலைக்கிளியின் 'நட்சத்திரங்களை மிட்டாய் போல் உணாவியபடி' எனும் வரியைக்கண்டு கொள்ளாது போகின்றார். சு.வியின் 'காலத்துயர்' பற்றிய விமர்சனம் த்டம் மாறி சோலைக்கிளியை 'கிலுகிலுப்பை சோடனைக்கவிதைகள்' எழுதும் கவிஞனாக காட்டுவதில் போய் நிற்கிறது. இது ஒரு வக்கிரப் பார்வையே. மு.பொ கையாளும் மேற்குலக விமர்சகர் பற்றிய கதை பொருத்தமற்றது. இஸ்லாமிய கோபுர கலசங்களுடன் இந்தியக் கோயில் கோபுரங்களின் சிற்பங்களை ஒப்பிடுவதும் அர்த்தமற்றது. ஒவ்வொன்றுக்கும் அதற்கென கலைநியதிகளும் நயங்களும் உண்டு. இதனை உணராமல் மு.பொ. முரணான ஒப்பீடுகளை வைப்பது அபத்தமானது.

இதே போலவே கவிதை ஒரு தனி இலக்கியமா என புதுக் கேள்வி எழுப்புகிறார். மு. தளையசிங்கத்தின் 'மெய்யுள்' எனும் இலக்கிய வடிவக் கோட்பாடு காலத்தோடு அள்ளுண்டு போனதை மு.பொவுக்கு ஞாபகமூட்ட விரும்புகின்றேன்.

அடுத்த இதழில் முடியும்.



# வாழ்தல் என்பது

பாலமோகன்

எனது கண் இறைக்கும் ஒளியை
ஓர் புள்ளியில் தேக்க
எனக்கு இஸ்டமில்லை.
அது படர்வதற்குரியது.

விரும்பியபோது விரும்பிய இடத்தில்
ஆடவும் பாடவும்
அதிகளவு சுதந்திரம் அனுபவிக்கிறது
ஒரு குழந்தை-
என்னை விட.
அழுதலுக்காக இரங்க ஆயிரம் மனிதர்கள்.
தனிமையாய்
மனம்விட்டு சிரிக்கும் எனை
பைத்தியமென பார்வையெறிந்து
கொல்லும் உலகில்
சேர்ந்து சிரிக்க நான் மனிதர்களைத் தேடுகிறேன்.

மரணத்தை
பூச்சாண்டி காட்டி
பயமுறுத்தும் மதமும்
எனை வெற்றிகொண்டு நூற்றாண்டுகளாயிற்று.

வாழ்வின் ஒரு பகுதியே மரணம்.

தடித்த விரல்கள்
கூனிய முதுகுகளில்
பிராண்டி எழுதிய விதிமுறைகளில்
கசியவிடப்பட்டது வாழ்க்கை
என்றாயிற்று.
இலேசானவனாய் மிதந்துவிடாமல்
பாரமேற்றப்பட்டு
செதுக்கி செதுக்கி அழிக்கப்பட்டவன் நான்.

ஒரு புள்ளி நோக்கி ஓடுவதில்
இறகுகள் சொடுக:
கிளைவிடாது
பார்வைகள் நெடுத்துக் கொள்கின்றன
அதிகார வெளியைத் தேடி!
வாழ்தல் என்பது
ஒப்புவிக்கப்பட்ட பாதையினூடு
ஒடுங்கிச் செல்வதல்ல:
பரந்து விரிவது அது -
ஓர் உயிர்ப்பு வெளியாய்!

நவம்பர் '96

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



புலம் பெயர்ந்து வாழும் தமிழ்க் கதைஞர்களின் 39 கதைகளை உள்ளடக்கி வெளிவந்துள்ளது "பனியும் பனையும்..." என்ற தொகுப்பு. இத்தொகுப்புக்கான கதைகளைத் தேர்ந்தெடுப்பதில் பிரபல எழுத்தாளர்களான இந்திரா பார்த்தசாரதியும், எஸ்.பொன்னுத்துரையும் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களின் தேர்ந்த அணுகல் நல்ல பல கதைகளையும், கதைஞர்களையும் இனம் காட்டியுள்ளது. சர்வதேச தமிழ்க் கதைகளின் தொகுப்புக்கு ஒரு முன்னோடி நடவடிக்கையாக அமைந்துள்ள இத்தொகுப்பு நூலிலிருந்து "Ex- அலைகளில்..." என்ற கதையை நன்றியுடன் தருகிறோம்.




ஜோர்ஜ் குருஷேவ்

முதன் முதலாக காதலர்கள் தினமான (Valentiane's day) அன்று தான் எனக்கு அவன் ரொம்பவும் நெருக்கமானான். முன்னரேயே அவனுடைய சில பாட்டுக்களைக் கேட்டிருக்கிறேன். அவனைப் பற்றி நிறைய வாசித்துமிருக்கிறேன். (இவன் மெக்சிக்கோவில் பாடப்போனபோது அங்கு பெற்றோல்தட்டுப்பாடு வந்ததும், இவனது முன்னாள் மனைவியரை விட்டு எக்கச்சக்கமான வயது குறைந்த தற்போதைய மனைவிக்காக அவன் பிளேனில் அலைந்ததும், தனது Larger than life image ஐ விட்டு லொஸ் ஏன்ஜல்ஸில் நண்பர்களுடன் Down to earth guy மாதிரி உதைபந்தாட்டம் ஆடுவது பற்றியும்... பல விடயங்கள் எனக்கு அத்துபடி) ஆனாலும் அவன் எனக்கு பரிச்சயமானது என்னோடு வேலை செய்யும் பிலிப்பினோ நண்பன் அலுஜோ மூலமாகத்தான். அவன் தான் ஆங்கிலப் பாடல்களுக்கு எனக்கு ஆசான். அவன் Oh uh oh ye yei என்று இழுத்தால், நான் அப்பாலிருந்து I love you more than I can say என்று பாட, ஆச்சரியத்தால் கண்கள் விரிய Hey Man! you know that song என்பான்... Hm... Its from Lee Sayer என்று தன்னடக்கமாகச் சொல்ல... You have the cassette?... Oa Ja. I ' ll Bring it tomorrow என்பேன். எனக்குத் தெரியாத ஆங்கிலப் பாடல்கள் ரேடியோவில் ஒலிபரப்பானால் யார் பாடியது என்று அவனைத்தான் கேட்க முடியும். குரல் அந்த இந்த மாதிரித்தான் என்றாலும் தானும் சேர்ந்து பாடுவான்.

அப்படி ஒரு நாள் வேலை வெட்டி இல்லாமல் நாங்கள் அரசியல், செக்ஸ் என்று முக்கியமான விடயங்கள் பற்றி ஆராய்ச்சி செய்து கொண்டிருந்த போது காதலர்கள் தினத்தை ஒட்டி யாரோ ஒருத்தி தன் காதலனுக்காய் விரும்பிக் கேட்ட பாடல் ஒலிபரப்பானது.

You are in my Heart... Should I Grow old

You are my Love... You are in my soul

என் இதயத்திலும் நீ தான். என் ஆன்மாவிலும் நீ தான். நான் வயதானாலும் நீ தான் என் மூச்சு. நீயே என் காதலி. நீயே என் நல்ல நண்பி. நீ என் ஆன்மாவில் இருக்கிறாய். சமீப காலத்தில் என் வாழ்வில் ஏற்பட்ட சில நிகழ்வுகள் காரணமாக மிகவும் நொந்து போயிருந்தேன். அதனால்தானோ என்னவோ அந்தப் பாடல் என் மனதைத் தொட்டது.

Hey Man. who is it? அலுஜோ என்னை கேலியாகப் பார்த்தான். You dont know him? No... Its Rod stewart. அந்தக் கணம் முதலே எனக்கு றொட் ஸ்ருவாட்டைப் பிடித்துப்போயிற்று. அவனது குரல் கொஞ்சம் வித்தியாசமான குரல்.. வீட்டில் ஆச்சிக்கு பிட்டுக்குழைக்க மா குத்துவதற்கு பேணி வேண்டுமென்பதற்காக ரின்பால் பேணியை மதில் சுவர்களில் உரசும் போது பற்களைக் கூசப் பண்ணி வருமே ஒரு சத்தம். அதற்கும்... மாரி காலத்தில் நூறு தவளைகள் கிணற்றுக்குள் சேர்ந்து இருந்து கத்துமே அதற்கும் இடையில் ஒரு வகையான குரல்... எங்கள் தமிழ் பாடகர்களின் குரலோடு ஒப்பிடும் போது மோசமானதுதான்... ஆனாலும் அதிலும் ஒரு இனிமை இருக்கும்.

வேலை முடிந்து வரும் போதெல்லாம் என்னைத் தன் காரிலே கொண்டு வந்து விடுவான் அலுஜோ... அப்போதெல்லாம் Best off Rod stewart கசெற்றைப் போட்டுக் கேட்டதில் றொட்டை எனக்கு நிரம்பவும் பிடித்துப் போயிற்று.

மாலை மம்மலுக்குள் வெட்டிய வாழைக்குலைகளை மாட்டுவண்டியில் கட்டிக்கொண்டு, கனகம்மான் சுன்னாகச் சந்தைக்குப் போகும் போது பனிக்குளிரையும் ஊடறுத்து ஜல் என்று சலங்கை கலகலத்து வந்து நெஞ்சை நிறைக்குமே, அதைப்போல் ஜல் ஜல் என்று கிட்டார் ஒலி வர, றொட் பாடுவான்...

I dont wanna talk... My heart

நீ என் இதயத்தை எப்படி உடைத்தாய் என்பதைப்பற்றி நான் கதைக்க விரும்பவில்லை... என் கண்களில் நிறைக்கும்... என் இதயமும் எப்படி உடைந்து போனது?

I Can tell by your eyes... They are mirrors

உன் கண்களைப் பார்த்து நான் சொல்ல முடியும். நீ எப்போதுமே அழுது கொண்டிருக்கக் கூடும் என்று. வானத்து நட்சத்திரங்கள் உனக்கு ஒன்றுமேயில்லை, வெறும் கண்ணாடிகள்தான்.

I dont Wanna talk... broke my heart

நீ என் இதயத்தை எப்படி உடைத்தாய் என்பதைப்பற்றி நான் பேச விரும்பவில்லை.

If I stay here just a little bit longer... my heart oh my heart

நீ இன்னும் கொஞ்ச நேரம் இங்கே நின்றால், நான் இங்கே நின்றால் நீ என் இதயத்தில் ஒலியைக் கேட்க மாட்டாயா?

If I stand all alone... they are mirrors நான் தனியே நின்றால் என் இதயத்தின் நிறத்தை மறைக்கும், கண்ணீருக்கு நீலமும் இரவுக்கு கறுப்பும் வானத்து நட்சத்திரங்களைப் பார்த்துப் பயப்படும். அவை உனக்கு ஒன்றுமேயில்லை, வெறும் கண்ணாடிகள் தான்.

மென்மையாய், பிரிவுத்துயரினால், வாடுகின்ற ஒருவனின் இதயத்துடிப்பாய் அந்தப் பாடல் என்னை நெகிழச் செய்யும். எங்காவது மலையடிவாரத்தில் மனித நடமாட்டமேயில்லாத புல்வெளியில் உட்கார்ந்து மலைகளில் எதிரொலிக்க, 'ஓ'வென்று கதறி அழவேண்டும் போலிருக்கும். என் இதயத்தை ரணமாக்கி, என் அன்பை உதாசீனம் செய்து அக்கரைப் பச்சையைத் தேடியலைந்த அவளை நினைத்து அந்தப் புல்வெளியில்... கைகளைத் தலையணையாக்கி... மேகங்கள் இல்லாத தெளிந்த வானத்தை பார்த்தபடி, என் கண்களில் இருந்து வழியும் கண்ணீர் கரையோரங்களால் வழிந்து ஓட விம்மி விம்மி அழத் தோன்றும்.

காதலில் தோல்வி அடைந்தவன் எல்லாம் பாடுவது போல 'அவள் பறந்து போனாளே, என்னை மறந்து போனாளே' என்று பாட முடியவில்லை. பள்ளிக்கூடக் காதல் என்றால்; 'அவள் பறந்து போனாளே' என்று பாட பக்கத்தில் இருப்பவன் 'போனால் போகட்டும் போடா' என்று ஒரு moral support தருவான்.

இந்தக் கோடை காலத்தில் அவன் ரொறன்ரோவுக்கு இசை நிகழ்ச்சி நடத்த வருகிறான் என்று அறிவிப்பு வந்தது. அலுஜோவைக் கேட்டேன். தனக்கு வேலை இருக்கிறது என்று மறுத்தான். எனக்கு றொட் ஸ்ருவாட்டைப் பார்க்க வேண்டும் என்ற பிரச்சினை இல்லை. அவனது நிகழ்ச்சிக்குப் போய் அவன் பாட்டைக் கேட்டு அழவேண்டும் போல தோன்றியது. விபரீதமான ஆசைதான். எனக்கு வேறென்ன ஆறுதல் தான் கிடைக்கும்?

டிக்கட் எடுப்பதற்காக போன் பண்ணினேன். மூன்று நாட்களாக எடுக்கவே முடியவில்லை. அவ்வளவு லைன் பிஸி. மூன்றாம் நாள் ஒரு மாதிரி துரத்திப் பிடித்தேன். விற்றுத்தீரும் தறுவாயில் சில டிக்கட்டுகளே இருந்தன. மைதானத்திற்கு நடுவில் இருக்க வேண்டி வரும் என்று டிக்கட் விற்பவன் பயமுறுத்தினான். எனக்கு றொட்டைப் பார்ப்பதில் ஆர்வமில்லையே... அவன் பாட்டு மட்டும் தானே கேட்கவேண்டும். கிறடிட் காட் உபயத்துடன் மறுகிழமை டிக்கட் தபாலில் வந்தது. ஒரு மாதம் இருந்தது.

ஆகஸ்ட் 28ம் திகதி, வியாழக்கிழமை... CNE எனப்படும் Canadian National Exhibition அல்லது Ex என்று செல்லமாக அழைக்கப்படுகிற ஸ்ரேடியத்தில் Concert. எட்டு மணிக்கு நிகழ்ச்சி... ஆறே காலுக்கு அங்கு நின்றேன். மனிதர்கள் எல்லாம் துயரங்களை விட்டெறிந்து கவலை மறந்து இந்த நரக உலகை மறந்து சந்தோசமாய் இருக்க வந்திருக்கிறார்கள். நான் ஒருவன் தான் என் துயரங்களையும் சேர்த்துக்கொண்டு இங்கே வந்திருக்கிறேன். அழுவதற்கு காசு கொடுத்து வந்திருக்கிறேன். ஜோடிகளாய், மனது நிறைந்தவனோடும், நிறைந்தவளோடும் உல்லாசமாய் யதார்த்தத்தின் கொடுமைகளை விரட்ட, சொற்ப நேர சந்தோசத்துக்காய் வந்த மனிதர்கள்... எங்கு பார்த்தாலும் முகங்கள். முகங்கள்... சந்தோசமான குழந்தைத்தனமான முகங்கள்... எந்த முகங்களிலும் சோகம் படரவில்லை. நான் மட்டும் தான் மனதிலும் முகத்திலும் வேதனையை வரித்துக்கொண்ட ஒரு பரிதாபமான ஜீவனாக...

தூரத்தே Crane ஒன்றில் ஏறி கால்களில் றப்பர் கயிற்றைக் கட்டிக்கொண்டு தலைகீழாய்க் குதிக்கும் Bungee Jumping சர்க்கஸ் கூடு மாதிரி ஒன்றில் ஏறி உயரே போய் காலில் கட்டிய கயிறுடன் குதித்து மேலே போய் மகா பயங்கரமாக ஆட... கீழே இருந்த கூட்டம் Wow என்று மோசமாய் அலறும்... No pain, No gain , No guts No glory என்பது போல் பாய்கின்ற dare devilகள் பலத்த கரகோஷத்துடன் வீரபுருஷர்களாக இறங்கி வருவார்கள். எனக்கும் பாய வேண்டும் போல் தோன்றியது... தலை கீழாக, வயிறு ஜிவ் என்று உள்ளே இழுத்துக் கொள்ள, இதயம் தொண்டைக்குள்ளால் வரும் பிரமையோடு இரத்தம் வேகமாய் முகத்தில் பாய்ந்து சிவக்க, கைகளும் தலைமயிரும் கீழே தொங்க... பாயும் போது அந்தக் கணப்பொழுதில் ஏற்படும் வேதனையோடும் மகிழ்ச்சியோடும் பயத்தோடும் என் துயரங்களும் அவளின் நினைவுகளும் வெடித்துச் சிதறி என் இதயத்தில் இருந்து எந்தத் தடயமும் இல்லாமல் அழிந்து போய்விடாதோ என்ற எண்ணம்... ஏக்கம்.... வேண்டாம்... இன்றைக்கு பாட்டுக் கேட்டு அழவேண்டும்... சுமையைக் குறைத்துக் கொள்வோம்... ஏன்? சோகத்திலும் எனக்கு சுகம் உண்டோ? அந்தப் பிரிவுத்துயரிலும் ஒரு இன்பம் உணடோ? நாடி பிடித்த வைத்தியன் 'வேண்டியவர்களுக்கு சொல்லி அனுப்புங்கள்' என்ற பின்னும் மனதிலே ஒரு நம்பிக்கைக் கீற்றை வைத்துக் கொண்டு உயிர்வாழ எத்தனிக்கும் மனிதன் போல், எனக்குள்ளும் நம்பிக்கைக் கீற்று உண்டோ? ஏன் அந்தத் தடயங்களை அழிக்க விரும்பாமல், வெறுமனே சுமையைக் குறைக்க நினைக்கின்றேன். என் மனதுக்குள் அவள் மீது நான் வைத்திருந்த அன்பு இன்னமும் எங்கோ மறைந்திருந்து உறங்கிக் கொண்டிருக்கிறதோ? ஏன்? ஏன் என்னால் மறக்க முடியவில்லை... அவள் மீது கொண்ட நேசம் உண்மையானது 'என்பதாலா? எனக்கு காதலியாக இல்லாமல், மகளாக அவளை நேசித்ததாலா?

ஸ்ரேடியத்தின் உள்ளே நுழைந்தேன்.... சுற்றி வளைத்த பவிலியனில் மனிதர்கள் நிறைந்து கொண்டார்கள். விதம் விதமாய் சிறுசுகளும், தியாகராஜர் பாட்டுக் கேட்கும் வயதில் உள்ள முதியவர்களுமாய்.... இவர்கள் ஐம்பதாயிரம் பேரும் என்னைப் போல் அழுவதற்குத் தான் வந்திருப்பார்களோ? ஒவ்வொருவரும் இதயத்தில் ஒவ்வொருவரைச் சுமந்து கொண்டு அந்தத் தழும்புகளைத் தடவிப் பார்க்கும் போது ஏற்படும் சுகத்திற்காக வந்திருக்கிறார்களோ? நடுவில் மைதானத்தில் கடைசியாக இருந்த வரிசையில் எனக்காக ஒதுக்கப்பட்ட கதிரையில் உட்கார்ந்தேன்... கலியாண வீடுகளில் இருந்தது போல்... எனக்குப் பிடித்தமான இடம்... எல்லோரையும் அவதானிக்க முடியும்... ஆனால் மேடையைச் சரியாகப் பார்க்க முடியாது.

எட்டு மணிக்கு ஆரம்பம்... நான் ஏற்கெனவே ஏழே காலுக்கு நிற்கிறேன். மேடையின் அருகே இரண்டு பெரிய தொலைக்காட்சித் திரைகள்... Rod stewart, Vagabond Tour என்று எழுதி ஒரு இதயத்தை ஒரு கோடு ஊடுருவிச் செல்லும் படத்துடன் மேடையின் அருகே ஒரு திரை... என் இதயத்தையும் எத்தனை ஈட்டிகள் ஊடுருவியிருக்கும்?

இறைச்சியை அலங்கோலமாய் வெட்டி சிற்பம் செய்த மனிதராய், செக்கியூரிட்டி காட்கள்... எழுந்து நின்றவர்களை இருக்கச் சொன்னார்கள்.... எட்டு மணிக்கு சரியாக ஆரம்பம்... பொப் மார்லியின் மகன் ஸிக்கி மார்லியின் குழு களத்தில் இறங்கியது... பெரும்பாலான பாட்டுக்கள் எனக்குத் தெரிந்திருக்காதவை. தகப்பனின் பாடல்கள் சில பாடினான்.... Get up. Stand up stand up for your rights. Dont give up the fight... முக்கால் மணி நேரத்தில் முடித்துக் கொண்டார்கள்.....

மீண்டும் ஒளிவெள்ளம் மைதானத்தை பகலாக்கியது... என் Wallet ஐ எடுத்தேன். திறக்க உள்ளே அவள் சிரித்துக் கொண்டிருந்தாள்... அவள் என் மாஜிக் காதலி...Ex- girl friend. உள்ளே கசங்கி, அழுக்குப் படிந்து மடிப்புக்களில் கிழிந்து tape இனால் ஒட்டப்பட்ட கடிதம்... வந்ததில் இருந்து எத்தனை தடவை வாசித்திருப்பேன்? சில தடவைகளில் விழுந்த என் கண்ணீர் எழுத்துக்களை அழித்திருந்தது... ஒவ்வொரு வரியும் எனக்கு மனப்பாடம்... ஆனாலும் ஒவ்வொரு தடவை வாசிக்கும்போதும் புதிய புதிய கருத்துக்கள் தென்படும்... ''நீ பொய் சொல்லி என்னை ஏமாற்றிப் போட்டாய்'', ''நீ நல்ல வடிவாயிருக்கிறாயடி'' என்றதை விட அப்படி நான் என்ன பொய் சொன்னேன்? கண்களில் திரையிட்ட கண்ணீரையும் மீறிச்சிரிப்பு வந்தது. உள்ளே என் நெஞ்சோடு இருக்க வேண்டும் என்பதற்காக அவள் தந்த இதயவடிவிலான அவளது முதல் எழுத்துப் பொறித்த ஒரு பதக்கம்...

''எல்லாம் என்னுடைய பிழைதான். உன்னைக் காதலித்ததைவிட என் அப்பா அம்மா பார்த்து வைக்கும் ஒருத்தனுக்கு கழுத்தை நீட்டுவது மேலானது.'' கையை வெட்டி தன் காதலை நிரூபிப்பதற்காக 'உன்னோடு என் வாழ்க்கை அமையாவிட்டால், நான் செத்துப் போய் விடுவேன்.' என்று இரத்தத்தால் எழுதிய அவளா இப்படி எழுதினாள்.

இப்போது என்ன செய்து கொண்டிருப்பாளோ?

தந்தையின் கடையிருக்கும் இடத்தில் இருந்து 'தொட்டாட்டு' வேலைக்காக கொண்டு வரப்பட்ட பையனோடு இவளுடைய அக்கா தொட்டாட்டு வேலைகளில் ஈடுபட்டதால், வீங்கிய வயிற்றைக் கண்டு, அந்தத் தோட்டக்காட்டு பெடியனை Fire பண்ணி (அதாவது நெருப்பால் சுட்டு வேலையில் இருந்து நீக்கி) 'பிள்ளைக்கு வயிற்றிலை கட்டி வளருது' என்று ஊர் வாயை மூட முயற்சித்து, யாரோ ஒரு பரியாரியைப் பிடித்து அவளுடைய கற்பை Full Reconditioning செய்து இவளுடைய அத்தானுக்கு 'கன்னிகாதானம்' செய்து கொடுத்தது போல்... மூன்றாம் வகுப்புடன் உயர் கல்வியை முடித்துக்கொண்டு, சீமெந்து பையில் சுற்றிய உடமைகளுடன் on the job trainingக்காக சிங்கள நாட்டுக்கு யாரோ ஒரு முதலாளியுடன் அனுப்பப்பட்டு, தொழிலை கற்றுக்கொண்டு minding his own business செய்யும் ஐந்து விரல்களிலும் மோதிரம் போட்ட யாராவது ஒரு முதலாளிக்கு, திருவிழாக்காலங்களில் இரவுகளில் கோயிலுக்குப் பக்கத்தில் இருக்கும் பள்ளிக்கூடத்திற்குள் என்னோடு ஒதுங்கியும், தன் கற்பைத்தவிர மற்ற எல்லாவற்றையும் இழந்த இவளை குடும்ப பாரம்பரியத்தை மீறாமல், கட்டிக்கொடுத்திருக்கக்கூடும். அவனும் பொங்கல், தீபாவளி, வருஷம் போன்ற நாட்களில் மட்டும் அன்னாசிப்பழம், றம்புட்டான் பழத்துடன் வந்து வசியம் செய்து வியாபாரத்தை கவனிக்க நம்பிக்கையான ஒரு heir apparent(வாரிசு) வேண்டும் என்பதற்காகவும், அதையும் விட வீட்டுக்கு வருகின்ற யாராவது தன்னுடைய பிள்ளைக்கு biological தந்தையாகி விடக்கூடாது என்பதற்காகவும், இவளது வயிற்றை நிறைத்துச் செல்ல... இடுப்பிலும் வயிற்றிலும் குஞ்சுகுருமான்களை அணைத்துக்கொண்டு, பறந்து வரும் பொம்பர்களிலிருந்து தப்ப பங்கர்களை நோக்கி 'குறுக்காலை போவாரை'த்திட்டிக் கொண்டு ஓடிக்கொண்டு இருக்கக்கூடும்...

இல்லாவிட்டால்...

'உவனை உனக்கு செய்து தர நாங்கள் ஒன்றும் தரங்கெட்டுக்கிடக்கேல்லை' என்று கூறிய அவளது அண்ணன் நாளும் கோளும் பார்த்து சீதனத்தை ஊரிலுள்ள மாப்பிள்ளைப் பெடியனின் அம்மா, அப்பாவுக்கு கொடுத்து, யாராவது ஒரு வெளிநாட்டு மாப்பிள்ளையைக் கட்டி வைத்து, குடும்பக் கௌரவத்தைக் காத்துக்கொள்ள... ஏதாவது மேற்கு ஐரோப்பிய நாடொன்றில் அவளையும் கற்பையும் ஒன்றாக வைத்துப் பூட்டிச்செல்லும் 'என்ரை அவரைப்'பற்றி அன்பான அப்பா அம்மாவுக்கு கடிதம் எழுதிக்கொண்டிருக்கக்கூடும். அல்லது ஏதாவது வீடியோவுக்குள் தலையை அமுக்கி தமிழ்திரையுலகம் சம்பந்தப்பட்ட தன் I.Qவை வளர்த்துக் கொண்டிருக்கக்கூடும்.

இல்லாவிட்டால்...

'பிரபல கனடிய நிறுவனம் ஒன்றில் பொறுப்பான பதவி வகிப்பவரும் (என்ன, செக்கியுரிட்டிகாட்தான்) சொந்த வீடு, கார் என்பவற்றைக் கொண்டிருப்பவருமான சைவ வேளாண் குல உயர் குடிப்பிறந்த குலதிலக, கனடியப் பிரஜையர்ன 39 வயதான தமிழ் வாலிபருக்கு (மனிதருக்கு?) 'அழகும் இளமையும் கல்வி அறிவும் (அறிவைப்பற்றி எனக்கல்லவோ தெரியும்.) நிரம்பிய, இவளுடைய தமிழ்ப்பாண்பாட்டுடன் கூடிய படத்தை அனுப்பி எச்சிலை கோடாவாக்கி விற்ற சுருட்டினால் சம்பாதித்த பணத்தில் கலவரங்களில் எரிந்த,

→

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பறிக்கப்பட்ட சொத்துக்கள் போக மீதிப்பணத்தைக் கொண்டு சீதனம் கொடுத்து, கனடாவுக்கு அனுப்பி ஏதாவது ஒரு 'நிகழும் பிரம்மஹத்தி வருட'த்தில் பெரியோர்களால் நிச்சயித்து திருமாங்கல்யதாரணம் செய்து வைத்திருக்கக்கூடும். அவளும் இங்கு வந்து மோட்கேஜ்கட்டுவதற்காக இரண்டு வேலை செய்யும் 'இஞ்சேருங்கோவுடன்' தானும் வேலை செய்து பிள்ளைகள் பிறக்க பிந்துகோஸ் மாதிரி வீங்கி முட்டிப் போய் அடிக்கடி ஏதாவது கோயிலுக்குப் போய் வந்து கொண்டிருக்கக்கூடும்.

எதுவுமே சாத்தியம் தான். என்னைத் திருமணம் செய்யாவிட்டால் தற்கொலை செய்வேன் என்றவள் எனக்கு இப்படி கடிதம் எழுத முடியும் என்றால், எதுவுமே இங்கு சாத்தியம்தான்.

ஏன் நான் negative ஆன விடயங்கள் பற்றி மட்டும் யோசிக்கின்றேன். அவள் உண்மையிலே யாராவது ஒருத்தனைக் கலியாணம் செய்து சந்தோசமாய் எங்காவது ஒரு மூலையில் என் நினைவே இல்லாமல் வாழக்கூடுமோ? எப்படி முடியும்? அப்படி என்றால் எனக்குச் சொன்னதெல்லாம்... நீதான் என் உயிர், நீ இல்லாவிட்டால் வாழ்வே இல்லை என்றதெல்லாம் வெறும் பொய்தானா?

சனம் பொறுமை இழக்கத் தொடங்கியது... முக்கால் மணிநேரமாக எதுவுமே இல்லை.... இடையில் மனதை நெருடும் ஒரு கிட்டார் இசை இதயத்தைக் கிழித்தது. நிச்சயம் Jimi Hendrix, Santana அல்லது Eric Clapton வாசித்ததாக இருக்க வேண்டும். கண்ணை மூடிக் கொண்டே இதயத்தைத் தொட அதில் லயித்துப் போனேன்.

மழைக்கால இரவுகளில் கிளுவைகளில் இருந்து வழியும் மழைத்துளிகளின் ஒலியைத் தவிர வேறேதும் கேட்காத நிலையில், தூரத்தே இருந்து சோவென்ற இரைச்சலுடன் ஓடிவருமே மழை. அதைப்போல் ஒலியொன்று மைதானத்தை சூழ ஓடி வந்தது... திரும்பிப் பார்த்தேன். பவிலியனின் ஒரு மூலையில் இருப்பவர்கள் எழுந்து கைகளை உயர்த்தி ஓவென்று அலற... கைகள் உயர்ந்து அலைபோல் உயர்ந்து இறங்கிச் செல்ல அதோடு அந்த சோ என்ற இரைச்சலுடன் ஓடிச்செல்ல அதில் கூட ஒரு Rhythm ஒன்று இருந்தது. நடுவில் இருந்தவர்கள் எழுந்து கூச்சலிட்டு தங்களது ஆதரவைத் தெரிவித்தார்கள். மனிதர்கள் தங்களது கவலை மறந்து குழந்தைகளாக மாறிவிட்டார்கள். ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் ஒரு குழந்தை இருக்கிறது. அந்தக் குழந்தை இந்த நேரங்களில் உறக்கம் கலைந்து வந்து வளர்ந்து போன மனிதனை விரட்டி விட்டு செல்லமாய் துள்ளி விளையாடும்... இதமாக இருந்தது. சூழ வர எழுந்து அடங்கும் ஓசையை உயர்த்தி கைகளை அட்டகாசம் செய்தனர். மீண்டும் விளக்குகள் அணைய பெரும் கூச்சல் எழுந்தது... அதே சோ... பனிக்கால இரவுகளில் கும்மிருட்டில், பாடியபடியே சைக்கிளில் ஓடி வரும் போது வேலியோரங்களில் நியோன் விளக்குகளாய் மின்மினிகள் குருத்துப் பச்சை நிறத்தில் மின்னுமே, அதைப்போல் ஏதோ ஒரு நீண்ட குச்சிகளை வாங்கிய கும்பல் ஆங்காங்கே வைத்துக் கொண்டிருந்தது. புற்களுக்கு நடுவில் மின்மினிகளை அந்த ஒளி ஞாபகப்படுத்தியது.

ஒரு கும்பலுக்கும் அதன் நாடித்துடிப்பைக்கட்டுப்படுத்த ஏதோ ஒரு இதயம் இருக்கிறது. A mob doesn't have a mind on its own என்று எந்த முட்டாள் சொன்னான்? இந்த கூட்டத்திற்கும் ஒரு இதயம் இருப்பதால்தானே தன்னை அறியாமல் இந்த குழந்தைத் தனங்களில் மகிழ்ந்து கொள்கிறது.

திடீரென்று ஓவென்று கூச்சல்... எழுந்து பார்த்தேன். தூரத்தே மரவள்ளி தோட்டங்களில் காவலுக்கு லாம்பை வைத்து விட்டு இருக்கும் கொட்டில்களில் இருந்து வரும் வெளிச்சம் போல்.. தூரத்தே மேடையில் றொட் வந்திருந்தான். கூட்டம் ஆனந்தப்பரவசத்தில் கூச்சம் போட்டது.... எனக்கு முன்னால் இருந்த எல்லோருமே கதிரைகளில் ஏறி விட்டார்கள்.. காதலர்களுடன் வந்திருந்த பெண்களில் பலர் காதலர்களின் தோள்களில் ஏறிக்கொண்டார்கள்.

எனக்கு சதிரையில் ஏறியும் எதுவும் தெரியவில்லை. பின்னால் எக்கச்சக்கமான தூரத்தில் பவிலியனில் வெறுமையாய் கிடந்த இடங்களை நடுவில் இருந்த கூட்டம் நிறைக்கத் தொடங்கியது. நானும் பாய்ந்து போய் வசதியான இடத்தில் அமர்ந்து கொண்டேன். ஆளைத் தெரியாவிட்டாலும் என்ன நடக்கிறது என்பது தெரிந்தது. அருகில் இருந்த ராட்சச திரைகள் அவன் நளினங்களைக் காட்டி மகிழ்ந்தது. இருபதே வயதான Maggie May என்ற பாட்டுடன் ஆரம்பித்தான். வினோதமான தலைவாரலும், உடையலங்காரமும் வித்தியாசமாய் இருக்க மைக் ஸ்ராண்டைத் தூக்கியபடி மேடையில் அங்குமிங்குமாய் துள்ளினான்.... கூச்சல் வானைப்பிளக்க... ஸ்பீக்கர் ஒலி காதைப் பிளக்க.... அவன் துள்ள, முன்னாள் இருந்த கூட்டம் கைகளை உயர்த்தி தட்டியபடி... கதிர் வந்த குரக்கன் போல் ஆடிக்கொண்டிருந்தது. மேடையிலே கடுமையாய் இல்லாமல் மேக நீலத்திலும் மெல்லிய குங்குமத்திலும் ஒரு வெண்பச்சையிலும் ஒளி மேடையை ஆக்கிரமித்தது. அடுத்து Down Town Train... பலத்த ஹிட்டுகள் பாடப்பட கூட்டம் உருக்கொண்டு எழுந்தது.

அடுத்து Some guys have all the luck என்று தொடங்க ஓவென்று கூட்டம் அலற... தமிழ் பாடப்பாடல் போல் அவன் அடிக்கடி உடைகள் மாறினான்.... காட்டூன் படங்களில் வரும் நாயும் பூனையும் ஒலி கேட்காமல் மெதுவாய் நீண்ட அடி எடுத்து வைக்குமே அதைப்போல்... நீண்ட அடி எடுத்து... வைத்து... இடைக்கிடை வாத்துப் போல் நடந்தும்... மைக் ஸ்ராண்டைத் தூக்கி கம்பு வீசியும் மேடையை ஆக்கிரமித்தான். ரசிகர் கூட்டம் நுனிக்கதிரையில் இருந்தது.

**'Some guys have all the luck ... do nothing but complain'**

சிலருக்கு எப்போதும் அதிர்ஷ்டம். சிலருக்கு எப்போதுமே வேதனை, சிலருக்கு முழுவதுமே புத்திசாலித்தனம். சிலர் குறைகூறுவதைத் தவிர வேறு எதுவும் செய்வதில்லை.

உண்மை. எனக்கு எங்கே அதிர்ஷ்டம் இருக்கிறது? எப்போதுமே வேதனைத்தானே... அதிர்ஷ்டம் இருந்திருந்தால், அவள் என்னோடு இப்போது இருந்திருப்பாளே... அருகே இருந்த நடுத்தரவயதான ஒரு தம்பதி; அந்தப்பெண்ணின் கணவனின் முகத்தில் கிடந்த மயிரைத்தட்டிவிட்டு அவன் முகத்தைத்துடைத்து ஆதங்கத்தோடு கணவனின் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள். எனக்கு உள்ளே ஏதோ நெருடியது?

அவள் இன்று என்னோடு இருந்திருந்தாள் என்ன செய்திருப்பாள்?

என் கைகளை தன் நெஞ்சோடு அணைத்தபடி வந்து 'எனக்கு ஒண்டும் விளங்கேலையுங்கோ, இவங்கள் என்ன கத்துறாங்கள்' என்றிருக்கக்கூடுமோ? அல்லது

**“நீ என் இதயத்தை எப்படி உடைத்தாய் என்பதைப் பற்றி நான் கதைக்க விரும்பவில்லை”**

அந்தப்பெண்ணைப்போல் என் தோள்களின் முன்னால் என் நெஞ்சோடு சாய்ந்து கொண்டு சிணுங்கிக் கொண்டிருக்கக்கூடுமோ? அவள் வந்திருந்தாலும் என் தோள்களில் ஏறி நின்றிருப்பாளோ... 'சும்மா இருங்கோ, எனக்கு வெக்கமாயிருக்கு' என்று தான் 'தமிழ்'ப்பெண் என்பதைக் காட்டியிருப்பாளோ?

இல்லை, சும்மா இருங்கோ, நான் வரேலை, அங்க வந்தால் அவளவை ஆடிக்கொண்டிருப்பாளவை, எனக்குப்பிடிக்காது' என்று சொல்லியிருப்பாளோ? அல்லது 'உங்களுக்குத் தேவை இல்லாத வேலை, வீண்காசு... தமிழ் படம் தமிழ்ப்பாட்டு மாதிரி அர்த்தமுள்ள விசயம் இங்கிஷில் இருக்கோ' என்று என்னோடு விவாதத்துக்கு தயாராய் சண்டை செய்திருப்பாளோ? இல்லை, தனியே போகும் என்னைக்கட்டியணைத்து முத்தம் தந்து 'அங்க வடிவான பெட்டையளைக் கண்டிட்டுப் பல்லைக் காட்டிறேலை' என்று கண்ணைச் சிமிட்டியபடி எச்சரித்திருப்பாளோ? எத்தனை கற்பனைகளை இத்தனை வருடங்களில் கொண்டிருப்பேன். என் கற்பனை வாழ்வில் எந்தத் துன்பம் தான் இருந்தது? காலையில் எழுந்து வந்து போர்வையை இழுத்து தூக்கம் கலைத்து வேலைக்கு துரத்தி, வேலையால் வரும்வரை எனக்காக காத்திருந்து எனக்காகவே வாழ்ந்து தன்னைப்பற்றிய கவலை இல்லாமல் சதா, 'அத்தானைப்' பற்றியே கவலைப்பட்டுக் கொண்டிருந்திருப்பாள்... எல்லாம் வெறும் கற்பனை மட்டும்தான்.. என் வாழ்வே முழுவதும் கற்பனைதான். இலட்சியங்கள், காதல், அன்பு எல்லாம் வெறும் கனவுகளாகத்தானே இறுதிவரை இருந்திருக்கின்றன. வாழ்வில் வேதனை தானே மிஞ்சியது. Some guys have all the luck அவன் பாடிப்போட்டு விட்ட பகுதிகளில் கூட்டம் கோரஸ் போட்டது. அவனது ஒவ்வொரு Beatக்கும் சன வெள்ளம் துடித்தது. Sweet little Rock 'n' Roller, Da Ya Think I'm Sexy, Passion, Motown Song என்று தொடர்ந்தான்... கூட்டம் ஆனந்தப்பரவசத்தில் மூழ்கித் திளைத்தது. இடையில் Tonight is the night. its Gonna be alright என்று பாடினான். இது 'செங்கனியில் தலைவன் பசியாற சென்ற இடம் தேனின் சுவை ஊற' என்ற மாதிரியான ஒரு கருத்து 'ஆழம்' மிக்க ஒரு பாடல்... துள்ளித் துள்ளி ஆடிய அவன் எல்லாவற்றையும் நிறுத்தி கதிரைகள் கொண்டு வரச்செய்து பியானோவும் கொண்டு வந்து, இந்தப்பாடலைப்பாடும்போது என் மனைவிக்கு எட்டு வயது என்று நகைச்சுவையாகக் கூறிக்கொண்டு பாடத் தொடங்கினான்.

**I didn't Know What day it was ... The attraction was purely physical, Oh**

அந்த நாள் எது என்று எனக்குத் தெரியாது, நீ அந்த அறைக்குள் நுழைந்தபோது, நான் ஹலோ என்று கூப்பிட்டேன். கவனிக்கப்படாமல் நீ விரைவாக குட்பை சொன்னாய்,... நான் உனக்கு சொல்லி மன்னிப்பு பெற வேண்டும், அந்தக் கவர்ச்சி வெறும் உடல் ரீதியானதுதான்...

**I took all Those habits of yours... But my heart cried out for you**

உன்னுடைய பழக்கங்களை எல்லாம் நான் எடுத்துக்கொண்டேன். ஆரம்பத்தில் உன் பாஷன் உணர்வுகளை ஏற்றுக்கொள்ள கஷ்டமாய் இருந்தது... நான் அனுபவத்துக்காக வைத்துக்கொண்டேன்... ஆனாலும் என் இதயம் உனக்காக அழுதது.

அடுத்த வரிகளைப் பாடத் தொடங்க, நான் குழந்தைப் பிள்ளைபோல குமுறிக் குமுறி அழ ஆரம்பித்தேன்... இருளானதால் அருகில் உள்ளவர்களுக்கு தெரிந்திருக்காது. அவர்கள் இருந்து கொண்ட வேகத்தில் என்னைச்சட்டை செய்திருக்கவும் முடியாது. முழங்கையால் கதிரையின் கரையில் முண்டு கொடுத்துக் கொண்டு கையால் முகத்தை மறைத்துக்கொண்டு, நான் விம்மி அழுதேன். My heart cried out for you உனக்காக என் இதயம் அழுதது. திருவிழாக்களில் தொலைந்து போன குழந்தைபோல் என்ன செய்வது என்றே தெரியாமல்.. கண்ணீர் ஓரங்களில் வழிய, 'நான் உனக்கு என்ன செய்தேன், ஏன் என்னை இவ்வளவு சுலபமாக மறந்து போனாய்...'

**You are in my heart... You are in my soul**

என் இதயத்திலும் நீ தான். என் ஆன்மாவிலும் நீ தான். நான் வயதானும் நீ தான். என் மூச்சு. நீயே என் காதலி. நீயே என் நல்ல நண்பி. நீ என் ஆன்மாவில் இருக்கிறாய்...

கூட்டம் அவனோடு சேர்ந்து கோரஸ் போட்டது... அவன் இந்த ஐம்பதாயிரம் சனமும் இரவுகளில் மெதுவாக இரையும் மழைபோல் பாடிக்கொண்டிருந்தது. இங்கு வந்த எல்லோருமே என்னைப்போல் நொந்துபோன இதயத்தில் ஒருவரை சுமந்து கொண்டு, என்னைப்போல் அழுதுகொண்டிருப்பார்களோ.. எனக்கு விக்கல் எடுத்தது. விக்கலை நிறுத்த, அழுகை வெடித்தது... ஏன் நான் குழந்தை போல் அழுது கொண்டிருக்கிறேன்?

**My Love for you is immeasurable... But Honey, What do you see in me?**

உன்மீது நான் கொண்ட காதல் அளவிட முடியாதது, மதிப்பு அதிகமானது. நீ முதுமையடையாதவள். காலத்தால் அழியாதவள். நீ முடிவில்லாதவள், அழகுபடுத்தப்பட்டவள், அற்புதமானவள், அழகானவள், நேர்த்தியானவள், நீ வீரப் பாடல், நகைச்சுவைப் படைப்பு, சங்கீதம், நாடகம் போன்றவள், எழுதப்பட்ட காதல் பாடல்கள் ஒவ்வொன்றுமே நீதான்.. ஆனால் தேனே, நீ என்னில் என்ன காண்கிறாய்...?

**"You are an essay in glamour...'Cause you're the warmest thing I've ever found"**

வசீகரத்தில் நீ ஒரு கட்டுரைப்போன்றவள். என்னுடைய இலக்கணத்தை மன்னித்துக்கொள், ஆனால் நீ தான் ஒவ்வொரு பாடசாலை மாணவனின் கனவு.... ஆனால் குழந்தையே நான் முடிவு செய்து விட்டேன், நீதான் நான் கண்ட சிறந்த குழு. எனக்கு பல தொடர்புகள் இருந்தன. பல தடவைகள் நான் விலக நினைத்தேன். நான் என் உதட்டைக் கடித்துக்கொண்டு திரும்பினேன். ஏனென்றால் நான் கண்ட மிகவும் கதகதப்பான பொருள் நீதான்.

எனக்கு எந்த விதமான வேறு தொடர்புகளும் இல்லை என்பதைத் தவிர எனக்காகவே எல்லாம் எழுதப் பட்டது போல் தோன்றியது.. என் வாழ்வில் நான் கண்ட மிகவும் கதகதப்பான பொருள் அவள் தானே... என் நினைவுகளில் அவள் தந்த கதகதப்புகள் தான் என்னை இப்போதும் அவளையே நினைத்துக் கொண்டிருக்க வைத்தது.

கூட்டம் உணர்ச்சி மேலீட்டால் ஆரவாரம் செய்தது... அவன் விட்ட இடங்களில் கோரஸ் பாடியது. நானோ அழுது கொண்டிருந்தேன்.

பாடி முடிந்தவுடன் அடுத்த பாட்டு The first cut is the deepest... பழைய காதலி தந்த வேதனையை சுமந்து கொண்டே, தனது புதிய காதலிக்காக பாடும் பாட்டு...

**I Would have given all for my heart...Baby I will try to love again ,But I know**

நான் உனக்கு என் முழு இதயத்தையுமே தந்திருக்கக்கூடும். ஆனால் என் இதயத்தை ஒருத்தி கிழித்து விட்டாள். நான் கொண்டிருந்த எல்லாவற்றையும் எடுத்து விட்டாள். ஆனாள் நீ விரும்பினால் நான் திரும்பவும் காதல் செய்ய முயற்சிக்கிறேன். ஆனால் எனக்குத் தெரியும்.

**The first cut is the deepest.... to loving me, she is worse.**

முதலாவது காயம்தான் ஆழமானது, என்னைக் காதலிப்பது என்பதில் அவள் மோசமானவள்...

**I still Want you by my side .... but I Know**

இப்போதும் நீ என் பக்கத்தில் இருக்க வேண்டும் என்றுதான் விரும்புகிறேன்... என் கண்ணீரை காய வைக்க நீதான் உதவ வேண்டும் என்று, உண்மையில் நான் முயற்சி செய்வேன். ஏனென்றால், நீ விரும்பினால் நான் திரும்பவும் காதல் செய்ய முயற்சிப்பேன்.

என்னால் ஏன் இன்னொருத்தியை நினைக்க முடியவில்லை. என் காயம் என் இதயத்தை துண்டாடிவிட்டதாலா? என்னை நானாக ஏற்றுக்கொண்டு என்னை மீண்டும் கைவிடாத ஒருத்தி எனக்கு கிடைப்பாளா?

'உன் இதயம்தானே புண்ணாக உள்ளது, உன் பாதங்கள் அல்லவே, நடந்து வா அந்த நதிக்கரைக்கு... வெந்துபோன உன் இதயத்தில் எத்தனை வடுக்கள் என்று எண்ணிப்பார்க்கப்போகிறேன்.. நொந்து போன உன் இதயத்தை எடுத்துக்கொண்டு என் இதயத்தை உனக்குத்தருகின்றேன்.'' என்று ஒருத்தி வருவாளா?

என்னை தன் மடியில் உறங்க வைத்து மிருதுவாய் என் நெற்றியை முத்தமிட்டு, என் கேசத்தைக் கலைத்து வருடி.. தன் மகன் போல் பாசத்துடன் வளர்க்கக்கூடிய ஒருத்தி எனக்கு கிடைப்பாளா?

நான் அவளைப்பற்றி பேசும் போதெல்லாம், இப்போதும் அவளைப் பற்றி நினைத்துக்கொண்டிருக்கிறாயே' என்று முகம் கோணாமல் குழந்தைபோல் கன்னத்தில் கை வைத்தபடி ஆர்வத்துடன் கேட்டுக்கொண்டிருப்பாளோ?

என் இதயத்தின் காயங்களைத் தடவி மருந்து போட்டு, அந்த நினைவுகளை ஏற்றுக்கொண்டு அவளைப் போலல்ல நான் என்று நிரூபிக்கும் ஒருத்தி எனக்கு கிடைப்பாளா? தன் நெஞ்சோடு என்னை அணைத்துக் கொண்டு ஓவென்று விம்மியழும் என்னை, கட்டியணைத்து ''என்ரை செல்லமல்லோ'' என்று குழந்தை போல் ஆறுதல் சொல்வாளா? ஏன் என்னால் இன்னொருத்தியை தேடிக்கொள்ள முடியவில்லை? நான் இன்னொரு காயத்தை வாங்கிக்கொள்ள பயப்படுகிறேனா? இல்லை. இவளைப் போல் இன்னொருத்தி, இவளைவிட மேலான இன்னொருத்தி எனக்கு கிடைக்கமாட்டாள் என்று நினைக்கிறேனே? ஏன்? அழுகை தாள முடியவில்லை. மீண்டும் விக்கல்வர அழத் தொடங்கினேன்.

சோகம் முடிந்த கூட்டம் Rock'n' Rollக்கு திரும்பி துள்ளியது. நான் பேசாமல் கண்ணீர் வழிய பார்த்துக் கொண்டிருந்தேன்.

பாடி முடிய கூச்சல் போட்ட சனம் அவன் மீண்டும் வருவான் என்ற எதிர்பார்ப்பிலோ என்னவோ காத்திருந்தது. நிரம்பி வழியும் தொட்டி போல் மெதுவாக சனம் வழிந்தது... வெளியே வந்தேன். ஒரு மரத்தின் கீழ் இருட்டாக இருந்த பகுதியில் விழுந்தேன்... கைகளை தலையணையாக்கி, மேலே பார்த்தேன்... C.N. கோபுரத்தின் மேலால் சந்திரன் பாதியாய் வந்து கொண்டிருந்தான்.

கூட்டம் கூட்டமாய் செல்லும் கும்பலில் சிறுவயதுக் கும்பல் ஒன்று சத்தமாய் You're in my Heart என்று பாடிக்கொண்டே சென்றது. கண்களால் வழிந்த கண்ணீர் கரையோரங்களால் வழிய நான் அவளை நினைத்து அழுது கொண்டிருந்தேன்.... இவள் நினைவுகள் ஆக்கிரமித்த என் இதயத்தில் தற்போதைக்கு இன்னொருத்திக்கும் இடம் இல்லை... விக்கி அழுது கொண்டிருக்க தொண்டைக்குள் நொந்தது.. ஏனடி என்னை விட்டுப் போனாய்...

தூரத்தே Bungee Jumping Crane தலை நீட்டிக்கொண்டிருந்தது.

தலைகீழாக வயிறு ஜிவ் என்று உள்ளே இழுத்துக் கொள்ள இதயம் தொண்டைக்குள்ளால் வரும் பிரமையோடு இரத்தம் வேகமாய் முகத்தில் பாய்ந்து சிவக்க கைகளும் தலைமயிரும் கீழே தொங்க ... பாயும் போது அந்தக் கணப்பொழுதில் ஏற்படும் வேதனையோடும் மகிழ்ச்சியோடும் பயத்தோடும் என் துயரங்களும் அவளின் நினைவுகளும் வெடித்துச்சிதறி என் இதயத்தில் இருந்து எந்தத் தடயமும் இல்லாமல் அழிந்து போய் விட வேண்டும்.

**Once and for all, I don't want to talk about it, How she broke my heart**

சனிக்கிழமை வந்து நான் Bungee Jumping செய்ய வேண்டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மூன்று கல்வி நிறுவனங்களும் ஒரு கலை நிகழ்ச்சியும்

-வடிவேல் இன்ப மோகன்



மொறட்டுவை பல்கலைக் கழக அனுசரணையில் கிழக்குப்பல் கலைக்கழகம், சுவாமி விபுலானந்தர் இசை, நடனக் கல்லூரி ஆகியன இணைந்து 1996 மார்கழி இறுதிப் பகுதியில் கலை நிகழ்வொன்றை மட்டக்களப்பு - அரசடி தேவ நாயகம் மண்டபத்தில் நிகழ்த்தின. இம்மூன்று வேறுபட்ட உயர்கல்வி நிறுவனங்களில் இருந்து வந்த கலைஞர்களின் இணைவாக நிகழ்வுகள் அமைந்தபடியால் நிகழ்வுகளிலும் மூன்று வேறுபட்ட அவதானிப்புகளை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

அவை, 1. மரபைப்பிரதிபலித்து நின்றமை.

2. சென்னெறித் தன்மையை பிரதிபலித்தமை.

3. நவீன போக்குகளைக் கையாண்டமை. என்பனவாகும்.

மொறட்டுவை பல்கலைக்கழக மாணவர்கள் மரபுசார் கலைவடிவங்களையும் மரபுசார்பாணியையும் தமது வெளிப்பாட்டில் கொண்டு வந்தனர். சுவாமி விபுலானந்தர் இசை நடனக் கல்லூரியினர் பாரம்பரிய கிராமியக்கலைகளுக்கு சென்னெறித் தன்மையை வழங்கி நேர்த்தியான முறையில் அளிக்கை செய்தனர். கிழக்குப் பல்கலைக் கழகத்தினர் நவீன நாடகத்தின் பல அம்சங்களைக் கையாண்டனர்.

இம்மூன்று வேறுபட்ட தன்மைகளும் மட்டக்களப்பின் கலை வளர்ச்சியில் மூன்று பிரதான போக்குகளைச்சுட்டி நிற்கின்றன அவை.

### 1. மரபைப் பேணுதல்:-

மட்டக்களப்பின் பாரம்பரிய கலை மரபைப் பேணவேண்டுமெனும் நோக்கில் அமைந்த முயற்சியே கூத்து, கரகம் என்பவற்றை மட்டக்களப்பில் பாரம்பரியமாக ஆடப்படும் முறையில் ஆடிக்காண்பித்தமை குறித்து நிற்கின்றது. இந்நடவடிக்கை தாமறியாது தம்மில் இருந்து அன்னியப்பட்டு இருந்த கலைவடிவங்களை மட்டக்களப்பு மக்கள் பிரக்ஞைப் பூர்வமாக விளங்கிக்கொள்ளவும் அவற்றை ரசித்து இன்புறவும் தக்க ஒரு சூழலைத்தோற்றுவித்தது.

மொறட்டுவை பல்கலைக்கழக மாணவர்களின் இப்போக்கு அவர்களின் நாடகங்களிலும் பிரதிபலித்தது. ஈழத்துத் தமிழ் நாடகத்தின் பல்வேறு வளர்ச்சிப் பரிமாணத்தையும் விளங்கிக்கொள்ளாது குறித்த ஒரு சிந்தனை வட்டத்தினுள் நின்று நாடகம் தயாரிக்கும் நாடகக் கலைஞர்களின் போக்கை இவர்களின் நாடகங்களிலும் அவதானிக்க முடிந்தது.

### 2. பாரம்பரிய கலைகளை மீள் உருவாக்கம் செய்தல்:-

அண்மைக்காலங்களில் மட்டக்களப்பில் பாரம்பரியமாக பிரதேசத் தனித்துவத்துடன் விளங்கிய கலை வடிவங்கள் பல வழக்கு இழந்து விட்டன. கொம்பு முறி, கும்மி, கரகம், கோலாட்டம், வசந்தனாட்டம், பறைமேளக் கூத்து, மகிடிக் கூத்து என்பன போன்ற கலைகள் மட்டக்களப்பு மக்களால் அறியப்படாத நிலையில் உள்ளன. இந்நிலையில் அவற்றை பேணல், மீள்உருவாக்கல் அவசியமானது.

சுவாமி விபுலானந்தர் இசைநடனக் கல்லூரியினர் கரகம், செம்பு நடனம், கும்மி, கோலாட்டம், குறவஞ்சி நடனம், மீனவர் நடனம், காவடியாட்டம் போன்றவற்றை சாஸ்திரிய இசைக்கருவிகளைப் பயன்படுத்தி கலை நேர்த்தியுடன் நிகழ்த்திக் காட்டினர். இம்முயற்சி கிராமிய கலை வடிவங்களை அதன் சமூகத்தளத்தைத் தகர்த்து மீள் உருவாக்கம் செய்து (சென்னெறிக் கலையாக்கி) இன்னொரு பரிமாணத்திற்கு கொண்டு செல்ல எடுத்த முயற்சியாக அமைந்து இருந்தது.

### 3. நவீன நாடக வடிவங்களை அறிமுகப் படுத்தல்:-

நாடகம் பல்வேறு வளர்ச்சிப் படிகளைத்தாண்டி வளர்ச்சியடைந்து கொண்டு வருகின்றது. இவ்வளர்ச்சிப் பாதையில் ஈழத்துத் தமிழ் நாடகமும் தமது தேவைக்கு ஏற்ப பல விடயங்களை உள்வாங்கி வளர்ச்சியடைந்து கொண்டு வருகின்றது. ஈழத்து அரங்க வளர்ச்சியில் மட்டக்களப்பின் அரங்க வளர்ச்சி பின்னோக்கியே உள்ளது. ஆனால் அண்மைக்காலங்களிலே ஒரு விழிப்புணர்வு தோன்றியுள்ளது. இவ்விழிப்புணர்வின் ஒரு பகுதியே கிழக்குப் பல்கலைக்கழகம் தயாரித்து வழங்கிய 'புழுவாய் பிறக்கினும்' என்னும் நாடகம் எனலாம். இச்செயற்பாடு நவீன நாடகத்தின் பல்வேறு போக்கையும் மட்டக்களப்பு மக்களுக்கு அறிமுகப்படுத்தும் நோக்கில் அமைந்து இருந்தது.

இவ்வாறு வேறுபட்ட போக்குகள் கலைஞர்களிடையே காணப்படுவது எமது பாரம்பரிய கலைகளைப் பேணுவதற்கும், அவற்றை மீள் உருவாக்கம் செய்து வளர்த்துச் செல்வதற்கும் புதிய கலை வடிவங்களை உள்வாங்கி அதற்கேற்ப தமது கலை வளர்ச்சியை முன்னெடுப்பதற்கும் பெரும் பங்களிப்பு செய்யும் என்பதில் சந்தேகம் இல்லை.

இக்கலைஞர்களின் வெளிப்பாடு ஒரு தூர நோக்கை உடையதாக அமைந்தபோதும் இன்றைய மட்டக்களப்பின் சூழலில் எவ்வாறான தாக்கத்தை தோற்றுவித்தது என்பது ஆராயப்பட வேண்டியுள்ளது. இன்றைய யுத்தச்சூழல் இப்பிரதேச மக்கள் வாழ்வில் பல்வேறு அவலங்களைத்தோற்றுவித்துள்ளது. இவ்வாறான சூழலில் மொறட்டுவை

→19

4→

## கூட்டணியும்...

போராட்டத்தை கைவிட்டு தேசிய அரசியல் நீரோட்டத்திற்கு வந்து செயற்பட்டுக்கொண்டிருக்கின்றோம். ஆயுதப் போராட்டத்தில் இருக்கக் கூடிய சாதக, பாதகங்களும் ஒரு ஜனநாயகப் போராட்டத்தில் இருக்கக் கூடிய சாதக பாதகங்கள் தடைகள் எதிர்ப்புக்கள் எல்லாம் வித்தியாசமானவை. நாங்கள் இன்று தேசிய அரசியல் நீரோட்டத்தில் கலந்து கொண்டிருப்பது ஏனென்றால், எமது மக்கள் ஆயுதப் போராட்டத்தில் நம்பிக்கை இழந்து தங்களது ஆதரவுகள், நம்பிக்கைகள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டு பாதிக்கப்பட்டிருப்பதால், எம் மக்களை அரவணைத்து அரசியல் போராட்ட வழியில் கொண்டு செல்லலாம் என்ற நம்பிக்கை காரணமாகவே.

***வடகிழக்குக்கு ஒரு இடைக்கால நிர்வாகசபையை நீங்கள் கோரினீர்கள். அக்கோரிக்கைக்கு இன்று என்ன நடந்தது?***

ஒரு நிரந்தமான அரசியல் தீர்வை நாங்கள் எட்டுவதற்கு நீண்ட காலம் எடுக்கலாம். நீண்ட காலமாக அரசியல் தலைமைத்துவம் இல்லாமல் ஒரு காத்திரமான ஜனநாயகச் சூழல் இல்லாமல் எமது தமிழ் பேசும் மக்கள் சொல்லொண்ணா கஷ்டங்களுக்கும் துன்பத்திற்கும் உள்ளாகியுள்ளனர். எமது மக்கள் சீரழிந்து அழிந்து போய்க்கொண்டிருக்கின்றனர். ஆனபடியால் இதனை உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டும்.

அடுத்தபடியாக மக்கள் தங்களது நாளாந்த பிரச்சினைகளை தீர்ப்பதற்கான ஒரு கட்டமைப்பு தளமும் இல்லாத நிலை காணப்படுகின்றது. இதற்கு ஒரு மாற்று ஏற்பாடு செய்தல் வேண்டும். அடுத்து ஒரு நீண்ட காலத் தீர்வுத் திட்டத்திற்கு கூட ஒரு ஆரம்பம் இருக்க வேண்டும். எமது மக்கள் தவறான வழிநடத்த லால் சோர்வுற்று, இழப்புற்று நிற்கிறார்கள். ஆகவே இதனைநிவர்த்தி செய்தல் வேண்டும். இதனை நாம் உடனடியாக தடுத்து சீர்செய்ய வேண்டும். ஆகவே இதற்காகத்தான் இடைக் கால நிர்வாகத்தைக் கோருகிறோம்.

இடைக்கால நிர்வாக சபை தொடர்பாய் அரசாங்கத்துடன் பலதடவை கதைத்திருக்கிறோம். அரசாங்கம் இதனை முற்றுமுழுதாக மறுதலிக்கவில்லை. இது எப்படி அமைய வேண்டும் என்பதில் இழுபறி இருக்கிறது. பாராளுமன்றத்தில் உள்ள தமிழ், முஸ்லிம் கட்சிகளைப் பொறுத்தவரை ஈ.பி.டி.பி, புளொட், முஸ்லிம் காங்கிரஸ் என்பன இதற்கு முழு ஆதரவும் வழங்குகின்றன. இது அவசியம் எனக்கருதுகின்றன. ஆனால் பாராளுமன்றத்தில் உள்ள சில அரசியல் கட்சிகள் இக்கோரிக்கைக்கு மறுப்புத் தெரிவிக்கின்றன. அதற்கு நியாயமான காரணங்கள் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அவர்கள் சிலருக்கு பயப்படுகிறார்கள். நாற்று நடவேண்டும் என்றால் சேற்றுக்குள் இறங்கித்தான் ஆக வேண்டும். மீன்பிடிப்பதென்றால் கடலுக்குள் இறங்கித்தான் ஆகவேண்டும். மக்களுடைய பிரச்சினைகளைத்தீர்க்க வேண்டுமென்றால், நாங்கள் யதார்த்தத்தை முகம் கொள்ளத்தான் வேண்டும். அழுக்குப்பட விரும்பாமல் களங்கப்பட விரும்பாமல் எதனையும் சாதிக்க முடியாது!

அடுத்து சிலபேர் இலாபம் கருதித்தான் இடைக்கால நிர்வாக சபையை எதிர்க்கிறார்கள். தங்களுக்கு வாய்ப்பு இல்லாமல் போய்விடும் என எண்ணுகிறார்கள். யார் குற்றினாலும் அரிசி என்றில்லாமல் தாங்கள் குற்றித்தான் அரிசி ஆகவேண்டும் என்ற நிலையில் தான் இழுபறி இருக்கிறது.

13வது அரசியல் திருத்தச் சட்டத்தை ஒரு ஆரம்பமாக, இடைக்காலமாக இந்த அரசாங்கம் அமுல் படுத்துமாகவிருந்தால் குறைந்தது ஐம்பது வீதமான பிரச்சினைகளை தீர்க்கலாம் என உண்மையில் நான் நம்புகிறேன். இதற்காகத்தான் இந்திய அரசிற்கும் இலங்கை அரசிற்கும் ஒரு அழுத்தம் கொடுப்பதற்காக நாங்கள் இந்திய- இலங்கை சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தாக்கல் செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கிறோம்.

***தமிழ், முஸ்லிம் மக்களின் பிரச்சினைக்கான தீர்வைக் காணும் காலகட்டத்தில் எப் போதும் போல் இப்போதும் தெற்கில் இனவாதிகளின் கை ஓங்கியிருக்கிறது. இந்தச் சவாலை எப்படி எதிர்கொள்ளலாம்?***

ஒரு வலுவான தெளிவான அரசாங்கத்தின் ஊடாகத்தான் இந்த எதிர்ப்புக்களை நாம் எதிர்கொள்ள முடியும். சிங்கள மக்கள் மத்தியில் சென்று நிலைமைகளை சொல்வதன் ஊடாகத்தான் எதிர்கொள்ளலாம்.

கெட்ட நோக்கமுடைய இனவாத சிங்கள அரசியல்வாதிகளின் அபிப்பிராயங்களின் ஊடாகத்தான் சிங்கள மக்கள் இப்பிரச்சினையைப் பார்க்கிறார்கள். அன்றும் இப்படித்தான பார்த்தார்கள். ஆனால் இன்று ஒரு வித்தியாசம் இருக்கிறது. அன்று மக்களாகவே இந்த நிலைமைக்கு வந்தார்கள். இன்று இனவாத அரசியல்வாதிகளும் புத்தபிக்குகளும் தான் முன்னணியில் நிற்கிறார்கள். ஆகவே நான் முன்பு கூறியது போல் ஒரு தெளிவான அரசாங்கத்தின் உதவியுடன் நாம் சிங்கள மக்கள் மத்தியில் சென்று எமது பிரச்சினைகளை முன்வைப்பதன் மூலம்தான் இந்த சவாலை எதிர்கொள்ளலாம்.

***ஐக்கியதேசியக் கட்சி, சந்திரிகா அரசினால் முன்வைக்கப்பட்ட தீர்வுப்பொதிக்கு ஆதரவு அளிக்காவிடின் இத்தீர்வுப்பொதி சட்ட அமுலாக்கம் பெறுவது சாத்தியமற்றதாகும். ஆகவே இத்தீர்வுப்பொதிக்கு ஆதரவளிப்பதற்காக ஐக்கிய தேசியக் கட்சியை நீங்கள் நிர்ப்பந்திக்க வில்லையா?***

ஐ.தே.கவை நிர்ப்பந்திப்பது என்பதைவிட எங்களுக்கும் அவர்களுக்கும் இடையில் இருக்கும் பரிச்சயம் என்ற அடிப்படையிலும், ஐ.தே.க. ஒரு தேசியக்கட்சி, தேசிய நலன்கள் என்ற வகையிலும், தமிழ் பேசும் மக்கள் இன்றைக்குப் படுகின்ற கஷ்டங்கள் துன்பங்கள் விரைவாகப் போக்கப்பட வேண்டும் என்ற உணர்வின் அடிப்படையிலும், தான் நாங்கள் ஐ.தே.கட்சியுடன் அடிக்கடி பேசிவருகிறோம். ஆனால் இனப்பிரச்சினைத்தீர்வுக்கு உடனடித்தடையாக அரச தரப்பைத் தான் நான் கருத வேண்டியிருக்கிறது.

இனப்பிரச்சினைக்கான தீர்வில் தேசியக் கட்சிகள் என்ற வகையில் ஒரு பக்கத்தில் ஐ.தே.கவும், மறுபக்கத்தில் பொ.ஐ.மு. அல்லது ஸ்ரீ.ல.சு.கட்சி. இதில் எங்களுடைய முயற்சி மட்டும் போதாது. ஐ.தே.கவும், பொ.ஐ.மு. இணைந்தால்தான் இங்கு தீர்வுகள் சட்ட அமுலாக்கத்திற்கு வரமுடியும். இதில் தமிழ் பேசும் கட்சிகள் அல்லது ஏனைய கட்சிகள் ஒரு மருத்துவிச்சிக்குரிய வேலையை மட்டும்தான் செய்ய முடியம்.

***"ஒரு நிரந்தரமான அரசியல் தீர்வு சிங்கள ஆட்சியாளர்களினால், வழங்கப்படாத வரை யுத்தம் நிரந்தமானது" என்ற கருத்து தமிழ், முஸ்லிம் மக்கள் மத்தியில் வலுப்பெற்றிருக்கிறது இது தொடர்பாய்...***

இக்கருத்தை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. ஏனென்று சொன்னால், இன்று இந்த யுத்தத்தில் இரண்டு தரப்புகள் தான் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றன. ஒரு பக்கம் சிங்கம். ஒரு பக்கம் புலி. சிங்கத்திற்கும் புலிக்குமிடையிலான ஒரு சுய அதிகார எல்லைப் போட்டியாகவே இந்த யுத்தத்தை நான் பார்க்கிறேனே தவிர, சிங்கள மக்களாக இருந்தாலும் சரி, தமிழ் பேசும் மக்களாக இருந்தாலும் சரி மக்களுடைய நலன்களைப் பிரதானப்படுத்தி யுத்தத்தில் ஈடுபடுவதாக நான் கருதவில்லை. புலிகளைப் பொறுத்த வரை தமிழ் மக்களுக்கு இருக்கக் கூடிய நியாயமான குறைபாடுகளை நியாயமான அரசியல் பிரச்சினைகளை பிரபாகரன் தனக்கு சாதகமாக பயன்படுத்துவதாகவே நான் கருதுகிறேன். ○

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# திரைப்படத்தின் தாக்கமும் பெண்ணின் வாழ்நிலையும்

-கே.எஸ்.சிவகுமாரன்

Social Conscientization Through Media On Gender Democracy என்ற பொதுத் தலைப்பிலே ஒரு பயிற்சிக் களம் கடந்த ஆண்டு இலங்கை மன்றக் கல்லூரியில் இடம் பெற்றது. இந்த ஆங்கிலத் தலைப்பைத் தமிழில் நாம் தருவதாய் இருந்தால், இவ்வாறு குறிப்பிடலாம்:

'பால்களுக்கிடையே நிலவக்கூடிய ஜனநாயகம் தொடர்பாக வெகுஜன ஊடகங்கள் மூலம் சமூகப்பிரக்ஞையை உண்டு பண்ணுதல்.' இந்த பொதுத்தலைப்பிலே, ''பெண்களின் அந்தஸ்திலும் வாழ்விலும் திரைப்படத்தின் செல்வாக்கு'' என்ற தலைப்பிலே கட்டுரையாளர் உரை நிகழ்த்தினார். அவருடைய பேச்சின் முதற் பகுதியின் சுருக்கம் இங்கே தரப்படுகிறது.

திரைப்படம் அல்லது சினிமா என்ற ஊடகம் மூலம் சமுதாய அல்லது சமூகப் பிரக்ஞை உண்டு பண்ணப் படுகிறதா என்பது எமது முதற் கேள்வி. சமுதாயவியலாளர்கள் எதிர்பார்க்குமளவிற்கு, சமூகப் பிரக்ஞை திரைப்படம் மூலம் உண்டுபண்ணப்படுகிறது என்று நாம் முற்றாகக் கூறிவிடமுடியாவிட்டாலும், திரைப்படம் என்ற வெகுஜன ஊடகம் சமுதாய உணர்வை ஓரளவு ஏற்படுத்துகிறது என்று கூறலாம். இது எப்படிச் செயற்படுகிறது என்பதை ஒரு சில உலகத் திரைப்படங்களின் உதாரணங்கள் மூலம் நாம் பார்ப்போம்.

அதற்கு முன்னர், திரைப்படம் பற்றியும், அதன் செல்வாக்குப் பற்றியும் நாம் சுருக்கமாக அறிந்து கொள்வோம். திரைப்படம் என்றால் என்ன என்பது நாம் எல்லோரும் அறிந்ததுதான்.

திரைப்படமாகத் தயாரிக்கத் தகுந்த முறையில் காட்சிகளாக எழுதப்பட்ட கதையைத் திரைக்கதை என்கிறோம். கதையின் அடிப்படையில் அமைந்த காட்சிகளைக் கலையம்சத்தோடு புகைப்படச் சுருளில் பதிவு செய்து திரையில் காட்டுவது திரைப்படம்.

செல்வாக்கு, தாக்கம், பிரதிபலிப்பு போன்ற சொற்கள் கிட்டத்தட்ட ஒரே அர்த்தத்தைக்கொண்டவை. சினிமா மக்களிடத்தில் பிரபல்யம் பெற்ற ஒரு வெகுஜன ஊடகமாக இருப்பதனால், பிறரைத் தன் விருப்பத்திற்கு ஏற்ப நடக்கச் செய்ய அல்லது வழி நடத்த இருக்கும் திறன் அதற்கு உண்டு.

எனவே இங்கு நாம் பார்க்க வேண்டியது திரைப்படம் காரணமாகப் பெண்களின் அந்தஸ்தும் வாழ்வும் எவ்விதபயன்பாட்டுக்கு அல்லது தாக்கத்துக்கு உட்பட்டது என்பதாகும்.

திரைப்படம் என்னும் பொழுது நாம் தமிழ்ப் படங்களை மாத்திரம் அல்லது இந்திய மொழிப் படங்களை மாத்திரம் மனதில் வைத்துப் பேசவில்லை. அனைத்துலகத் திரைப்படங்களையும் நாம் கருத்திற்கொள்வோம்.



மகளிர் அல்லது பெண்கள் முக்கியத்துவம் பெற்று வரும் காலம் இது. விழிப்புணர்ச்சி ஏற்பட்டு புதிய விழுமியங்கள் உருவாகி வருகின்றன. சர்வதேச மகளிர் ஆண்டும் வந்து நிறைவேறியுள்ளது. பெண்களுக்குச் சமூகத்தில் இருக்க வேண்டிய இடம் முற்றாகவே வந்து சேர்ந்து விட்டது என்று கூறுவதற்கில்லை. ஆயினும் கட்டம் கட்டமாக பழமைப் பிடியிலிருந்து மகளிர் விடுபட்டு வருகின்றனர்.

மகளிர் இயக்கங்கள் மூலமான புதிய விழிப்புணர்வு, கல்வி மேம்பாடு, பெண்களே தமது ஆற்றல்களை வெவ்வேறு துறைகளில் காட்டிவருதல், மனித உரிமைகள்/அடிப்படை உரிமைகள் பற்றிய கருத்துப் பரவல், உலகளாவிய கிராமமாக உலகம் சுருங்கிக் கொண்டு வருதல், உயர்மட்ட தொழில் நுட்ப முன்னேற்றங்கள், பல கலாசாரப் பண்புகளை அறிந்து வருதல், பழமையைப் புதிய போக்கில் பார்க்கும் புத்தறிவு, புத்தனுபவம் போன்றவை எல்லாம் மகளிரின் மேம்பாட்டுக்கு உதவி வருகின்றன. பழமையின் கட்டுப்பாடுகளின் எச்சசொச்சங்கள், கீழைத்தேய உலகில் வேரூன்றி இருப்பதனால் மாற்றங்களை உடனுக்குடனேயே எதிர்பார்க்க முடியாதுதான். ஆயினும் பொதுவாகக் கட்டம் கட்டமாக பெண்களின் அந்தஸ்தும், வாழ்வியலும் பெரும்பாலான நாடுகளில் முன்னேற்றங்கண்டு வருகின்றன. இதற்கு வெகுஜன ஊடகங்கள் பெரும் பங்களித்திருக்கின்றன. இவற்றிலே திரைப் படத்துறையும் அடங்கும்.

பொதுவாகத் திரைப்படம் எவ்வாறு செல்வாக்கைச் செலுத்துகிறது என்று அடுத்துப் பார்ப்போம்.

## தமிழ்ப் படச் சுவைஞர்

ஒரு திரைப்படத்தின் முக்கிய அம்சமாகக் கதை கருதப்பட்டு வருகிறது. நவீன சினிமாவில் சம்பிரதாய பூர்வமாகக் கதை என்று ஒன்று இருக்க வேண்டும் என்ற அவசியம் அற்றுப்போகிறது என்பது உண்மைதான் என்றாலும் கதைக்கு இன்றும் முக்கியத்துவம், குறிப்பாகத் தமிழ்ப் படங்களில் கொடுக்கப்படுகிறது. நம்மில் பலர் ஒரு நாவலையோ, சிறுகதையையோ கதைக்காகவே படிக்கிறோமே தவிர, அக்கதை மூலம் பெறும் அனுபவத்தை அல்லது சிந்தனையை அலசிப்பார்ப்பதில்லை. அதேபோல, சினிமாவையும் கதைக்காகத்தான் பார்க்கிறோமே தவிர சினிமா என்ற ஊடகத்தின் இதர அம்சங்களையும் சேர்த்து கூட்டு மொத்தமாகப் படத்தைப் பார்ப்பது நம்மிற் சிலர்தான். எனவே திரைப்படத்தின் செல்வாக்குச் செலுத்தும் அம்சங்களில் திரைக்கதை முக்கியமாகிறது. கதை நம்புந்தன்மை கொண்டதோ, இல்லையோ நமது நிறைவேறா ஆசைகளுக்கு வடிகாலாகத் திரைக்கதை அமைந்தால் போதுமானது. நாம் அதை உள்வாங்கிக்கொள்கிறோம். கதை வலியுறுத்தும் அம்சங்களைக் கேள்வியின்றி ஏற்றுக் கொள்ளப் பழகிக்கொண்டோம். உதாரணமாக, கணவனே கண் கண்ட தெய்வம், கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன், தாய்க்குப் பின் தாரம், மனைவியே மாணிக்கம் போன்ற இன்னும் பல கருத்தோட்டங்கள் திரைக்கதையில் வலியுறுத்தப்பட்டால், அவற்றையே நல்ல கருத்துள்ள படங்கள் என்று நாம் ஏற்றுக்கொள்ளப் பழகிவிட்டோம். விமர்சனரீதியாக அணுகும் பக்குவம் நம்மில் பலரிடையே இன்னும் எழவில்லை. ஆண் ஆதிக்கம் நிலவும்

→19

---

ஜீவாவுக்கு ஜெயராஜ் கட்டிய மணி!

மறுபக்கம்

பலகாலமாக எதுவும் எழுதாததையிட்டு வாசகர்களிடமும், ஆசிரியர் குழுவிடமும் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். எனது சோம்பலை முறித்ததில் 01-01-2001 என்னும் மிக முக்கிய மான திகதி பெரும்பங்கு வகிக்கின்றது.

மேற்கூறிய திகதியைப் பற்றி பல்வேறு துறைகளிலுமுள்ள பல்வேறு பிரமுகர்கள், ஜோசியங்களும், ஹேஸ்யங்களும் தீர்க்கதரிசனங்களும் கூறிவருகின்றனர்.

தேசிய, சர்வதேசிய அரசியல் குடுகுடுப்பைக்காரர்கள், 21ம் நூற் றாண்டு ஆரம்பித்த கையோடு அபிவிருத்தி, புரட்சி, ஜனநாயகம், செவ்வாய்க் கிரகத்திலிருந்து மந்திரக் கோல், சாந்தி, சமாதானம் இத்யாதி... வருது... வருது... என கிலுக்குகின்றனர்.

2000ம் ஆண்டு முடிவதற்குள் உலகம் அழிந்து விடும் என்று வேறுசிலர் அடித்துரைக்கின்றனர். மயில் ராவணனாக மாறிவிடலாமா என்று ஒரு யோசனை எனக்கு!

அதைவிடுங்கள்! கேட்டுப் புளித்துப்போன சமாச்சாரங்கள்!!

நம்ம இலக்கிய ஜாம்பவான்கள் சிலர் இந்தத் திகதியையிட்டு பெரும் அந்தரத்துக்குள்ளாகி இருக்கின்றார் கள்.

என்னவோ, இலக்கிய உலகானது 01-01-2001 இலிருந்து கட்டுக்கடங்காத வேகத்தில் சுற்றப்போவதாகவும், அச்சுழற்சியின் பயனாக ஈழத்து தமிழ் இலக்கியம் என்னும் புதிய நட்சத்திரம் உற்பத்தியாகி பிரபஞ்சத்தை ஒரு கலக்கு கலக்கப் போவதாகவும், அந்தப் புதிய நட்சத்திரத்தை வாய் பிளந்து பார்த்துக் கொண்டிருப்பதிலேயே ஏனைய தமிழ்ப் பிரதேச எழுத்தாளர் கள் காலம் கழிப்பார்கள் எனவும், அவர்கள் மனோராஜ்ஜியம் செய்து வருகின்றார்கள்.

இனியென்ன? நம் எழுத்தாளர்கள் சாகித்திய மண்டலப் பரிசு, சுதந்திர இலக்கிய விழாப் பரிசு போன்ற சில்லறைப் பரிசுகளையிட்டு கவலைப் படமாட்டார்கள் என்பதில் ஒரு ஆறுதல்! இனியெல்லாம் பெரிய மட்டத்தில் நோபல், புலிட்ஸர்... என்று தான் யோசிப் பார்கள் போலும்! சுவீடிஸ் மொழிபெயர்ப்பாளர்களைத் தேடி சிலர் அலைவதாகவும், 'யாரைப் பிடித்தால் நோபல் பரிசு வாங்கலாம்' என அலுவல் பார்ப்பதாகவும் உறுதிப்படுத்தப் படாத சில செய்திகள் ஆழ்வார்க் குட்டிக்குக் கிடைத்திருக்கின்றன.

எனினும், உறுதிப்படுத்தப்படக்கூடிய சில செய்திகளும் கைவசம் உள்ளன.

அண்மையில் மு.போ. இலக்கியவாதிகளில் மிக முக்கியஸ்தரான ஈழத்து சோமு அவர்கள் தமது மணி விழாவினைக் கோலாகலமாகக் கொண்டாடினார். அதையொட்டி பத்திரிகைகளில் அவரது வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புக்களும், அவரது சில கருத்துக்களும் வெளியாகின.

அவர் ஓரிடத்தில் கூறிய தீர்க்கதரிசனத்தை எனது வார்த்தைகளில் கூறுவதானால்,

'இருந்து பாருங்கள், அடுத்த நூற்றாண்டு பிறக்க இன்னும் சில வருடங்களே உள்ளன. இந்தச் சில வருடங்களுக்குள் 21 ம் நூற்றாண்டின் தமிழிலக்கியத்திற்கு மூக்கணாங்கயிறு பிடிப்பதற்காக சில அவதாரங்கள் ஈழத்தில் நிகழும்'

அன்பர் சோமகாந்தன் அவர்கள் அந்த அவதாரங்களின் ஜாதகங் களை கணித்துதவ ஏனோ தவறி விட்டார். அவ்வாறு அவர் செய்தி ருந்தால் நமது எழுத்தாளர்கள் மன அழுத்தங்களிலிருந்து விடுபட்டு தமது ஆயுளை நீடித்துக் கொள்ள பெரிதும் உதவியாக இருந்திருக் கும்.

05-01-1997 அன்று மல்லிகைப் பந்தல், டொமினிக் ஜீவா அவர்களது பெரும்பாலான சிறுகதைகளைத் தொகுத்து ஏறத்தாழ 600 பக்கங்கள் கொண்ட ஒரு நூலாக வெளியிட்டது. அவ்வெளியீட்டு விழாவில் வழக்கம் போல ஜீவா அவர்கள் 'இலக்கிய உலகின் சுழற்சிமையம் நானே' என்னும் தலைப்பில் வெளியீட்டுரை நிகழ்த்தினார். முக்கியமாக மேற்படி திகதி அவருக்கு மிகுந்த அந்தரத்தை கொடுத்ததை தெளிவாக உணர்ந்து கொள்ள முடிந்தது.

வெளியீட்டு விழாவில் உரையாற்றிய ஆய்வாளர்கள் கதைகளைப்பற்றி ஒரு வசனம் தானும் கூறவில்லை. கதைளைப்பற்றிப் பேச வேண்டாம் என ஜீவா அவர்கள் அன்புக் கட்டளை இட்டு விட்டாராம்.

ஜீவாவை அறியாதவர்கள் யார் இருக்கிறார்கள்? அவரது கதைகளை வாசிக்காத சீரிய வாசகர்கள் யாரிருக்கிறார்கள்? உண்மையில் அவரது சிறுகதைகளைப்பற்றி சரியான ஒரு மதிப்பீடு செய்வதற்கு உகந்த தருணம் இதுவே! அதற்கு ஏன் தடை போட வேண்டும்?

ஜீவா அவர்களது சிறுகதைகளை உச்சியில் வைத்து கொண்டாடுபவர்கள் பலருள்ளனர். மறுதலைகளாக அவை கதைகளா...? அவை அவரால் எழுதப்பட்டவை தானா...? என கேள்விகள் எழுப்பி ஏளனம் செய்பவர்களும் உள்ளனர்.

ஆனால் மறுபக்கம் வித்தியாசமானது. தமிழ் சிறுகதையுலகத்திற்கு ஜீவா அவர்களது பங்களிப்பு என்ன என்பது மிகைமதிப்பீடு இன்றியும், கண்மூடித்தனமான நிராகரிப்பு இன்றியும் அவதானமாகச் செய்யப்பட வேண்டும் என அது கோருகிறது. இது மிக அவசியமானது. ஜீவா மட்டுமல்ல, டானியல் முதலிய பல படைப்பாளிகளின் படைப்புக்கள் சரியான முறையில் மதிப் பிடப்பட வேண்டும். எம்மைச் சுற்றி பல போலியான ஐதீகங்கள் கட்டப் பட்டுள்ளன. 01-01-2001இற்கு உருப்படியாக ஏதாவது செய்ய நினைப்பவர்களுக்கு இது சமர்ப்பணம்.

அவ்வாறு செய்யத் தவறும் பட்சத்தில் ஜீவா அவர்கள் வழக்கம் போல பல்கலைக்கழகங்கள் என்னைப்பற்றியும் என் எழுத்துக்களைப் பற்றியும் ஆராய்ச்சி செய்ய வேண்டும் எனவும், 21ம் நூற்றாண்டுத் தமிழிலக்கியத்துக்கு யூரியா போடுவதற்கு நானும் மல்லிகையும் மட்டுமே உள்ளோம் என அடிக்கடி பிரகடனப்படுத்தியும் பெரிய சங்கடங்களை உண்டாக்குவதிலிருந்து நாம் தப்ப முடியாது!

கம்பன் கழக ஜெயராஜ் அவர்கள் நல்ல ஒரு சொற்பொழிவாளர் என பலரும் கூறக்கேட்டிருக்கிறேன். இவ்வெளியீட்டு விழாவிலேயே அவரது சொற்பொழிவை முதன் முதலில் கேட்டேன். இலங்கையில் சொற்பொழிவாளர்கள் மிகவும் குறைவு. அதற்கு சில விஷேட தகுதிகள் வேண்டும். அவையெல்லாம் ஜெயராஜ் அவர்களிடம் அமைந்துள்ளன. அவர் இவ்வெளியீட்டு விழாவில் ஆற்றிய உரை நேர்மை மிக்கதாகவும், ஜீவா அவர்களுக்கு மிகவும் பயன் தருவதாகவும் அமைந்திருந்தது. தங்களது தலையைச் சுற்றி ஒளிவட்டம் இருப்பதாக மிதந்து கொண்டிருப்பவர்களுக்கு அவரது கேள்விகள் சவுக்கடிகளாக விழுந்தன. ஒரு நல்ல பேச்சைக் கேட்ட திருப்தியில் முதன் முதலாக மனதாரக் கை தட்டினேன்.

தவிர, எழுத்தாளர்களுக்கு ஒரு ஆலோசனை.

21ம் நூற்றாண்டு பிறக்கப்போகும் திவ்விய முகூர்த்தத்தில் வெளியிடுவதற்காக சில கதைகளையாவது மிச்சம் பிடித்து வைத்திருங்கள். இல்லாவிடின், அதோகதிதான்! 21ம் நூற்றாண்டின் தமிழிலக்கியம் உங்களை கைவிட்டு விடும்!!

ஆழ்வார்க்குட்டி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# புதை குழிகளும் தேசியச் செல்வமும்!

ஜனவரி முதல் ஞாயிறன்று திருகோணமலை நகரசபை மண்டபத்தில் தோழர் ஜோர்ஜ் அரங்கில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினரால் அரசியல் கருத்தரங்கு ஒன்று இடம்பெற்றது. அதில் கூறப்பட்ட கருத்துக்கள்.

''தமிழ் மக்களதும் தமிழ் இளைஞர்களதும் இரத்தத்திலும் யுத்தத்திலும் உருவானது மாகாண சபை. வடக்கு கிழக்கு பிரச்சினைக்காகவே உருவாக்கப்பட்ட சபை வடக்கு கிழக்கு தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் செவ்வனே நடைபெறுகின்ற அதேவேளை, இங்கே அதிகாரிகளால் ஊழலும் துஷ்பிரயோகங்களும் நிறைந்த சபையாக மாற்றப்பட்டுள்ளது. நாளை வரப்போகும் பிராந்திய அரசிலும் இத்தகைய மோசடிப் பேர்வழிகள் நுழையமாட்டார்கள் என்பதற்கு என்ன நிச்சயம்?''

***(க. ரகுநாதன் - கருத்தரங்கத் தலைவர்)***

''துரோகிகள் ஒழிக்கப்படவேண்டும் என்ற தமிழ்த் தலைவர்களின் குரல் துரையப்பாவில் தொடங்கி இன்று வரை தொடர்கிறது. மாற்றுக் கருத்துக்களுக்கு மதிப்பளிக்காத சமூகம் எந்தக் காலத்திலும் விடுதலை பெறமுடியாது. ஆனால் எங்கள் மத்தியில் மாற்றுக் கருத்துள்ள அமைப்புக்கள், தனிநபர்கள் என்பன அழிக்கப்படும் நிலையே காணப்படுகிறது.

தமிழ் அமைப்புகள் கூட தமக்குப் பாதகமேற்படும் காலங்களில் மட்டுமே ஜனநாயகத்தைப் பற்றிப் பேச ஆரம்பிக்கின்றன. துப்பாக்கிகள் அமைப்புக்களால் பகிரங்கமாகவோ, இரகசியமாகவோ, அதிகாரபூர்வமாகவோ, அதிகாரமற்றதாகவோ தொடர்ந்தும் பேணப்பட்டு வருகின்றன. இராணுவத்துக்கு எதிராக துப்பாக்கியைத் திருப்பவில்லை என்ற ஒரே காரணத்தை மட்டும் வைத்துக் கொண்டு தாங்கள் ஜனநாயக வழிக்கு வந்து விட்டதாகச் சில அமைப்புகள் நினைப்பது தவறாகும்.

இனவாதம் அச்சத்தை அடிப்படையாகக்கொண்டது. தமிழ் மக்கள் மேல் சிங்கள மக்களும், சிங்கள மக்கள் மேல் தமிழ் மக்களும் கொண்டிருக்கும் அச்ச உணர்வே இத்தனை கலவரத்துக்கும் காரணம். இதனைப் போக்க வேண்டும்.

இலங்கைத் தீவு பிரிவதால் நிரந்தரப் பகையுள்ள இரண்டு நாடுகள் உருவாகும். இதனால் அமைதி வந்து விடாது. யுத்தம் முடிவின்றித் தொடர நேரிடும்...''

***(மனோரஞ்சன் - ஜனநாயகத்துடன் சமாதானத்துக்கான இயக்கத்தின் பேச்சாளர்)***

''யுத்தம் நடத்துவதில் அரசுக்குள்ள ஆர்வமும் வேகமும் தீர்வுத் திட்டத்தில் காணப்படவில்லை. யுத்தத்தின் மூலம் கிடைக்கும் வெற்றி தோல்விகளைக் கொண்டு சமாதானத்தை அடையமுடியாது. யுத்தத்தினால் மக்களை அகதிகளாக்க மட்டுமே முடியும்''

***(இ. ஸ்ரீதரன் - ஈ.பி.ஆர்.எல்.எப். மத்திய குழு உறுப்பினர்)***

''யுத்தமும் அவசரகாலச்சட்டமும் தமிழ் மக்களை மட்டும் பாதிக்கும் ஒன்றல்ல. சிங்கள மக்களும் பாதிக்கப்படுகிறார்கள். அவசரகாலச் சட்டத்தின் பிரகாரமே ரி.என் எல். செய்திப் பணிப்பாளர் கைதாகியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

நிக்கவெரட்டியவில் மாபெரும் மனிதப் புதைகுழிக்குக் காரணமானவரென்க் கருதப்படும் பிரிகேடியர் ஜானக பெரேராவுக்கு எதிராக விசாரணை ஆரம்பமானது. வாதிட வழக்கறிஞர்கள் தயாரானார்கள். ஆனால் ரிவிரச இராணுவ நடவடிக்கையைப் பாராட்டி அவருக்கு பட்டங்களும், வீரப்பதக்கங்களும் வழங்கப்பட்டன. அவர் 'தேசியச் செல்வம்' என வர்ணிக்கப்பட்டார். வாதிட வந்தவர்கள் பின் வாங்கினார்கள். நீதி மறைக்கப்பட்டு விட்டது.

புதைகுழிகளை வைத்தே வாக்கு வேட்டையாடிய சந்திரிகா அம்மையார் தனது பதவியின் போது அதே புதைகுழிகளுக்குக் காரணமாக இருந்தவர்களுக்கு பதவிகளும் பட்டங்களும் வழங்கும் ஒரு நிலைதான் அவசரகாலச்சட்டத்தின் கீழ் காணப்படுகிறது.''

***(சுனந்த தேசப்பிரிய - யுக்திய பிரதம ஆசிரியர்)***

''சிங்கள அரசியல் வாதிகளின் ஆலோசனைப்படி தீர்வுப் பொதியில் அதிகாரக் குறைப்புகளை மேற்கொள்ளத்தான் அரசு ஆர்வம் காட்டுகிறதேயொழிய, தமிழ் அமைப்புகளின் ஆலோசனைகள் அபிப்பிராயங்களைக் கிஞ்சித்தும் கணக்கெடுப்பதில்லை.

ஆணைக்குழு வைத்து ஐக்கிய தேசிய கட்சியினரை மடக்குவதில் அரசும், ஆணைக்குழுவை எடுக்காவிட்டால் என்ன செய்கிறேன் பார் என்று அரசை மிரட்டுவதில் ஐ.தே.க.வினரும் போட்டி போடுகிறார்களே யொழிய இனப் பிரச்சினைத் தீர்வில் அக்கறை காட்டுகிறார்களில்லை.

மூன்றாவது சக்தியொன்று தலையீடு செய்து சிங்கள தமிழ்க் கட்சிகளை நெறிப்படுத்தினாலன்றி தீர்வு என்பது சாத்தியமானதல்ல''

***(சுரேஸ் பிரேமச்சந்திரன்- செயலாளர் நாயகம)***

கருத்தரங்கில் கலந்து கொள்ள முன்னர் தமிழ் மக்களுக்குத் தீர்வு கிடைக்கும் என நம்பிவந்தேன். கருத்தரங்கின் முடிவின் போது அந்த நம்பிக்கையும் தளர்ந்து விட்டது.

***(நன்றியுரையில் சிவராமன் அவர்கள்)***

''கேட்பதற்கு நன்றாகத்தான் இருக்கிறது. வாய்திறக்க அனுமதி இல்லாத நிலையில் மக்கள் போராட்டம் என்றால் முடியுமா? ஆயுதங்களுடனும் பாதுகாப்புடனும் இருப்பவர்கள் எதையும் பேசலாம். மக்கள் வாய்திறக்கலாமோ?''

***(பார்வையாளர் ஒருவர் மெல்லிய குரலில்)***

**விவேகி**

# திருமலைச் சந்தையும் அவசர காலச் சட்டமும்

துர் நாற்றம்....

அழுகிய மரக்கறிகள்...

பழைய தகரங்கள் முகத்தை கிழிக்க முனையும் சோகம்.

மழைக்காலங்களில் ஆடைகளை முழங்காலுக்கு உயர்த்தியபடி விலகி விலகி நடக்கும் இடம் தான்...

'திருமலை மரக்கறிச் சந்தை'

இவ்விடம், இன்று தேசியப்பத்திரிகைகளுக்கு மெல்லும் அவலாகி விட்டது. அரசியல் வாதிகளுக்கு அறிக்கைகள் விட்டு, தங்கள் இருப்பை புலப்படுத்த உதவியாக அமைந்து விட்டது.

பல நாட்கள் கழுவாத கால்வாய்களில் வீசப்படும் அழுகிய மீன்களின் துர் நாற்றம் காரணமாக நகர சபையைத் திட்டிய மக்களின் மனங்கள் இவ்விவகாரம் தந்த எதிரொலிகளின் தாற்பரியங்களை நன்கு விளங்காமல் அந்தப் பகுதியால் போனால் தானே பிரச்சினை என ஒதுங்கும் இவ்வேளையில் இப்பிரச்சினையின் உட்சூக்குமத்தை சிறிது தட்டிவிட்டு புலப்படுமாறு செய்வது அவசியம் தானே?

1997 ஆண்டு -அதிகாரப் பரவலாக்கத்தின் காலம். பட்டிதொட்டியெங்கும் ஓலங்கல். இவ்வேளையில் மரக்கறிச் சந்தை விவகாரம் தோன்றியுள்ளது நல்ல சகுனம் போல்.

தமிழ் மக்களுக்கு அதிகாரத்தை கையளிக்கும் முகமாக சளைக்காமல் ஈடுபடப்போவதாக உரத்துக் கோஷமிடும் சந்திரிகா அம்மையாரின் அரசாங்கம் திருமலை மரக்கறிச் சந்தை விவகாரத்தை பெரிதாக பொருட்படுத்தாது பெரும்பான்மை இனவாதிகளின் நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் முகமாக மௌனமாக இருக்கும் வேளையில் இப் பின்னணியில் அதிகாரப் பரவலாக்கத்தின் வீரியத் தன்மையை சந்தேகம் கொள்ளும் அளவிற்கு தமிழ் மக்கள் இவ்விவகாரத்தின் காரணமாக வந்துள்ளமையை இவ்விடத்தில் சுட்டிக்காட்டுவது அவசியம்.

இதற்கு அப்பாலும் பின்வரும் பல வி யங்கள் இவ்விவகாரம் சர்ச் ை க்குள்ளாகி தொடரும் இவ் வேளையில் அவதானிக்கக்கூடியதாக உள்ளமை யதார்த்தமாகும்.

1. திருமலை நகரத்தின் முக்கிய குடியேற்றச் செயற்பாடுகளுக்கு இச்சந்தையை அண்டிப்பிழைப்பு நடாத்தும் 'சக்திகள்' முக்கிய காரணிகளாக விளங்குகின்றமை.

2. இவர்களுக்கு பின்னணியாக பிக்குகள், பெரும்பான்மைக் கட்சி அமைப்பாளர்கள் செயற்படுகின்றமை.

3. இச்சக்திகளின் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டும் வியாபார இலாபம் கருதியும் பெரும்பாலான முஸ்லிம் வியாபார குழாம் இச்சக்திகளுக்கு ஆதரவு வழங்கி வருகின்றமை.

4. திருமலைச் சந்தை அதன் மையமாக இயங்கும் வியாபாரத் தலத்தை தம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதன் மூலம் எதிர்கால உள்ளூர் அரசியல் வேலைகளுக்கும் திருகோணமலையில் தம்மை ஸ்திரப்படுத்தவும், புளொட் அமைப்பு திட்டமிட்டு செயல்படும் தன்மை - வவுனியா நகரத்தைப் போல திருகோணமலை நகரத்தையும் ஆளுகைக்குட்படுத்தல்.

5. மேற்கூறிய விவகாரத்தை விளங்கிக்கொண்ட தற்போதைய நகர சபைத் தலைவர் தன் நிலையைப் பலப்படுத்த 'பல்டி' அடிக்கும் அணுகுமுறைகள்.

6. வடக்கு கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை இராணுவ ஆட்சியே நடைபெறுகிறது என்பது தெளிவாதல். மக்களால் தெரிவுசெய்யப்பட்ட உள்ளூர் ஆட்சி பரிபாலகர்கள் வெறும் பொம்மைகள்.

7. பெரும்பான்மை மக்களின் அபிலாஷைகளுக்கு மட்டுமே பாதுகாப்புப் படைகள் கடமையாற்றுதல்.

8. அரசாங்கம் பாதுகாப்புப் படைகளின் முடிவை அனுசரித்து தொழிற்படல் என்பதும், இவ்விவகாரத்தை அணுகிய விதத்திலிருந்து தெளிவாகிறது.

இச்சந்தர்ப்பத்தில் தமிழ்க்கட்சிகளின்

→20

3→

# நட்ட...

ஆகியோரைக் கைது செய்தனர். எனினும் ஜனவரி 15ம்திகதி மூவரும் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

பணய முகவர்களின் பொறுப்பற்ற தன்மை, ஆட்கடத்தல் காரர்களின் அநியாயம், அவர்களுக்கெதிரான எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் என்பன ஒரு புறமிருக்க இத்தகைய தொடர் சம்பவங்களுக்குப் பிறகும் ஐரோப்பா நோக்கிய அகதிப்படை எடுப்பிற்கான பின்னணிகளை அலச வேண்டியது அவசியமானது. ஐரோப்பிய அரசியல்வாதிகளும் மற்றையோரும் கூறுவது போல வெறும் 'பொருளாதார அகதிகளின் வருகை' என்று இதனைப் புறக்கணித்துவிட முடியாது.

உள்நாட்டு அரசுகளின் வன்முறை அரசியல; விளைவான ஆயுதக் கிளர்ச்சி; மக்களின் உயிரையாவது பாதுகாத்துக் கொள்வதற்கான முனைப்பு.

மறுபுறத்தில் இந்த ஐரோப்பிய அரசுகளின் புகலிடக்கொள்கை. உதாரணமாக ஜேர்மனியின் அரசியல் யாப்பில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

**''ஒருவர் அரசினாலோ அல்லது அந்நாட்டின் நிர்வாகங்களாலோ அரசியல், இன மொழி, மத ரீதியாக ஒடுக்கப்பட்டால், அவருக்கு ஜேர்மன் அரசு பாதுகாப்பு அளிக்க வேண்டும்''**

இதன்படி இலங்கைத் தமிழர்கள் ஜேர்மனியில் அரசியல் புகலிடம் கோரும் உரிமை உண்டு. கொள்கை ரீதியாக இதனை ஏற்றுக் கொண்டிருக்கும் ஜேர்மன் அரசு நடைமுறையில் அகதிகள் வந்திறங்கும் எல்லா வழி வகைகளையும் அடைத்து விட்டிருக்கிறது. ஆக, அகதிகள் ஜேர்மனிக்குள் நுழைய வேண்டின் பயண முகவர்களை நாட நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். ஆபத்தான வழிகளைத் தெரிவு செய்கிறார்கள்.

எனவே இவ்வாறான இந்த ஐரோப்பிய அரசுகளின் இரட்டைத் தன்மை கேள்விக்குள்ளாக்கப்பட வேண்டும்.

இரண்டாவது, உள்நாடுகளில் அரசியல், பொருளாதார ஸ்திரமின்மைக்கான இந்த ஐரோப்பிய நாடுகளின் பங்கு ஒன்றும் இரகசியமானதல்ல. ஆயுத விற்பனையினதும், திறந்த பொருளாதாரக் கொள்கையினதும் விளைவுகளை ஆசிய் ஆபிரிக்க மக்கள் அனுபவிக்கத் தொடங்கி விட்டார்கள்.

இவை பற்றிய கேள்விகள் எதுவுமின்றி விடப்படும் முதலைக் கண்ணீருக்கு அர்த்தம் தான் ஏது?

○

2→

# சுதந்திரம்...

முந்தியை விட அங்கை போறதும் இஞ்சை வாறதும் முடியாமல் போச்சுது.

''வவுனியாவிலை வந்து கொழும்பிலை இருக்கிற ஆக்களின்ரை கடிதம் வாங்கி பாஸ் எடுத்து இஞ்சாலை வாறதுக்குப் படுகிற கஷ்டத்தைப் பார்த்தால் முந்திப் புலியள் செய்ததை இப்ப அரசாங்கம் செய்யுது எண்டு படுகுது. எப்பிடியோ நாடு இரண்டுதான் எண்ட உணர்வைத்தான் இவையெல்லாம் தருகுது''

000

''யாழ்ப்பாணத்திலை இப்ப மக்களுக்கு விடுதலை கிடைத்திருப்பதாக அரசாங்க செய்திகள் கூறுகின்றனவே''

''ஓமோம்... ஒரு வகையிலை அது விடுதலைதான். ஏனெண்டால் திரும்ப யாழ்ப்பாணம் போகக் கூடியதாக இருக்குது. இடிஞ்ச எங்கடை வீடுகளைப் பாத்து பெருமூச்சு விடக்கூடியதாக இருக்குது. இப்படி எத்தினை தரம் நாங்கள் விடுதலையைப் பாத்திட்டம்''

''அப்ப அங்கை இப்பவும் சுதந்திரம் இல்லை எண்டு சொல்ல வாறியளோ''

''சுதந்திரம் எப்பவும் அங்கை இருக்கத்தான் செய்தது. ஒரு காலம் இயக்கங்களுக்கு, பிறகு புலிகளுக்கு, அதுக்குப் பிறகு இந்தியப் படைக்கு, திரும்பவும் புலியளுக்கு... இப்ப, இலங்கை ஆமிக்கு... ஆக, அங்கை எப்பவுமே சுதந்திரம் இருக்கத்தான் செய்யுது... சனங்களுக்குத்தான் எப்பவும் மரண பயமும் சாவும்...

''........''

000

10→

# காலனித்துவமும்...

**நியாயப்படுத்துகிறது. எல்லா மனிதர்களையும் இரட்சிப்பதற்கு கிறிஸ்தவம் மிகவும் அவசியமானது என்ற உறுதியான முடிவும், எனவே எல்லாவித சட்டபூர்வ வழிகளினூடாகவும் அதைப்பரப்ப வேண்டும் என்ற முடிவுமே, கிறிஸ்தவத்தினை வணிக காலனித்துவத்துடன் இணையச் செய்த கோட்பாடுகளாகும். இந்த ஐரோப்பிய கலாச்சாரத்தினைப் பற்றிய உயர் வெண்ணமும் மற்றும் ஐரோப்பிய நாகரிகம் மற்றவற்றிற்கு ஆசிசொல்லும் அளவுக்கு மேலானது என்ற பெருமிதமும் சேர்ந்த ஒரு கோட்பாடு தான் தொழிற்துறை காலனித்துவ காலத்தின் பிரதான கோட்பாடாகும். இவற்றைக் காவும் வாகனங்களாக கிறிஸ்தவ திருச்சபைகள் செயற்பட்டு வந்தன.**

**காலனீத்துவத்திற்குப் பிந்திய காலம்:-** **காலனித்துவ காலத்தின் மீது மிகவும் விரைவாகவே ஒரு திரையைப் போட்டு மூடிவிட்டு அதேவேளை காலனித்துவத்தின் பின்னாலான பல விடயங்கள் தொடர்பாக உறுதியான துணிவுமிக்க கண்ணோட்டத்தை திருச்சபைகள் இன்று உருவாக்கிக் கொண்டுள்ளன.**

**நமது பாப்பரசர் ஜோன் வயது வந்தவர்கட்கும், இளைஞர்களுக்கும் இடையிலான உறவு பற்றி உரையாற்றினார், உப்சலா மாநாட்டில் புதிய தேசங்களின் சுயநிர்ணய உரிமை பற்றிப் பேசப்படுகிறது. பாப்பரசரால் அனுப்பப்படும் சுற்று நிருபங்கள் அபிவிருத்தி பற்றி பேசுவது மட்டுமல்லாமல் பொருளாதார ஏகாதிபத்தியத்தினைக் கண்டிக்கவும் செய்கின்றன. WCC இன் பல அறிக்கைகள் குறிப்பாக இனவாதத்துக்கு எதிரான அதன் திட்டங்கள் நவகாலனித்துவம் தொடர்பாக பேசுகின்றன. திருச்சபைகளுக்குள் ஆய்வுபூர்வமாக பரிசீலனை செய்யும் ஒரு பண்புகள், இப்பொழுது வளர்ந்து வருகின்றன. இவை குறிப்பிடப்பட வேண்டியவை. ஆயினும், காலனித்துவ காலத்திய தமது நடவடிக்கைகள் குறித்த சுய விமர்சனம் செய்யப்படுவதில்லை.**

○

**<u>வணபிதா. ஹேறாற்றாட்</u>**

**இவர் இயேசு சபையைச் சேர்ந்தவர். அண்மைய லங்கா கார்டியன் இதழில் வெளிவந்த இக்கட்டுரையை காலப்பொருத்தம் கருதி தமிழில் தருகிறோம்.**

**தமிழில்:- எஸ்.கே.வி**

○

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






## இடையறாத போராட்டமே தேவை!

இதழ் 111ல் 'வோட்டும் வேட்டும்' தமிழாக்கத்தின் 7வது வரியில் 'கொடூரமான' என்பது 'கொலூரமான' என அச்சாகி உள்ளது. மு.பொ, மதுசூதனன் (முதுமைக்குப் பரிசு) கடிதத்தில் ''நானும் நண்பர் மதுவும் எமது அறிக்கையோடு'' சிவகுருநாதனிடம் போனது பற்றி எழுதப்பட்டுள்ளது. (இது திருச்செல்வமும் சம்பந்தனும் எழுதிய கடிதம் மாதிரி ஒன்றாக இராது என நம்புகிறேன்.) பரிசுகள், பெறுவோரது தகுதியை விட, வழங்குவோரது தகுதியையே அதிகம் அளவிடுகின்றன. தகுதியற்ற படைப்புக்கு வழங்கப்படும் பரிசு பிற பரிசுகளையும் தகுதியற்றனவாக்கிவிடலாம். இதே சமயம், எழுத்தின் மேம்பாடு பரிசுகளால் அளவிடப்படுவதில்லை என்பது பற்றிய தெளிவு நல்ல எழுத்தாளர்கட்கு இருப்பது தகும். நொபெல் பரிசு உட்படப் பரிசு பற்றிய நம் ஏக்கங்கள் எல்லாமே ஒரு தாழ்வு மனப்பான்மையின் வெளிப்பாடு தான். எந்தப் பரிசளிப்பையும் விட நல்ல படைப்புக்கள் பல வாசகர்களையும் சென்றடைய வசதி செய்வதும் வாசிப்பின் தரத்தை உயர்த்துவதும் விமர்சனக் கண்ணோட்டத்தை வளர்ப்பதும் அதிகம் பயனுள்ளவை.

மு.பொன்னம்பலமும் மதுசூதனனும் சிறுகதை எனும் இலக்கிய வடிவம் இன்னும் பிரக்ஞைபூர்வமாகக் கையாளப்படவில்லை எனும் வாதத்தின் மூலம் வடிவந் தொடர்பான விஷயத்திற்கு அதிகம் முக்கியமளிப்பதாகத் தோன்றுகிறது. ஜெயமோகன் தமிழில் இதுவரை இரண்டே நாவல்கள் தான் வந்ததாக எங்கோ ஏதோ எழுதியதும் நாவலுக்கு வடிவஞ் சார்ந்த வரைவிலக்கணந் தரும் முயற்சியின் இடறலின் விளைவு என்றே ஊகிக்கிறேன். இன்றைக்கும், புதிதாக வாசிக்கத் தொடங்குகின்ற எவருக்குமே கூடப் புதுமைப்பித்தன் கதைகள் நன்றாகவே தெரிகின்றன என்றால், அது கதை வடிவத்தை விட முக்கியமாகக் கதை சொல்லும் ஆற்றல் காரணமானதே. பழைய பாணி - புதிய பாணி வேறுபாட்டை விடத் தெளிவான மொழி, ஆழமான சிந்தனை, வாசகரைச் சிந்திக்கத் தூண்டும் எழுத்து நடை போன்றன முக்கியமானவை.

ராதிகா குமாரசுவாமியின் கட்டுரை தமிழ் ரைம்ஸ் (Tamil Times 15-12-1996) இதழில் ஆங்கிலத்தில் வந்த போது வாசித்தேன். புலம் பெயர்ந்த தமிழரின் பழமை பேணும் போக்குக்குப் பல சமூகவியற் காரணங்கள் உள்ளன. இது தம்மீது திணிக்கப்படும் அந்நியன், கறுப்பன் என்ற அடையாளத்தின் எதிர் வினையாக இவர்களிற் பலர் நாடும் மரபு சார்ந்த ஒரு சுய அடையாளம். இது புலம்பெயர்ந்த வாழ்வின் நெருக்கடியின் ஒரு வெளிப்பாடு. இந்தப்போக்கு வெகுகாலம் தொடர முடியாது ஆயினும் புலம்பெயர்ந்த தமிழர் தமது சுய அடையாளத்தைப் பிற புலம் பெயர்ந்து ஒடுக்கப்பட்ட சமூகத்தினரது அடையாளமாக விருத்தி பெற்று வரும் பண்புகளுடன் தொடர்புபடுத்தும் தேவையை நாம் வலியுறுத்தும் தேவை உண்டு. தமிழ் ரைம்ஸ் ஆங்கிலம் படித்த நடுத்தர வர்க்கத்தினருக்கான ஏடு. அதில் திருமண விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், அரங்கேற்றங்கள், பழைய மாணவர் சங்கத் தேர்தல் முடிவுகளைப் போல் பல விளம்பரங்கள் வருவதுண்டு. கட்டுரையாளர் கூறுவது போன்ற பூப்புனித நீராட்டு வைபவ விளம்பரங்களைக் கண்ட நினைவில்லை. அவை கூடுதலாக தமிழ்ச் செய்தி ஏடுகளிலேயே வருவன.

பெண்புலிகளைப் பெண் விடுதலையுடன் சமன்படுத்தும் வாதப்பிரதிவாதங்கள் ஒரு அடிப்படையான விஷயத்தை மறந்து விடுகின்றன. இன்றைய போராட்டம் தேசிய இன ஒடுக்கல் பற்றியது. விடுதலைப் புலிகள் பெண் விடுதலை இயக்கமல்ல, சாதிய ஒழிப்பு இயக்கமுமல்ல. ஆயினும், போராட்டச் சூழல், பெண்களை ஆயுதமேந்த வைத்துள்ளது. சாதியத்திற்கு எதிரான சில செயல்களை அவசியமாக்கியுள்ளது. இவற்றின் விளைவான சில நல்ல மாற்றங்களைப் பழமைவாதிகளால் மீளவும் பின்நோக்கித்திருப்ப இயலாது. ஆயினும் பெண்விடுதலை இங்கேயே முழுமை பெற முடியாது. பலஸ்தீனம் நிக்கரகுவா போன்ற இடங்களிற் பெண்கள் விடுதலைப் போராட்டத்தின் பின்னும் தமது சமத்துவத்துக்காகத் தொடர்ந்து போராட வேண்டியுள்ளது. பல ஆயிரம் வருட ஒடுக்கு முறை ஒரு விடுதலைப் போர் மூலம் தீராது. இடையறாத ஒரு போராட்டத்துக்கான தேவை எப்போதும் நம்முன் உள்ளது.

*சிவசேகரம்*
*லண்டன்*

6→

## பெண் விடுதலைப்

பட்டது. இயக்கங்களின் பிரச்சாரக் கூட்டங்களில் பெண்களும் ஆர்வத்தோடு கலந்து கொண்டனர். பெண் விடுதலையை வென்றெடுத்த சமூகத்தில் பெண்களும் சமவுரிமையுடன் வாழும் சூழலே முழுச் சமூகத்திற்குமான விடுதலையைப் பெற்றுத்தரும் என்பதைப் போராளிகள் பூரணமாகவே நம்பியிருந்தனர். அதனடிப்படையில் செயற்பட்டனர். ஆனால் புலிகள் தவிர்ந்த ஏனைய அமைப்புகள் எவ்வளவில் அதனை கடைப்பிடித்தனர் என்பது கேள்விக்குறியே.

விடுதலைப் புலிகளில் முதல் பெண்புலி மரித்தது 1987ல், தமது முறையான பதிவுகளின் மூலம் மரணித்த புலிப்போராளிகளின் விபரங்களை வருடாவருடம் தாம் கொண்டாடும் மாவீரர் தினத்தின் போது வெளியிடுகின்றனர். இம்மாவீரர் வாரம் கொண்டாடத் தொடங்கியது 1989ல் இக்காலப்பகுதியில் இந்திய படையும் புலிகளும் போர் நிறுத்தம் செய்து இந்தியப்படை வெளியேறத்தொடங்கிய காலம். இக்காலத்தில் புலிகளுக்கு ஆட்பல, வளவலிமை குன்றியிருந்ததாகத் தெரியவில்லை. மாறாக புலிகள் பலம் பொருந்தியவர்களாகவே இருந்திருக்கின்றனர். இந்நிலையில் புலிகள் தமது ஆட்பல, வளவலிமைப் பெருக்கத்திற்காக பெண் புலிகளின் விபரப்பட்டியல்களை 87ற்கு பிற்பாடு ஒழுங்கு படுத்தினர் என்ற வாதம் அடிபட்டுப்போகிறது. பெண்களுக்கு அதிகாரம் வழங்கப்படவேண்டும். பகிரப்படவேண்டும் என்ற சிந்தனை மாற்றத்தில் புலிகள் எதனையுமே செய்யவில்லை என்கிறார் கட்டுரையாளர். இதற்கு அவர் எங்கிருந்து ஆதாரம் தேடினாரோ தெரியவில்லை. ஆனால் மாறாக புலிகளின் அமைப்பின் கீழ் பெண் புலிகள் தனிப்பட்ட அமைப்புகளாகச் செயற்பட்டுவருவது கண்கூடு. உதாரணமாக விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு, மகளிர் படையணி, சுதந்திரப் பறவைகள் என புலிகளின் கீழ் மகளிர் அமைப்புகள் செயற்படுகின்றன சுதந்திரப்பறவை என்னும் பெயரில் பெண்புலிகளின் குரலாக பத்திரிகை ஒன்றும் வெளிவருகிறது. பெண்களுக்கு எதிராக நிகழும் நடவடிக்கைகள் அவர்களது வேறு பல பிரச்சினைகளையும் ஆராய தமிழீழப் பெண்கள் ஆய்வு நிறுவனம் உள்ளது. புலிகள் உருவாக்கியுள்ள தமிழீழச் சட்டத்தில் பெண்களுக்கெதிரான வன்முறை குற்றங்கள் என்பவற்றிற்கு பரிகாரம் தேடப்பட்டுள்ளது. இதற்குள் சீதனத் தடைச் சட்டமும் அடங்கும். என்னும் தமிழீழ தண்டனை ஒறுப்புச்சட்டத்தில் பெண்கள் குறித்து கூறப்படும் விடயங்களில் திருத்தம் வாதப்பிரதிவாதங்களுடன் மேற்கொள்ளப்படல் வேண்டும்தான். பெண்களுக்கெதிராக நிகழ்ந்த அநீதிகளுக்கு புலிகள் மரண தண்டனை விதித்திருக்கிறார்கள். இவைகளனைத்தும் பெண் விடுதலையில் அக்கறை உள்ள அமைப்பொன்றாலேயே செய்ய முடியும்.

க்ட்டுரையாளர் புலம் பெயர் நாடொன்றில் பத்திரிகையில் வெளியான பூப்புனித நீராட்டு விழா பற்றிய விளம்பரத்தைப் பார்த்து விட்டு ஈழத்தில் ஏற்பட்ட சமூக மாற்றம் பெண் விடுதலைப் பாதையில் தற்காலிக மாற்றம் என்கிறாரா? பூப்புனித நீராட்டு விழா பெண்ணடிமைத்தனமானதோ அல்லது பெண்களை இழிவு படுத்தும் செயலாகவோ கருதப்படுவதில்லை. மாறாக பாரம்பரியமாக பின்பற்றப்படும் எமது சமூக கலாசாரத்தின் அம்சமாகும். இக்கட்டுரையாளருக்கு ஒரு விளம்பரமும் பீற்றர் ஷல்க்கின் கட்டுரையும் பெண்புலிகளால் பெண்விடுதலை கிடைத்துவிடப்போவதில்லை என்ற அவரது கருத்துடன் வலிதாக்கப்பட்டது பரிதாபத்திற்குரியதே!

9

## தொடர்பூடக...

ஐ.தே.கவின் 17 வருட ஆட்சியில் பத்திரிகையாளர்கள் மாற்று ஒன்றைத் தேடி சுதந்திரத்திற்காகவும், உரிமைக்காகவும் குரல் கொடுத்து வந்தார்கள்.

அந்த மாற்றை நோக்கிய சுதந்திரமும், ஆதரவும் இன்று பொய்த்து விட்டது. அதாவது 'அதுவும் ஒன்றே இதுவும் ஒன்றே' என்ற நிலைக்கு பத்திரிகையாளர்கள் வந்துவிட்டார்கள். எனவே இப்போதுதான் கட்சி சார்பற்றவகையில் பத்திரிகையாளர்களுக்கென்றே தனித்த சுதந்திரம், உரிமைக்காக ஒன்று கூடியிருக்கிறார்கள்.

இரு அனுபவங்களையும் கொண்ட பத்திரிகையாளர்கள்தான் இனி உண்மையான பத்திரிகைச் சுதந்திரத்திற்காகக் குரல் கொடுப்பார்கள் என எதிர்பார்க்கலாம். அதன் ஒரு நிகழ்வுதான் இவ்வார்ப்பாட்டமெனச் சொல்லலாம். இதைப்புரியாத அரசும், சில ஊதுகுழல்களும் கட்சிகளோடு சிண்டு முடியப் பார்க்கின்றன. 'அவர்களும் ஒன்றே இவர்களும் ஒன்றே' என்று பத்திரிகையாளர்கள் ஒரு சேரக் குரல் கொடுத்தபின் ''இது அவர்களின் வேலை'' என்பது முழுக்க நனைந்தபின் முக்காடு போடுகிற வேலை.

இதனை ஏற்பாடு செய்திருந்தவர்கள் இவ்வெதிர்ப்பை முழுமையான வகையில் செய்வதற்கான சில வழிமுறைகளைக் கைக்கொள்ளவில்லைப் போல் தெரிகிறது. இதன் காரணமாக தமிழ்ப் பத்திரிகைகள் சார்பில் எதுவித பதாகைகளும் அங்கு காணப்படவில்லை. ஏன் தமிழில் கூட ஒரு சுவரொட்டியோ, பிரசுரமோ இருக்கவில்லை. ஏற்பாட்டாளர்கள் தமிழ்ப் பத்திரிகைகளுடன் முன்கூட்டியே இது தொடர்பான கூட்டமைப்பை உருவாக்கியிருக்கலாம்.

பத்திரிகையாளர்கள் நடத்திய இந்த ஆர்ப்பாட்டத்தால் அரசு மிரண்டு போயுள்ளது என்பதனையும் இதற்கெதிரான பிரச்சாரங்களை மேற்கொள்ள அரசு தன் கட்டுப்பாட்டிலுள்ள சாதனங்களை எவ்வாறு பயன்படுத்துகிறது என்பதனையும் அன்றைய வானொலி செய்திகள் தெளிவாக இனம் காட்டின.

17→

## திரைப்படத்தின்..

குடும்பங்களில் பெண் முகமூடி அணிந்து கொள்கிறாள். இதுதான் நமது விதி. வாசல்படி நாம் தாண்டக்கூடாது என்று சில பெண்கள் நினைத்து அடங்கிப் போகிறார்கள். இந்த விதத்தில் தமிழ்த் திரைப் படங்கள், தமிழ்ப் பெண்கள் மீது ஆக்கபூர்வமாக அமையாமல், பாதகமான முறையில் செல்வாக்கைச் செலுத்துகின்றன.

கதைக்கடுத்ததாக, பெரும்பாலான பார்வையாளர், நடிக/நடிகையரின் நடை, உடை, பாவனைகளினால் கவரப்படுகின்றனர். அமைதியாக

அமெரிக்கையாக, அர்த்தபூர்வமாக நடிகர்/நடிகையர் நடிப்பதைப் பார்த்து மகிழ்வதைவிட அட்டகாசமான, ஆட்டம் பாட்டங்களையும், நகைச்சுவை என்ற பெயரில் கேவலமான கேலிக்கூத்துக்களையும், உதிரி உதிரியாகத் தமிழ்ப் பட இரசிகர்கள், குறிப்பாகத் தமிழ் நாட்டில் பழகிக்கொண்டதனால், அத்தகைய மசாலாக்களும் பாட்டும், கூத்தும், சண்டையும் தான் பெரும்பாலும் படங்களில் இடம் பெறுகின்றன. தமிழ் ஆண்களைப் போலவே தமிழ்ப் பெண்களும், இந்தக் கதாநாயக/ கதாநாயகிகளின் உடையலங்காரங்களையும், இன்ன பிறவற்றையும் ரசிப்பதனால் இவையும் தமிழ்ப் பெண்கள் மீது செல்வாக்கை செலுத்துகின்றன. இவை தவிர மேனாட்டு நடனம், இசைக் கலப்புடன் வரும் காட்சிகளையும் நம்மில் பலர் ரசிக்கத் தொடங்கி விட்டோம். தமிழ்ப் படங்கள் தொழில் நுட்பக் கலைகளைத் தமதாக்கிக்கொண்டதனால், புதுப்புது வடிவங்களில் வரத்தொடங்கியுள்ளன. இவற்றின் தாக்கம் உனடியாகத் தெரியாவிட்டாலும், இவையும் பெண்களின் அந்தஸ்த்திலும் வாழ்க்கைப் போக்குகளிலும் மாற்றங்களைக் கொண்டு வரும் என்று எதிர்பார்க்கலாம்.

இன்னுமொரு விஷயத்தையும் இங்கு நாம் கவனத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டும். அதாவது கலைத்தரமான படம், பொழுது போக்குப் படம் என்ற வேறுபாடு. இந்த விதமான திட்டவட்டமான பாகுபாடுகளை நாம் செய்ய முடியாத அளவுக்குக் களிப்பூட்டும் படங்கள் சில கலைத்தரமுடையவையாகவும், உருவாகியிருப்பதைக் குறிப்பிட வேண்டும். உண்மையில் பார்க்கப்போனால் நல்ல நெறியாளர் ஒருவரின் கையில் உருவான படம், அவ்வாறு அல்லாத ஒருவரின் ஆக்கத்தில் உருவாகிய படம் என்று வேண்டுமானால், நாம் வகைப்படுத்தலாம். உதாரணமாகக் காட்டுவது என்றால், ''ஆசை'' என்ற படத்தை நல்ல நெறியாள்கையில் உருவான படம் என்றும், ''இந்தியன்'' என்ற படம் நெறியாள்கை நன்கு கைவரப் பெறாத ஒருவரின் கலையம்சம் சிதறுண்ட படம் என்றுதான் கூறுவேன்.

மேலும் சில விபரங்கள் அடுத்த வாரம்.

## மூன்று...

பல்கலைக்கழகம் தனது நாடகங்களின் மூலம் (சிலந்தி, தகுதி, இருக்கும் இடம், கூண்டுக்குள்ளே) குடும்ப வாழ்வில் தோன்றும் சாதாரண முரண்பாடுகளையே சுட்டிக் காட்டியது. அதேபோல் விபுலானந்த இசை நடனக்கல்லூரி மட்டக்களப்பின் சில பாரம்பரியங்களை மேடையில் கொண்டு வர முயன்றது. இந்நிகழ்ச்சிகள் மக்கள் மேல் பெரிதாக தாக்கம் செலுத்தவில்லை. அவர்களின் எதிர்ப்பார்ப்புகளை பூர்த்தி செய்வில்லை எனலாம்.

கிழக்குப்பல்கலைக்கழகத்திலிருந்து வழங்கிய நாடகத்தின் மூலம் பாலசுகுமார் பல விடயங்களைப் புலப்படுத்த முயன்றார். இவர் அண்மைக்கால யுத்த சூழல் ஏற்படுத்தக் கூடிய அவலத்தையும் யுத்தத்தின் குரூரத்தையும் துள்ளியமாகப் புலப்படுத்துகின்றார். இருந்தும் இது மக்களை முழுமையாக சென்றடையவில்லை இதற்கு பிரதானமாக இரு காரணங்கள் அமைகின்றன.

1. பாலசுகுமார் பயன்படுத்திய வெளிப்பாட்டு வடிவம் மட்டக்களப்பு மக்களுக்கு புதியது. இவ்வடிவத்திற்கு இம்மக்கள் பழக்கப்பட்டு இருக்கவில்லை.

2. பிரதியை பாலசுகுமார் மட்டக்களப்பின் சூழலை மையமாகக் கொண்டு அவர்களின் பிரச்சினைகளுக்கு ஏற்ப தயாரிக்கவில்லை. இது பாண்டிச்சேரியைச் சேர்ந்த கணேசன் என்பவரால் தயாரிக்கப்பட்டதால் அது இச்சூழலுக்கு முழுமையாக பொருத்தம் இல்லாதிருந்தது.

இவை நாடகத்தை விளங்கிக்கொள்வதற்குத் தடையாக இருந்தன.

புதிய வடிவங்களை அறிமுகப்படுத்தும் போது இவ்வாறான சில சிக்கல்கள் தோன்றுவது சகஜம். இருந்தும் பாலசுகுமார் பிரதியை தனது சூழலுக்கு ஏற்ப மாற்றியமைத்து இருந்தால் தான் நாடகத்தின் மூலம் கூறவந்த கருத்து மக்களை முழுமையாக சென்றடைந்திருக்கும்.

இவவாறான சில முரண்பாடுகள் இக்கலை நிகழ்வில் அமைந்து இருந்த போதும் மட்டக்களப்பின் அரங்க வரலாற்றில் ஒரு முக்கியமான நிகழ்வாகவே நாம் இதனைக் குறிப்பிட முடியும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA.

## இரு வாரங்களில்

டிச.31.1996

-மட்டு-மண்டுரில் 30 வயதுப் பெண்ணொருவர் வயலுக்கு வேலை செய்யச் சென்ற தனது கணவருக்கு உணவு கொண்டு சென்ற போது கைது செய்யப்பட்டு மூன்று அதிரடிப்படையினரால் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டார்.

-வெல்லாவெளி முகாம் பற்றிய ஒரு செய்தியை டீ.என்.எல் தொலைக்காட்சி சேவையில் ஒலிபரப்பியதற்காக டீ.என்.எல் செய்தி ஆசிரியர் இஷினி விக்கிரமசிங்க, பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது.

ஜன.01.1997

-வாழைச்சேனை காகித ஆலை குடிமனைப் பிரதேசத்தில் இரவு 10.30 அளவில் மூன்று ஷெல்கள் விழுந்து வெடித்ததில் 3 குடி மனைகள் அழிந்தது.

-அரச தொலைக்காட்சி சேவையான ஐ.டீ.என் செய்தியாளர்களை, டீ.என்.எல். செய்தியாளர் என நினைத்து அரசாங்கத்தைச் சேர்ந்த முக்கிய அரசியல்வாதியொருவரின் அடியாட்களினால் தாக்கப்பட்டதில் 15 லட்சம் பெறுமதியான வீடியோ கெமரா சேதமாக்கப்பட்டது. இச்சம்பவம் கம்பஹா-மிரிஸ்வத்தை சந்தியில் விபத்தொன்றை படமெடுத்துக்கொண்டிருந்த போது நிகழ்ந்தது.

ஜன.02

-சாவகச்சேரி மறவன்புலவு பகுதியில் புலிகள்-படையினர் மோதலில் இரண்டு படையினர் பலி.

-யாழ் குடாநாட்டில் திருநெல்வேலியில் காலை 7.45 மணியளவில் இராணுவத்தினர் சென்ற உழவு இயந்திரம் ஒன்று கண்ணி வெடியில் சிக்கியதில் 6 படையினர், (மூன்று பெண்படையினர் உட்பட) 3 குடிமக்கள் பலி. ஒருவர் காயம்.

-21 பெண் தொழிலாளர்கள் முழு நாள் வேலை செய்தும் அரை நாள் சம்பளம் போடப்பட்டதை ஆட்சேபித்து நீதி கேட்கச் சென்ற தொழிலாளர்களின் மீது நிர்வாகம் பொலிஸாரை ஏவி கண்ணீர் புகைக்குண்டு வீசி விரட்டியது. இதன் போது 5க்கும் மேற்பட்ட பெண் தொழிலாளர்கள் கண் பாதிப்புற்று ஆஸ்பத்திரியில். சிதறி ஓடியபோது வேலிகளில் விழுந்து பலர் படுகாயம். இது நோர்வூட் வென்ஜர் தோட்டத்தில் நடைபெற்றது.

ஜன.03

-டிசம்பர்.31இல் ஆரம்பிக்கப்பட்ட 'ரிவிஜய' இராணுவ நடவடிக்கையினால் மூன்று நாளில் 16 வீடுகள் தீக்கிரையாகி அழிக்கப்பட்டுள்ளதாக செங்கலடி பிரதேச செயலாளரிடம் முறைப்பாடு. 1500க்கும் மேற்பட்ட குடும்பங்கள் இடப்பெயர்வு.

-நோர்வூட் வென்ஜர் தோட்ட தொழிலாளர்கள் 700 பேர் வேலை நிறுத்தம்.

ஜன.04

-ஆயித்தமலையில் நிலை கொண்டு முகாம் அமைக்கும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட 'ரிவிஜய' இராணுவ நடவடிக்கை தோல்வியுற்று மீண்டும் முன்னைய இடங்களுக்கு படையினர் திரும்பினர். திரும்பும் வழியில் கித்துள் கிராமத்தில் தம்பிராசா (32), எஸ்.முத்துலிங்கம் (14) ஆகிய இரு குடிமக்கள் படையினரின் துப்பாக்கிக்கு பலி. சபாபதி மயில்வாகனன் எனும் குடும்பஸ்தர் காணாமல் போனார்.

-இராணுவ தடுப்புக் காவலின் போது, மேலும் 27 பேர் காணாமல் போயுள்ளதாகவும் ஏற்கெனவே இவ்வாறு காணாமல் போனவர்களின் 37 பேரது பட்டியலை அனுப்பியிருந்ததாகவும் ஜோசப் எம்.பி. ஜனாதிபதிக்கு முறையீடு.

-மட்டு-புனானை பகுதியில் புலிகளின் தாக்குதலுக்கு படையினர் மூவர் பலி. இருவர் காயம்.

-சேருவில வான் எல பொலிஸ் பகுதியில் உள்ள காலரண் மீதான புலிகளின் தாக்குதலுக்கு இரு ஊர்காவல் படையினர் பலி. இருவர் படுகாயம். ஒரு புலி பலி.

-யாழ்-ஸ்ரேன்லி வீதியில் ஈ.பி.டி.பி காரியாலயம் திறப்பு.

-கிழக்கில் ஆங்காங்கு புலிகளால் நடத்தப்பட்ட தாக்குதலினால் 3 படையினர் பலி. 32 பேர் காயமுற்றதாகவும் 5 புலிகள் பலியானதாகவும் படையினர் தரப்பு (6ம் திகதி) அறிக்கை.

-மத்தியில் அதிகாரமுடைய அதிகாரப்பரவலாக்கத்தை உருவாக்கும்படி உலக வங்கி அரசுக்கு வலியுறுத்தல்.

ஜன.05

நாச்சிக்குடா கடற்பிராந்தியத்தில் மீன்பிடிக்கச் சென்ற அல்போன்ஸ் யோகானந்தன் (வயது-30) சி.செபஸ்தியான் (வயது-40) ஆகிய இருவரும் கடற் படையினரின் துப்பாக்கி சூட்டுக்குப் பலி. (சம்பவ தினம் சரியாக தெரியவரவில்லை)

ஜன.09

ஆனையிறவு-பரந்தன் இராணுவ தளங்கள் மீது புலிகளின் பாரிய தாக்குதல்.

-மட்டு-தியாவட்டவான் கிராமத்தில் தாய், மகள் மற்றும் வீட்டு உதவிப் பெண் ஆகிய மூவரை படையினர் மூவர், அதிகாலை 3 மணிக்கு வீட்டைத் தட்டிப் புகுந்து பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கினர்.

-வவுனியா விஸ்வமடு 10ம் கட்டைப் பகுதியில் விமானப்படையினரின குண்டுத்தாக்குதலினால் 3 பொது மக்கள் பலி. 13 பேர் படுகாயம். வீடுகள் கட்டிடங்கள் பலத்த சேதம்.

ஜன.12

-சாவகச்சேரி கச்சாயில் படையினர் சென்ற உழவு இயந்திரம் கண்ணி வெடியில் சிக்கி 8 படையினர் பலி. 10 படையினர் படுகாயம். (பாதுகாப்பு அமைச்சு தகவல்.)

-வவுனியா-செட்டிக்குளம் காவல் முன் அரண்மீது புலிகள் நடத்திய தாக்குதலில் 5 படையினர் பலி. 10 படையினர் படுகாயம்.

ஜன.16

-மன்னார் சவுத்பார் குடியேற்ற பகுதியில் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நீலன்கரன் (வயது-25) என்பவர் மரணம்.

-யாழ்ப்பாணத்திற்கு மேலாக பறந்து திரிந்த இஸ்ரேல் தயாரிப்பான "இட்ரா" எனும் விமானி இல்லாத தன்னியக்க இஸ்ரேல் விமானமொன்று காணாமல் போனது.

-"கல்முனை பொய்ன்ட்" எனும் கடற்பிரதேசத்தில் கடற்படையினரின் சிறிய படகு புலிகளால் தாக்கப்பட்டதில் 3 கடற் படையினர் காணாமல் போயினர்.

ஜன.18

-அனுராதபுரம்-கெப்பித்திகொல்லாவ (கணுகஸ்கந்த) பொலிஸ் காவல் நிலை மீது புலிகள் தாக்கியதில் 24 பொலிஸார் பலி. 31 பொலிஸார் கடுகாயம்.

ஜன.19

மட்டு-மாமாங்கத்தில் புலிகள் சுட்டதில் ஒரு பொலிஸ் பலி.

ஜன.20

-இலங்கை விமானப்படைக்கு சொந்தமான சீன தயாரிப்பு வை-12 ரக போக்குவரத்து விமானம் வானெல்லையில் வைத்து (நான்கு பேருடன்) அதிகாலை காணாமல் போனது.

-இந்திய வெளியுறவு அமைச்சர் குஜ்ரால் வருகை.




**வ**வுனியா பாவற்குளம், பூவரசங் குளம் பகுதி மக்கள் தமது சொந்த இடங்களில் தொடர்ந்து பாதுகாப்பாக குடியிருக்க முடியுமா என்பது குறித்து சஞ்சலம் கொண்டவர்களாக இருக்கின்றார்கள். இப்பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் இங்கு புதிதாக நிலவத் தொடங்கியுள்ள பீதி நிறைந்த சூழல் காரணமாக வவுனியா நகரப்பகுதியில் உள்ள தமது உறவினர்களது இடங்களில் சென்று தங்கியிருக்க தலைப்பட்டுள்ளனர்.

தைப்பொங்கல் தினம் வவுனியாப் பகுதி மக்களுக்கும், வசதிகள் குறைந்ததாகவும் கஷ்டங்கள் நிறைந்ததாகவும் உள்ள வன்னிப் பகுதி மக்களுக்கும் மனதில் பெரும் எதிர்பார்ப்புக்களையும், நம்பிக்கைகளையும் ஊட்டத் தக்கதாக அமைந்த போதிலும் பூவரசங்குளம் பகுதி மக்களுக்கு அவ்வாறமையவில்லை.

அன்றிரவு திடீர் என இராணுவக் காவலரண் பகுதியில் எழுந்த வெடியோசையும், பதில் வேட்டோசையும் உடனே ஓய்ந்து விட்ட போதிலும், இப்பகுதி மக்களிடம் எழுந்த பீதியுணர்வும் எதிர்காலப் பாதுகாப்பு குறித்த அச்சமும் இன்னும் தீரவில்லை.

இப்பகுதியில் உள்ள ட்ராண்ஸ்போமர் ஒன்று நள்ளிரவு வேளையில் பேரோசையுடன் வெடித்தது. எங்கும் இருள் சூழ்ந்தது. தொடர்ந்து இராணுவக் காவலரண் நோக்கி துப்பாக்கி வேட்டுகள் தீர்க்கப்பட்டன. படைத்தரப்பினரிடமிருந்து பதிலடியும் தொடர்ந்தது.

பொலிஸ் நிலையம், இராணுவ முகாம் ஆகியவற்றிலிருந்து சீறிச் சென்ற துப்பாக்கிக் குண்டுகள் வைத்தியசாலை கட்டிடங்களைப் பதம் பார்த்தன. அங்கு கடமையாற்றிய பெரும்பான்மையின வைத்தியர் மயிரிழையில் உயிர் தப்பினார்.

சில மாதங்களுக்கு முன்பும் புலிகள்-இராணுவம் மோதல் ஒன்றைச் சந்தித்து துன்புற்ற இப்பகுதி மக்கள் மிகவும் பயந்து போனார்கள். இத்தாக்குதல் சம்பவத்தில் இராணுவ வீரர் ஒருவர் காயமடைந்ததாக விடிந்த பின் ஊரெங்கும் கதை பரவியது. அதே வேகத்தில் ஊர் முழுவதையும் சுற்றி வளைத்த இராணுவத்தினர் சுமார் 18,20 இளைஞர்களைக் கைது செய்து விசாரணைக்காக அழைத்துச் சென்றனர்.

சோதனை நடவடிக்கைகள் கடுமையாக இருந்தது போலவே விசாரணைகளும் மிகத் தீவிரமாக இருந்தன. இவற்றை விட அப்பகுதி மக்களையும் இளைஞர்களையும் திகைக்க வைத்த செய்தியும் ஒன்று இருந்தது. அன்றைய தாக்குதல் இராணுவத்தின் முன்னணிக் காவலரணுக்கு வெளியில் இருந்து வரவில்லை. காவலரணுக்கு உட்பட்ட இராணுவத்தின் பாதுகாப்பில் இருந்த பகுதியில் இருந்தே வந்தது என்பதே.

இச்சுற்றிவளைப்பின் போது ஈ.பி.ஆர்.எல்.எப், இயக்கத்தைச் சேர்ந்த வாலிபர் ஒருவரும் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப் பட்டுள்ளதாக அக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. தமது உறுப்பினர் இராணுவ பொலிஸ் விசாரணையில் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதாக வவுனியா விலுள்ள இக் கட்சியின் முக்கியஸ் தர்கள் பொலிஸ் உயர் அதிகாரிகளினதும் இராணுவ உயர் அதிகாரிகளினதும் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளனர். எனினும் ஒருவார கால விசாரணையின் பின்னரும் இன்னும் இவ்வாலிபர் விடுதலை செய்யப்படவில்லை என்று கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளையில் நான்கு இளைஞர்கள் துப்பாக்கிகளுடன் கைது செய்யப்பட்டு மேல் விசாரணைக்காக கிளர்ச்சித் தடுப்புப் பொலிஸ் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக வவுனியாவில் இருந்து கசிந்த தகவல் ஒன்று தெரிவிக்கின்றது. இவர்கள் அரசியல் நீரோட்டத்தில் இணைந்துள்ள தமிழ்க் கட்சிகளின் இராணுவப் பிரிவைச் சேர்ந்தவர்களா அல்லது புலி உறுப்பினர்கள் தானா என்பதும் ஊர்ஜிதமாக்கப்படவில்லை. செட்டிக்குளம் இராணுவப் பெரும் பிரிவுக்குட்பட்ட பாவற்குளம் பூவரசங்குளம் பகுதிகளிலும் வேப்பம் குளம், வவுனியா இராணுவப்பிரிவுக்குட்பட்ட எல்லைப் பகுதிகளிலும் அண்மைக் காலமாகவே பொலிசாரினதும், இராணுவத்தினரினதும் கெடுபிடிகள் அதிகரித்துள்ளதாகவும் படைத்தரப்பினருக்கும் பொதுமக்களுக்கும் இடையே ஆரம்பத்தில் நிலவிய நல்லுறவு தேய்ந்து குட்டிச்சுவராகியுள்ளதாகவும் அப்பகுதியில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தம்பு திருநாவுக்கரசு

அண்மையில் சில தாக்குதல்கள் படையினரின் கூற்றுப்படி, இராணுவக் காவலரண்களுக்குட்பட்ட பகுதியில் இருந்தே மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படுகிறது.

'பொது மக்களாகிய எம்மைப் பொறுத்தமட்டில் பொலிசாரும் இராணுவத்தினரும் தேடுதல்களையும் சோதனைகளையும் மேற்கொண்டு வருகிறார்கள். பாஸ் நடை முறையும் அமுலில் இருக்கிறது. இந்நிலைமையில் புலிகள் ஊடுருவுகிறார்கள் என்றால் எமக்குப் புதிராக இருக்கிறது.

அண்மைக்காலமாகப் பொலிஸ் சோதனை நிலையங்களில் பொலிசார் மேற்கொள்கின்ற கடும் போக்குகளும், ஆத்திரம் ஊட்டும் நடைமுறைகளும் வேதனை தருவதாகவே உள்ளன. இந்நிலைமை தொடருமானால் இப்பகுதிகளில் நாங்கள் தொடர்ந்து குடியிருப்பது பற்றி யோசிக்க வேண்டியேற்படும் என்று பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

புலிகளின் பிடியில் இருந்து தமிழ் மக்களை விடுவிப்பது இப்படித்தானோ?

## வெளியீடு

தமிழில் குழந்தை இலக்கியம் பற்றிய ஆய்வரங்கும்
"பாப்பா பாரதி" ஒளிப்பேழை வெளியீடும்
(அவுஸ்ரேலிய பாரதி பள்ளியின் தயாரிப்பு)

**01.02.1997 சனி மாலை 5க்கு**
**இராமகிருஷ்ன மிஷன்**
**கருத்தரங்கு மண்டபத்தில்**

பாரதி பள்ளியின் அதிபர் மாவை. நித்தியானந்தனும் கலந்து கொள்ளும் இவ்வைபவத்தில் சிறுவர் உளவியல், குழந்தை இலக்கியம் பற்றி அத்துறை சார்ந்தோர் கலந்துரையாடுவார்கள்

கருத்தரங்கு ஒழுங்கு
தேசிய கலை இலக்கியப் பேரவை

19 →

## திருமலைச்...

தலைமைப்பீடங்களிடம் சில வினாக்கள்:

அ) நகரசபை கட்டளைச்சட்டத்தை மீறி இரத்துச் செய்யும் அதிகாரம் கொடுத்த இணைப்பதிகாரி மேற்கோள்காட்டிய அவசரகாலச்சட்டத்திற்கு மாதாந்தம் வாக்களிக்கும் தங்களுக்கு இவ்விடயமாக எதிர்த்து அறிக்கை விட தார்மீக உரிமை உண்டா?

ஆ) இவ்வாறு, ஒரு அடிப்படைச் சேவையை வழங்கும் நிறுவனத்தை கட்டுப்படுத்தும் அளவிற்கு அதிகாரம் கொண்டதாக விளங்கும் அவசரகாலச் சட்டத்திற்கு அடுத்த நீடிப்பு பிரேரணை வேளையில் ஒட்டு மொத்தமாக இவ்விவகாரத்தைச் சுட்டிக்காட்டி எதிர்த்து வாக்களிப்பீர்களா?

இ) அரசாங்கம் அமுல் படுத்தும் அதிகாரப் பரவலாக்கத்தில் தங்களுக்கு இவ்விவகாரத்தின் பிற்பாடும் உளப்பூர்வ நம்பிக்கை உண்டா?

இறுதியாக மரக்கறிச் சந்தை விவகாரம் காரணமாக தமிழ் மக்கள் ஒட்டு மொத்தமாக இவ்வரசாங்கத்தின் அதிகாரப்பரவலாக்கம் தொடர்பாக சந்தேகம் கொள்ளும் அளவிற்கு வந்து விட்டனர். சகல நிர்வாக மட்டத்திலும் சிறுபான்மை மக்களுக்கு விரோதமாகவே செயற்படுகிறது அரசாங்கம். ஆக மரக்கறிச் சந்தை தொடர்பாக அரசாங்கம் மௌனம் கடைப் பிடித்ததன் மூலம் தன்னை தெளிவாக இனங்காட்டியுள்ளது.

***வை. ஜெயமுருகன்***
***திருகோணமலை.***

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

1997 01 21